விலை: ரூபா 25.00

# உதயன்

சுடர் 28 | கதிர் 110 | வள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 3 சனிக்கிழமை 16.03.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com



பக்கம் 8 தெரிவியுங்கள்





பக்கம் 9 ஈரானை அடக்கும் வல்லமையுண்டு





பக்கம் 17 இந்திய வம்சாவழியினர் புறக்கணிப்பு





பக்கம் 23 சாய்னா முன்னேற்றம்




# தமிழரைக் காக்க இடைக்கால அரசு

## வேண்டும் என்று கஜேந்திரகுமார் ஐ.நாவில் வலியுறுத்து

### போர்க்குற்ற விசாரணைக்கும் கோரிக்கை



ஜெனிவா, மார்ச் 16

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பேரழிவில் இருந்து அவர்களைக் காப்பாற்ற இடைக்கால அரசு ஒன்றை சர்வதேசத்தின் மேற்பார்வையுடன் வலியுறுத்த வேண்டும் என்று நேற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் வலியுறுத்தினார் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பருவகால மீளாய்வுக்கூட்டத்தில் அவர் நேற்று உரையாற்றினார். அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் வழியாக அவ

பார்க்க பக்கம் 04

## தமிழீழம் மலர புதிய இயக்கம்



### புலியாகப் பாய்கிறது தமிழகம்

சென்னை, மார்ச் 16

இலங்கையில் நீதி மறுக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களுக்குத் தனித் தமிழ் ஈழமே ஒரே தீர்வு என அடித்துரைத்து தமிழீழத்தை அமைக்க புதிய இயக்கம் ஒன்றை உருவாக்கி பாயும் புலியாகப் பொங்கியெழுந்துள்ளனர் தமிழக மாணவர்கள்.

'தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக்குழு' என்ற பெயரில் உதயமாகியுள்ள இந்த இயக்கமானது வெகுவிரைவில் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கவுள்ளது.

இதன்முதற்கட்ட நடவடிக்கையாக வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்தில் குதிக்குமாறு மேற்படி இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ஙு-சி)

## கொள்ளைக் கும்பல் காரைநகரில் கைவரிசை

காரைநகர், மார்ச் 16

காரைநகர் களபூமியில் 15 பேர் கொண்ட கொள்ளையர் குழு நேற்றிரவு அங்குள்ள வீடொன்றுக்குள் புகுந்து 8 பவுண் நகை, 45 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை சூறையாடிச் சென்றுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் காரைநகர் டிப்போவுக்கு முன்பாகவுள்ள சிவ

பார்க்க பக்கம் 04

## கண்ணீரில் நேற்று கரைந்தது ஜெனிவா திருமலை மாணவர்கள் படுகொலையால்

நீதி கோரி இராஜதந்திரிகள் முன் கண்ணீர் விட்டு கதறினார் ரஜீகரின் தந்தை

ஜெனிவா, மார்ச் 16

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான ஐந்து தமிழ் மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தை காசிப்பிள்ளை மனோகரன் நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் வருடாந்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது கண்ணீர் விட்டு அழுதமை சபையின் அனைத்து இராஜதந்திரிகளையும் கண் கலங்க வைத்தது.

அதேசமயம் துக்கம் தாளாமல், பேசமுடியவில்லை எனக் கூறி தனது உரையை பாதியில் நிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்து உரையை இடைநடுவில் நிறுத்திக் கொண்டார் படுகொலை செய்யப்பட்ட ரஜீகரின் தந்தை மனோகரன்.

நேற்றைய பூகோள மீளாய்வுக் கூட்டத்தொடரில் மனித உரிமைகள் அமை

பார்க்க பக்கம் 04

## விபத்தில் 'உதயன்' பணியாளர் காயம்



யாழ்ப்பாணம், மார்ச்.16

நாவற்குழிப் பாலத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 'உதயன்' பத்திரிகை விநியோகத்துக்குச் சென்ற இரண்டு பணியாளர்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்திய

பார்க்க பக்கம் 04

## 253 சிங்களவருக்கு கொக்கிளாயில் காணிகள் வழங்குமாறு அழுத்தம்

அரச அதிகாரிகள் திண்டாட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு கொக்கிளாயின் முகத்துவாரம் பகுதியில் குடியேறியுள்ள 253 சிங்களக் குடும்பங்களுக்கும் காணிகளை வழங்கி அவர்களுக்குரிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு அரச அதிகாரிகளுக்கு

பார்க்க பக்கம் 04

## மீண்டும் விவரங்கள் திரட்ட வலி.வடக்கு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

மீளக்குடியமராமல் உள்ள வலி.வடக்கு மக்கள் தொடர்பில், யாழ்.மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்கள் ஊடாக விவரங்கள் திரட்டும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். தற்போது திரட்டப்படும் விவரங்கள் உண்மையான எண்ணிக்கையாக இருக்காது என்று மீளக்குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

இது மீளக்குடியமர்வை இழுத்தடிப்பதற்கான முயற்சி என்றும் அவர் சாடியுள்ளார்.

வலி.வடக்கில் மீளக் குடியமர வேண்டிய மக்கள் தொடர்பில் தன்னிடம் விவ

பார்க்க பக்கம் 04

## ஜெனிவா குற்றச்சாட்டுகளால் படையினருக்குள் குழப்பம்

இராணுவத் தளபதியே கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 16

இலங்கை இராணுவம் மீது ஜெனிவாவில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்துப் படையினர் மிகுந்த குழப்பத்துக்குள்ளாகி இருப்பதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

இராணுவ ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கு எதிராக விசமனத்தனமான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து படையினர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

வன்னியில் மனிதாபிமான நடவடிக்கையை தீர்க்கமானமுடிவோடு முன்னெடுத்த எம்மீது ஒரு தலைப்பட்சமாக ஜெனிவாவில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது எம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. வன்னித் தளபதியாக நான் பணியாற்றிய காலத்தில் எனக்கோ அல்லது வேறு பிரிவுத் தளபதிகளுக்கோ இராணுவத்துக்கு எதிராகத் தற்போது குரல் எழுப்பிக் கொண்டிருப்பவர்களிடம் இருந்து எந்தவித முறைப்பாடும் கிடைத்திருக்க

பார்க்க பக்கம் 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறும் விடயத்தில் உறுதியாகவுள்ளது இலங்கை

## ஜெனிவாவில் சமரசிங்க உரை



பொறுப்புக்கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும் என அனைத்துலக சமூகம் வலியுறுத்திவரும் நிலையில், பொறுப்புகூறும் விடயத்தில் தாம் உறுதியாக இருக்கின்றனர் என்று அரசு நேற்று ஜெனிவாவில் அறிவித்தது.

அத்துடன், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றும், இதற்கென வரவு செலவு திட்டத்தில் சுமார் 1.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சரும், மனித உரிமைகள் தொடர்பான இலங்கை அரசின் விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் வருடாந்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு இலங்கையின் நிலவரங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி உரையாற்றிய அமைச்சர் சமரசிங்க மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த மீளாய்வுக் கூட்டத்தில் அளிக்கப்பட உறுதிமொழிகள் பலவற்றை இலங்கை அரசு ஏற்கனவே நிறைவேற்றியுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. வரவு - செலவு திட்டத்தில் இதற்காக 1.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம்,போரினால் பாதிக்கப்பட்ட சிவிலியன்களின் நலன் மேம்பாடு குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. உண்மையாக போரினால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய புதிய சனத்தொகைக் கணிப்பீடு ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. அது விரைவில் அறிவிக்கப்படும்.

அதேபோல் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பின் அது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவை ஆராய்ந்துள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது- என்றார்.

# திருத்தப்பட்ட பிரேரணையால் தமிழருக்கு நன்மை இல்லை!

### காலத்தை இழுத்தடிக்கும் செயல் என்கிறார் மனோ



இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை சில திருத்தங்களுடன் மென்போக்கான பிரேரணையாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொறுப்புக் கூறும் விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்காத பிரேரணையால் தமிழர்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தங்கள் எமக்கு ஓர் உதவியாகவே அமையும். சர்வதேச சமூகத்திடம் இதைவிட நாம் வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதை தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் அமெரிக்காவால் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

'இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறும் கடப்பாட்டையும் மேம்படுத்தல்' எனும் தலைப்பில் அமைந்துள்ள இந்தப் பிரேரணையின் நகல்வரைபு கடந்த 8ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உறுப்புநாடுகளிடம் அமெரிக்காவால் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி இந்தப் பிரேரணையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மென்போக்கான பிரேரணையாக அமெரிக்கா நேற்றுமுன்தினம் சமர்ப்பித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டபோதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இலங்கை அரசுடன் சமரசம் பேசித்தான் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது. பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்காத பிரேரணையால் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. இருப்பினும், இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படும் வரையில் நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

சுதந்திரம், மனித உரிமைகள் அடங்கிய எமது ஜனநாயக போராட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். எமது போராட்டங்கள் வலுவானதாக அமைய வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வருவதும், இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குவதும் சர்வதேசத்தால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் காலத்தை இழுத்தடிக்கும் செயல் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் - என்றார் மனோ.

# தனிப்பட்ட காரணத்துக்காகவே ஊடகவியலாளர் தாக்கப்பட்டிருக்கலாம்

### கூறுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணத்தில் இளம் ஊடகவியலாளர் உ.சாளின் தாக்கப்பட்டமை தனிப்பட்ட காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கிறோம். ஆனால் அது தொடர்பில் விசாரணை தொடர்கிறது. அது நிறைவடைந்த பின்னர் தான் உண்மையைக் கூற முடியும் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவர் தாக்கப்பட்டதை அடுத்து விசாரணை முன்னெடுத்துள்ளோம். அவர் தாக்கப்பட்ட இடத்துக்கு நேரடியாகச் சென்று அங்குள்ளவர்களிடம் விசாரணை மேற்கொண்டோம். ஆனால் அங்குள்ளவர்கள் ''அவ்வாறான சம்பவம் நடந்தது பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது'' என்று கூறுகின்றனர். பலரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளோம்.

விசாரணை நிறைவடைந்த பின்னர்தான் உண்மைநிலையைக் கூறமுடியும்-என்றார்.

(த-4)

### இனவெறித் தீயில் இரையான இளந்தளிர்கள்

# இலங்கைக்கு எதிராக மற்றொரு போர்க்குற்ற ஆதாரம் வெளியீடு

இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலக அரங்கில் வலுப்பெற்று வரும் நிலையில், புதிய போர்க்குற்ற ஆதாரங்களை வெளியிட்டுள்ள சனல் 4 தொலைக்காட்சி, இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் வரிசையில் உலகத் தமிழர் பேரவையும் தற்போது புதிய போர்க்குற்ற ஆதாரங்கள் அடங்கிய ஒளிநாடாவை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் உயிரோடு பிடிக்கப்பட்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஒளிப்படங்களை சனல் 4 வெளியிட்டு இலங்கைக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பாலச்சந்திரனை விடவும் வயதில் குறைந்த சிறுவன் ஒருவனை படையினர் இறுதிப் போரில் கொன்றனர் எனத் தெரிவித்து 'இனவெறித்தீயில் இரையான இளந்தளிர்கள்'' எனும் புதிய வீடியோக் காட்சியை உலகத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ளது.

அத்துடன், அந்த அமைப்பு சில புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளது. இந்த ஆதாரங்களில் ஆண்கள் சிலர், உள்ளாடைகளுடன் அமர்ந்துள்ளனர். அவர்களுடன் 15 வயதுக்குட்பட்ட சிறுவன் ஒருவனும் அமர வைக்கப்பட்டுள்ளான்.

இதை அடுத்து வரும் வீடியோ காட்சிகளில் இந்தச் சிறுவன் போலவே தோற்றமளிக்கும் ஒரு சிறுவன் கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சியும் வெளியாகியுள்ளது.

இந்த ஆதாரங்களை ஊடகங்களுக்கு உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன் என்பவரே வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தப் படங்கள் உண்மையானவையா அல்லது திரித்து வெளியிடப்பட்டவையா என்பதைத் தம்மால் கூறமுடியாது; ஏனென்றால் அதற்கான தொழில்நுட்பம் தமது அமைப்பிடம் இல்லை என அவர் இந்த ஆதாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதுபோன்ற சாட்சியங்களை விசாரிக்கவே ஒரு நம்பகமான, சுயாதீனமான, சர்வதேச விசாரணையை தாங்கள் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த ஆதாரத்தை வெளியிட்டவர்கள் இலங்கை இராணுவத்தினரே எனவும், அவர்களின் பெயரை, அவர்களது பாதுகாப்புக் கருதி தாங்கள் வெளியிட முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பான நிகழ்வுகள் நடக்கும் போதெல்லாம், மனித உரிமைகள் மீறல் பிரச்சினை தொடர்பாக அழுத்தம் கொடுக்க இப்படியான ஆதாரங்களை தவணை முறையில் வெளியிடுவதில் தவறு ஒன்றும் இல்லை.

மேலும், இந்தப் போரின் சாட்சியாகப் போர் நடந்த பகுதியில் மூன்று லட்சம் தமிழ் மக்கள் இருந்திருக்கிறார்கள், அவர்களில் பலர் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். ஒரு முறையான விசாரணை நடந்தால் போரில் என்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பது குறித்து அவர்கள் சாட்சிகளாக இருப்பார்கள் எனவும் சுரேன் கருத்து வெளியிட்டுள்ளார்.

# இலங்கைக்கு இனிமேலும் கால அவகாசம் வழங்காதீர்

### ஐ.நாவிடம் மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து

இலங்கையில் மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுவது தொடர்ந்து வரும் நிலையில், பொறுப்புக் கூறும் கடப்பாடு என்ற போர்வையில் இலங்கைக்கு கால அவகாசங்களை வழங்கிக் கொண்டிருப்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென சர்வதேச ரீதியாகச் செயற்படும் மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகள் நேற்று கோரிக்கை விடுத்தன.

ஐக்கிய நாடுகளின் பூகோள மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நேற்று தங்களது கருத்துக்களை முன்வைத்தபோதே இந்தக் கோரிக்கையை அந்த அமைப்புகள் முன்வைத்தன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைக் கண்காணிப்பகம், மனித உரிமைகளுக்கான ஆசிய பேரவை, யுனைட்டெட் நேசன்ஸ் வோட்ச், சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு, அக்சன் கனடா ஆகிய அமைப்புக்களே இவ்வாறு கோரிக்கை விடுத்தன.

கடந்த மீளாய்வுக் கூட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு உறுதிமொழிகளை வழங்கி இருந்தாலும் அதற்குப் பின்னர் இலங்கையில் ஊடகத்துறை மீதான தாக்குதல்களும் கருத்துச் சுதந்திர அடக்குமுறைகளும் தீவிரமாகியுள்ளன என குற்றஞ்சாட்டிய இந்த அமைப்புக்கள், ஜனநாயக விழுமியங்களை பேணுவதற்கான பொறிமுறை ஒன்றை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை உருவாக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி இலங்கை அரசு கூறுவது தவறானதென்றும், முக்கியமான விடயங்களின் உண்மைத்தன்மையை கண்டறிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போதுமானதல்ல என்றும் இந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டின.

இலங்கையின் உண்மை நிலைமை கண்டறியப்பட வேண்டியது அவசியம் என்பதால் விசேட பிரதிநிதி அங்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் இந்த அமைப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டின.

> நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி இலங்கை அரசு கூறுவது தவறு

# இந்தியாவின் ஆசியுடனேயே தமிழக மாணவர் போராட்டம்

### மேற்குலகு பின்னணி என்கிறது தேசப்பற்று இயக்கம்

இந்திய மத்திய அரசின் ஆசியுடனேயே தமிழக மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், இதன் பின்னணியில் மேற்குலகும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றது.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழக மாணவர்கள் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார கூறியவை வருமாறு:-

''ஜெனிவா தொடரில் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. இதற்காக பல வழிகளிலும் அந்த நாடு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கின்றது. தமிழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும் மத்திய அரசின் ஆசிர்வாதத்துடனேயே இடம்பெறுகின்றன.

போர்க் காலத்தில் கருணாநிதி மாத்திரமே உண்ணாவிரதம் இருந்தார். தற்போது மாணவர் சமூகமே களமிறங்கியுள்ளது. அதன் பின்னணியில் மேற்குலகமும் இருக்கின்றது'' - என்றார்.

# நவியின் அறிக்கைக்கு பிரேரணை வலுச்சேர்க்கும்

### கூட்டமைப்பு கருத்து

இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே அமெரிக்கா தனது பிரேரணையில் மென்போக்கு தன்மையைக் கடைப்பிடித்துள்ளது எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வுகளை விமர்சிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஏனெனில், இலங்கை அரச படைகளால் ஈழத்தமிழர்கள் அனுபவித்த கொடுமைகள் இன்று ஐ.நாவில் ஒலிப்பதற்கு அமெரிக்காவே முக்கிய காரணம் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஈழத் தமிழருக்கு நீதியையும் தீர்வையும் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு ஐ.நாவின் கைகளிலேயே உள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

இந்தப் பிரேரணை நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் கூட்டமைப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நல்லூர் தெற்கு ஜே/108 மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினதும் மகளிர் விவகாரக் குழுவினதும் மகளிர் தின விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு தியாகிகள் அறக்கொடை மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் லயன் சீமாட்டி திருமதி ஜெ.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மீனா செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக பிரதிச் செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் தெற்கு கிராம அலுவலர் திருமதி இராஜினி இராமலிங்கம், நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரன், மகளிர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி தயாபரி கிரிதரன் ஆகியோரும் கலந்துகொள்வர். மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ம-7)

★ ★ ★

யாழ்.மாவட்ட பெண்கள் சமாச மகளிர் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட பெண்கள் சமாசத்தின் தலைவி திருமதி ஈஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய பிரதேச முகாமையாளர் ச.கீர்த்திசீலன், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி சாந்தி சச்சியானந்தம், மாவட்ட உளசமூக இணைப்பாளர் கு.கௌதமன், பெண்கள் அபிவிருத்திக்கான மாவட்ட இணைப்பாளர் செல்வி ந. உதயணி, அதிபர் வ.மனோகரன், நிபுணத்துவ ஆலோசகர் திருமதி ரஜனி சந்திரசேகரம், இலங்கை மகளிர் அபிவிருத்திக் குழுவின் தலைவி திருமதி நளாயினி குகநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-7)

## பொன்னாலை வயல்களில் அறுவடை செய்ய முடியாத நிலை

சுழிபுரம், மார்ச் 16

பொன்னாலை குளத்தை அண்டிய பகுதி வயல்களில் அறுவடை செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

குறித்த பகுதி வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதி வயல்களில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ள போதும் பயனைப் பெற முடியாத நிலைமை உள்ளதும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-28)

# தீவுப் பகுதிக்கு அபிவிருத்தி இல்லையா?

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணப் பகுதிகளில் வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றன. பண்ணையில் இருந்து ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் வரையான வீதிகள் காப்பெற் வீதியாக மாற்றப்படும் வாய்ப்புகள் உள்ளனவா?

அபிவிருத்தி என்று பல இடங்களில் காப்பெற் போடப்படுகின்றது. தீவுப்பகுதிக்கு அபிவிருத்தி இல்லையா?

நேற்று நடைபெற்ற தீவுப்பகுதி தெற்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் வீதி அபிவிருத்தி அதிகார சபை திணைக்கள அதிகாரிகளிடம் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

**இதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்ததும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரிகள் தெரிவித்தனர்.**

தீவுப் பகுதி தெற்கு வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டீன் தலைமையில் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன. இதன்போது தீவுப்பகுதியின் முக்கிய வீதிகள் பண்ணை, ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் பகுதிகளுக்கான வீதிகளாகும்.

நீண்ட காலமாக நாங்கள் இந்த வீதியால் போக்குவரத்துச் செய்கின்றோம். அன்று இருந்த நிலையே இன்றும் உள்ளது. இந்த வீதிகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லையா?

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால், இதுவரை ஏன் வேலைகள் இடம்பெறவில்லை என்று கேட்டார் நாடாளுமன்ற உறுப்பினர்.

இதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்ததும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7)

# ஒரே நாளில் 6 சூறையாடல்கள்

## 13 லட்சத்து 32 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபேஸ்

*யாழ்ப்பாணம், மார்ச். 16*

*ஒரு நாளில் மாத்திரம் 6 இடங்களில் நகைகள் உட்பட 13 லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் இக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. கடந்த வாரத்தில் இவ்வாறு 11 இடங்களில் கொள்ளைகள் இடம்பெற்றுள்ள போதும் ஒரு நாளில் 6 கொள்ளைகள் இடம்பெற்றுள்ளமை அதிர்ச்சி தந்துள்ளது.*

22 லட்சத்து 48 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் மொத்தமாகக் சூறையாடப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 7 ஆம் திகதி மாத்திரம் 6 இடங்களில் 13 லட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அதிகளவாக உரும்பிராய் வீடு ஒன்றில் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியும் 2 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

கொடிகாமத்தில் வைத்து பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் இருந்து 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி சூறையாடப்பட்டுள்ளது.இது தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் பெண் ஒருவரிடம் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகர் மின்சார நிலைய வீதியில் 15 ஆயிரம் ரூபா பணம் பெண் ஒருவரிடமிருந்து கைப்பையுடன் அபேஸ் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் பஸ்ஸில் பயணித்தவரிடமிருந்து 8 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக குருநகரைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியும்.

அதேதினம் உரும்பிராயில் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 'நகைகளும் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. சுதுமலை வடக்கில் பகல்வேளை வீடு ஒன்றில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நுணாவிலில் வீடு ஒன்றில் இருந்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி சூறையாடப்பட்டது. மானிப்பாயில் கோயில் உண்டியலை உடைத்து 2 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி திருடப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி திருடப்பட்டுள்ளது.இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பன்னாலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 4 லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

# நிகழ்வுகள் இன்று

**கட்டடங்கள் திறப்பு**

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் புதிய கட்டடங்களுக்கான திறப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**தொழில் சந்தை**

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவு நடத்தும் தொழில் சந்தை நிகழ்வு காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிஸ்கோ பிரிவின் பொது பொதுமுகாமையாளர் ப.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் கலந்துகொள்வார். (ம-14)

**பொதுக்கூட்டம்**

உடுப்பிட்டி நாவலடி நாவலர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மாலை 6 மணிக்கு பாலர் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-8)

★★★

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சங்கத்தின் தலைவர் கா.பீதாம்பரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் என்.எஸ்.ஆர்.சிவரூபன், பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ் மாவட்டச் செயலர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (3-400)

# யாழ்.மாவட்டத்தில் கிணறுகள் கணக்கீடு

யாழ்ப்பாணம்,மார்ச் 16

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிணறுகள் கணக்கிடப்பட்டு வருகின்றன என்று தேசிய நீர்வழங்கல் வடிகால்அமைப்பு சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் பி.தபிந்திரகுமார் தெரிவித்தார்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் 3 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள கிணறுகள் கணக்கிடப்படுகின்றன. அத்துடன் அவற்றின் தரமும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2011ஆம்ஆண்டு ஜூன் மாதம் இந்தக் கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பமாகின. முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் கணக்கெடுப்புகள் ஆரம்பமாகின.

காரைநகரில் வீட்டுப் பாவனைக்காக தனிநபர் கிணறுகள் 2 ஆயிரத்து 387, பொதுக்கிணறுகள் 177, தோட்டக் கிணறுகள் 75, பிற தேவைகளுக்கான கிணறுகள் 67, பாவனை அற்ற கிணறுகள் 3 என்று 2ஆயிரத்து 709 கிணறுகள் உள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை கணக்கெடுப்புகள் இடம்பெற்றன. இதில் 2 ஆயிரத்து 273 கிணறுகள் கணக்கிடப்பட்டன.

இவற்றில் தனிநபர் கிணறுகள் ஆயிரத்து 542, பொதுக்கிணறுகள் 147, தோட்டக் கிணறுகள் 378, பிறதேவைகளுக்கான கிணறுகள் 59, பாவனையற்ற கிணறுகள் 147 உள்ளன.

வேலணைப் பிரதேசத்தில் தற்போது கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, மண்டைதீவுஆகிய பிரதேசத்தில் இதுவரையில் 8 ஆயிரத்து 206 கிணறுகள் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன. தொடர்ந்து இங்கு கணக்கெடுப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களும் பகுதி ஒன்று வேலைத்திட்டங்களாக நடைபெறுகின்றன.

பருவகாலத்துக்கு ஏற்றவாறு கிணற்று நீரின் சுவை, மணம், நிறம் என்பன மாறுபடுகின்றன. இவை பரிசோதிக்கப்பட்டு தரநிர்ணயம் செய்யப்படவுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-13)

## கைத்தொழிலாளருக்கு விசேட கடன் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களின் கைத்தொழில் அபிவிருத்திக்கான விசேட கடன் திட்டத்தை அரச ஈட்டு முதலீட்டு வங்கி மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான ஆலோசனைகள் மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் விரைவில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரச ஈட்டு முதலீட்டு வங்கி மேற்கொண்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் தொழில் அபிவிருத்திக்கு தேவையான நிதி முதலீடுகள் இல்லாத காரணத்தால், கைத்தொழில் முயற்சிகளை கைவிட்டுள்ளதுடன் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேட திட்டமாக கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரச முதலீட்டு வங்கி மேற்கொண்டு வருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனைக்கு அமைவாக விரைவில் அதனை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நிகழ்வுகள்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தெல்லிப்பழை பொலிஸ் நிலையமும் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் இணைந்து 'வடக்கு வானத்துக்கு வீசும் நாட்டின் தென்றல்' எனும் தலைப்பிலான இசை நிகழ்வையும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டத்தையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளன. இந்த நிகழ்வில் சிங்கள, தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.16

நெடுந்தீவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 34 தமிழக மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். 34 பேரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை மன்னாரில் கைதுசெய்யப்பட்ட 19 மீனவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்த தமிழக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். நெடுந்தீவுக் கடற் பிரதேசத்துக்கு அண்மையாக இவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, இலங்கைக் கடற்படையினர் அவர்களை நேற்று முன்தினம் காலை மடக்கிப்பிடித்திருந்தனர்.

படகுகளில் வந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 34 தமிழக மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரிடம் இந்திய வெளிவிவகார அமைச்சு, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மனிதாபிமானமாக நடத்துமாறும், உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நெடுந்தீவு கடற்பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் 34 பேரும் நேற்றுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்களின் கட்டுப்பாட்டிலேயே தங்க வைத்துள்ளதாகவும் இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

(த-5)

## புடைவை வியாபாரம் செய்த இந்தியத் தம்பதியர் கைது

வடமராட்சி, மார்ச்.16

வியாபார வீசா அனுமதியின்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய தம்பதியான கணவனையும் மனைவியையும் மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித் துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் மேலதிக விசாரணையை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார் .

சுற்றுலாப் பயணிக்கான வீசாவில் வந்து நெல்லியடிப் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி நண்பகல் புடைவை வியபாரத்தில் ஈடுபட்டதாக தமிழ்நாட்டு மதுரையைச் சேர்ந்த கருப்பையன் செட்டியார் பரமசிவம் ,அவரது மனைவியான நாகலட்சுமி ஆகியோரே கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட தம்பதியினர் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்ற மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தினார்கள். கைதுசெய்யப்பட்டவர்களிடம் சுற்றுலாப் பயணத்துக்கான வீசா இருந்தது.ஆனால் வியாபாரத்துக்கான வீசா இருக்கவில்லை. 36 சாறிகள், 69 சல்வார்கள் அவர்கள் வைத்திருந்தனர். இவர்களின் வியாபாரத்தினால் உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்படவதோடு அரசுக்குக் கிடைக்கும் வருமானமும் குறைந்து செல்கிறது என பொலிஸார் கூறினார்கள்.

இதனையடுத்து கணவன் மனைவி இருவரையும் மிரிஹன தடுப்பு முகாமில் தடுத்தும் அவர்களது கடவுச்சிட்டு புடைவைகளை நீதிமன்றில் பாதுகாப்பாக வைக்குமாறும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கும் போதோ அல்லது மிரிஹன தடுப்பு முகாமில்தடுத்துவைக்கும் போதும்கைவிலங்குகள் போடக் கூடாது என்றும் திறந்த மண்டபத்திலேயே அவர்களைத் தடுத்துவைக்க வேண்டும் என்றும் அதனை இந்தியத் துணைத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (த-8)

## கொள்ளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குமார் என்பவரது வீட்டில் நேற்று முன்னிரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

குறித்த வீட்டுக்குள் நேற்றிரவு உட்புகுந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்த பெண்மணியின் வாயில் துணியைத் திணித்து அவர் அணிந்திருந்த சங்கிலி,காப்பு என்பவற்றை அபகரித்ததுடன் வீட்டிலிருந்த 45 ஆயிரம் ரூபாவையும்கொள்ளையடித்துக் கொண்டு பறந்துவிட்டனர். இதனைத் தடுக்கச் சென்ற பெண்ணின் கணவரையும் கொள்ளைக் கும்பல் வாளால் வெட்டி காயப்படுத்தியுள்ளது.

இரண்டு ஆட்டோக்கள் ,இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச்சென்ற கொள்ளைக் கும்பலை துரத்திச்சென்ற பொதுமக்கள் வலந்தலைச்சந்தியில் வைத்து மடக்கிப்பிடித்து முறையாகக் கவனித்தபின் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை காயமடைந்த சிவலிங்கம் சிவகுமார், அவரின் மனைவி மனோரஞ்சிதம் ஆகியோர் சிகிச்சைக்காக காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(ந-400-250)

## மீண்டும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரங்கள் எதுவும் இல்லை என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முன்னர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்ற போதும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

இந்தநிலையில் யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையில், வலி.வடக்கில் மீளக்குடியமர வேண்டிய மக்கள் தொடர்பான விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த 2005ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக வலி.வடக்கில் மீளக் குடியமர வேண்டிய மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவுகளை மேற்கொண்டனர். பகிரங்கமாக விடுக்கப்பட்ட அறிவித்தல் ஊடாகவே இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் வெளியிடங்களில் உள்ளவர்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் யாழ்.மாசட்ட செயலகத்தால் தற்போது மேற்கொள்ளப்படும் மீளாய்வு நடவடிக்கைகள் வெளியிடங்களில் உள்ளவர்களுக்குத் தெரியாத காரணத்தால், அவர்கள் தமது பழைய பதிவை மீளாய்வு செய்யமுடியாத நிலையில் உள்ளனர். இதனால் அவர்களின் பெயர்கள் மீளக்குடியமர்த்த வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.

மேலும் இந்தப் பதிவு நடவடிக்கைகளின் போது சில பிரதேச செயலாளர் பிரிவில், கணி உறுதி உள்ளவர்கள் மாத்திரமே பதிவு செய்ய முடியும் என்றும் வெளிநாட்டில் உள்ளவர்களுக்காக இங்குள்ளவர்கள் பதிவு செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே தேவையில்லாத மீளாய்வு நடவடிக்கைகளை விடுத்து மக்களைச் சொந்த மண்ணில் குடியமர்த்துமாறு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் கேட்டுள்ளார்.

(த-5)

## ஜெனிவா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வில்லை. அந்தக் காலகட்டத்தில் இப்படியான முறைப்பாடுகள் படையினருக்கு எதிராகவோ அல்லது குறிப்பிட்ட களத் தளபதிகளுக்கு எதிராகவோ ஏன் செய்யப்படவில்லை என்பது சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியதாக உள்ளது.

இலங்கை இராணுவம் உலகின் மிகப் பயங்கரமான இயக்கம் ஒன்றை முழுமையாக அழித்துள்ளது பற்றி இவர்கள் பாராட்டு எதையும் தெரிவிக்க முன்வருகிறார்கள் இல்லை. இந்த முயற்சியில் ஏராளமான வீரர்கள் தம் உயிரிகளைப் பலிகொடுத்துள்ளனர்- என்றார். (த-ப)

## 253 சிங்கள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் , கருநாட்டுக் கேணி, ஆகிய பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1983 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு அதன் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தப்பகுதி மக்கள் மீளவும் குடியேறியுள்ளனர்.

இந்த நிலையில் ஆரம்பத்தில் அதாவது 1973 ஆம் ஆண்டு கொக்கிளாயின் முகத்துவாரம் பகுதியில் 23 வரையான சிங்களக் குடும்பங்களே தற்காலிகமாக வசித்துள்ளன. தற்போது 253 வரையான குடும்பங்கள் அத்துமீறித் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துக் குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஒரு துண்டுக் காணி கூட இல்லாத நிலையில் அத்துமீறிக் குடியேறியுள்ள 253 குடும்பங்களுக்கும் நிரந்தரக் காணிகளை வழங்கி அவர்களுக்குரிய வீட்டுத்திட்டம், வாழ்வாதார வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு சிங்களத் தலைவர்கள், அரசியல் வாதிகள் அதிகாரிகளை வற்புறுத்தி வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (த-6)

## கண்ணீரில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யம் ஒன்று மனோகரனுக்கு பேச வாய்ப்பை வழங்கி இருந்தது. அப்போதே கண்ணீருடன் உரையாற்றினார் அவர், சோகம் தாளாமல் அழுதவண்ணம் ஆற்றிய உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததுடன் இராஜதந்திரிகளுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அத்துடன், அங்கு இருந்த இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் பெரும் தர்மசங்கடத்தினை ஏற்படுத்தியது.

காசிப்பிள்ளை மனோகரன் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு:-

திருகோணமலையில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவரில் எனது மகன் ரஜீகரும் ஒருவர். ஐந்து மாணவர்கள் சார்பிலும் நான் நீதி கேட்கிறேன். மாணவர்கள் கொல்லப்பட்டு 7 வருடங்கள் சென்று விட்டன. ஆனால் இதுவரை நீதி இல்லை. (அழுகிறார்) சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபருக்கு விசாரணை நடத்தப் பணித்துள்ளதாக கூறப்பட்டது.

ஆனால், இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் இலங்கையில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது. மனதின் வலி, அழுத்தங்கள் எங்களை மேலும் வாட்டுகின்றன. இதனாற்றான் நீதி கேட்டு மனித உரிமைகள் சபையிடம் வந்துள்ளோம். (அழுகிறார்)

சர்வதேச ரீதியான விசாரணை தேவை. இலங்கை நீதிமன்றங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. என்னை மன்னியுங்கள்.

இவ்வாறு கூறியபடி கண்ணீருடன் உரையை நிறுத்தினார் மனோகரன்.

இந்த உரைக்குப் பின்னர் பதில் வழங்கிய அமைச்சர் சமரசிங்க, திருகோணமலை படுகொலை சம்பந்தமான விசாரணைகள் பெரும்பாலும் முடியும் தறுவாயில் உள்ளதாகவும், நீதித்துறை அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருமலை நகரத்தின் கடற்கரை வீதியில் வைத்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலை செய்யப்பட்ட இந்த மாணவர்களின் படுகொலை தொடர்பான புகைப்படங்களை பத்திரிகைக்கு வழங்கிய தமிழ் ஊடகவியலாளர் சுகிர்தராஜன் மாணவர்களின் படுகொலை நடைபெற்ற மூன்று வாரங்களில் திருமலை நகரப்பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனோகரன் ரஜிகர் (22.09.1985), யோகராஜா ஹெமச்சந்திரா (04.03.1985), லோகிதராஜா றோஹன் (07.04.1985), தங்கத்துரை சிவானந்தா (06.04.1985), சண்முகராஜா கஜேந்திரன் (16.09.1985) ஆகிய மாணவர்களே திருமலையில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் கொல்லப்பட்டனர்.

இந்த படுகொலைக்கு எதிராகப் போராடிய ரஜீகரின் தந்தை வைத்தியர் மனோகரன் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி பிரிட்டனில் தஞ்சமடைந்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

## விபத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

அளவெட்டியைச் சேர்ந்த எஸ்.தனராஜ் (வயது-24), பளையைச் சேர்ந்த எஸ்.பிரகாஷ் (வயது-21) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நோக்கி நேற்று அதிகாலை சென்றுகொண்டிருந்த 'உதயன்' பத்திரிகை விநியோக பணியாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் சாவகச்சேரிப் பகுதியில் பழுதடைந்து விட்டது. அதனால் அந்த விநியோகத்தை மேற்கொள்வதற்காக 'உதயன்' பணியாளர்கள் இருவர் அலுவலகத்தில் இருந்து 'பிக்கப்' ரக வாகனத்தில் சாவகச்சேரி நோக்கிப் புறப்பட்டனர்.

இவர்கள் பயணித்த வாகனம் நாவற்குழிப் பாலத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து சறுக்கியதால் பாலத்தின் சுவருடன் மோதியது. இதனால் வாகனத்தில் பயணம் செய்த இரண்டு பணியாளர்களும் படுகாயமடைந்தனர்.

பின்னர் அந்தவழியாக வந்த காரொன்றில் காயமடைந்த இருவரும் ஏற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(த-5)

## தமிழரை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ருக்கு இந்தச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அவரது உரையின் முழு வடிவம் இங்கு தரப்படுகிறது.

நாம் இந்த அவை நிறுவப்பட்ட காலத்தில் இருந்தே குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை ஒவ்வொரு நாடு தொடர்பாக நடைபெற்றுவரும் மனித உரிமை மீளாய்வு முறையைத் (Universal Periodic Review) தொடர்ந்து அவதானித்து வந்துள்ளோம். இப்பொழுது இரண்டாவது சுழற்சியில் இருக்கும் இச் செயன்முறையில், சில நாடுகள் முதல் சுழற்சியின்போது இந்த அவையால் செய்யப்பட்ட பரிந்துரைகளை முற்றாக நடைமுறைப் படுத்தாது விடுத்திருந்தமையை அவதானிக்கலாம் - குறிப்பாக இலங்கை இதற்கு நல்லதோர் உதாரணமாகின்றது.

இந்த மனித உரிமைகள் மீளாய்வு முறையானது வரலாற்று ரீதியாக சுதந்திரம், இனத்துவம், மொழி, காலாசாரம், என்பவற்றின் அடிப்படையில் தம்மை ஒரு தேசமாகக் கருதும் தமிழர்கள் போன்ற ஒரு மக்கள் கூட்டத்திற்கு தமது பிரச்சினைகள் பற்றி எடுத்தியம்புவதற்கான வாய்ப்பை வழங்குவதில்லை என்பதற்கு இலங்கை தொடர்பாக நடத்தப்பட்டு முடிந்த மனித உரிமைகள் மீளாய்வு நல்லதோர் உதாரணம்.

அவர்களுடைய உண்மையான பிரச்சினைகளும் விருப்புகளும் ஒரு தேசத்தை அழிக்கும் பிரச்சினையாகப் பார்க்கப்படாமல் வெறுமனே தனிநபர் மனித உரிமைகள் பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. இலங்கை தொடர்பான, கடந்த மனித உரிமைகள் மீளாய்வின்போது ஆஸ்த்திரியாவினால் முன்வைக்கப்பட்ட யோசனையில் ''தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்'' என்பதில் மட்டுமே 'தமிழர்கள்' பற்றிய குறிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது, தமிழர்கள் ஒரு பிரத்தியேகமான மக்கள் என்ற வகையிலும் அவர்களுக்குப் பிரத்தியேகமான பிரச்சினைகள் இருக்கின்றன என்ற வகையிலும் தமிழர்களது பெயர் தானும் இவ்விவாதத்தில் வேறெங்கும் குறிப்பிடப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது.

இந்த மனித உரிமை மீளாய்வானது எந்தளவிற்கு தமிழர்களை நீக்கி நடத்தப்படுகின்றது என்றால், [illegible] தமிழ் இன முரண்பா[illegible] அறியாதவர்கள் ''மீளிணக்கம்'' என்பதனுள் எந்தத் தரப்புகள் உள்ளடங்குகின்றன என்பதனைக்கூட அறியாதவர்களாகி விடுவார்கள்.

திட்டமிட்ட வகையில் தமிழர்களது தேசிய இருப்பை இல்லாமல் செய்வதற்கான முயற்சியே இலங்கையின் 26 வருடகால போருக்கான காரணமாகும். 'இலங்கை' என்பது உண்மையில் ''சிங்கள பௌத்த அரசு'' என்பதன் ஒரு குறியீட்டுப் பெயராக இருக்க, இலங்கை அரசு தாம் ''இலங்கையர்'' என்ற அடையாளத்தினை முன்னிறுத்தி வேலை செய்வதாகக் கூறும்போது நாம் அச்சமடைகின்றோம்.

இந்த வேளையில் நாம் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஒரு நிலைமாற்று கால நிர்வாகத்தை (Transitional Administration) - தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களது தாயகமான வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் பேரழிவில் இருந்து உடனடியாக பாதுகாக்கும் - நோக்கில் அமைக்குமாறு கோரி நிற்கின்றோம்.

இறுதியாக இலங்கை அரசாங்கமானது சர்வதேச மனிதாபிமானச் சட்டம் தொடர்பான மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாகச் செய்யப்பட்டுவரும் அனைத்து [illegible] பரிந்துரைகளையும் நிராகரித்து வருவதனால் ஒரு சுயாதீன, சர்வதேச விசாரணையை நாம் கோரி நிற்கின்றோம் - என்றார். (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
2229944, 5679933, 5679944
விளம்பரம்:021 5671111
விநியோகம்:021 5677222
தொலைநகல்
செய்தி:021 5678844,
விளம்பரம்:021 2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலகின் மனச்சாட்சியாக இருந்து திருச்சபைக்கு உயிரூட்டட்டும் பாப்பரசர்

புதிய பாப்பரசராக ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ தெரிவுசெய்யப்பட்டதை உலகெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தற்போது கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். உலகில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வருவதன் மூலம் உலகுவாழ் சகல இன,மத மக்களினதும் பெரும் மதிப்பைப் பெற்றவர்கள் பாப்பரசர்கள்.

பொருளாதார நெருக்கடிகள், போர்கள், இனமோதல்கள், அணு ஆயுத அச்சுறுத்தல்கள் உலகில் அதிகரித்து வருவதுடன் மத்திய கிழக்கு நாடுகளில் கிளர்ச்சிகள், அரசியல் அதிகாரப் போராட்டங்கள் நீடிக்கின்றன. இத்தகைய நிலையில் புதிய பாப்பரசர் சமாதானத்துக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டிய தேவை மிக அதிகமாக இருக்கும்.

1300 ஆண்டுகளுக்குப் பின் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது கறுப்பின ஜனாதிபதியைத் தெரிவுசெய்து சாதனை படைத்தனர் அமெரிக்க மக்கள். அதே வரிசையில் 23 நாடுகள் அங்கம் வகிக்கும் லத்தீன் அமெரிக்காவிலிருந்து முதலாவது பாப்பரசரைத் தெரிவுசெய்து வரலாறு படைத்துள்ளனர் கர்தினால்கள்.

புதிய பாப்பரசராகத் தெரிவாகியுள்ள முதலாம் பிரான்சிஸ் மூன்று வகைகளில் சிறப்புமிக்க பாப்பரசராகத் தடம் பதிக்கிறார். ஒன்று அவரது தாயகம், மற்றது அவர் சார்ந்திருக்கும் துறவற சபை, மூன்றாவது அவர் தேர்ந்தெடுத்துள்ள பெயர்.

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் அநேகமாக ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக இத்தாலியைச் சேர்ந்தவர்களே பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டு வந்தனர். அந்த வகையில், புதிய பாப்பரசர் ஐரோப்பியர் அல்லாதவராக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இம்முறை இருந்தது.

புதிய பாப்பரசர் ஆபிரிக்க நாட்டவராகவோ, ஆசிய நாட்டவராகவோ அல்லது இலத்தீன் அமெரிக்க நாட்டவராகவோ இருக்கவேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டது. புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறமுடியாதுபோய் நான்காவது சுற்றில் முற்றிலும் எவரும் எதிர்பாராத வகையில் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ தெரிவாகினார். முதலாம் பிரான்சிஸ் என்ற பெயருடன் பாப்பரசராகியுள்ளார்.

பிரான்சிஸ் அஸிஸியார் என்ற புனிதரின் பண்புகள் மிகவும் உயர்ந்தவை. ஏழைகளிடம் இரக்கம், எளிமை, தாழ்மை, கட்டுப்பாடு, திருச்சபையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவா போன்ற பண்புகளால் அணிசேர்க்கப்பட்டவர் புனித பிரான்சிஸ் அஸிஸியார்.

அப்புனிதரின் பெயரை முதல் தடவையாக சூட்டிக் கொண்டதன் மூலம் அவரின் அடிச்சுவட்டை புதிய பாப்பரசர் பின்பற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கத்தோலிக்க திருச்சபையின் குருக்களுக்கான துறவறச் சபைகளில் மிகவும் பெரிதான இயேசு சபையில் இருந்து வந்தவர் என்பதும், திருச்சபை வரலாற்றில் பிரான்சிஸ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்த முதலாவது பாப்பரசர் என்பதும் இவரது தெரிவில் உள்ள மற்றைய சிறப்பம்சங்களாகும்.

76 வயது நிரம்பிய புதிய பாப்பரசர் ஆர்ஜென்ரீனாவின் தலைநகரான புவெஸ் அயர்ஸ் தேவாலய பேராயராக இருந்து 2001இல் கர்தினாலாகப் பதவி உயர்த்தப்பட்டவர். மிகவும் எளிமையானவர்; தீவிரத் தன்மையற்ற ஒரு மிதவாதி. இவரைப் போன்ற ஒருவரையே கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரிதும் எதிர்பார்த்தனர்.

இன்றைய உலகின் தீவிரமான, புதுமையான மாற்றங்களுக்கு மத்தியில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய ஒருவர் பாப்பரசராக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெரியளவில் இருந்தது. கருக்கலைப்பு, கருணைக்கொலை, ஒருபால் திருமணம், குளோனிங் போன்றவை கத்தோலிக்க திருச்சபைக்குப் பெரும் சவாலாக இருந்து வருகின்றன. இந்த விடயங்களில் கத்தோலிக்க திருச்சபை அன்று தொடக்கம் இன்றுவரை எதிர்ப்புகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் மிகவும் உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறது.

இன்றைய உலக ஓட்டத்துக்கு ஏற்ப ஒத்து ஓடுகின்ற ஒருவராக அல்லாமல் திருச்சபையின் அடிப்படைக் கொள்கைகளைத் தக்கவைக்கக்கூடிய ஒருவராகவும், உலகின் மனச்சாட்சியாக இருந்து அநீதிகள், அடக்குமுறைகளுக்கெதிராக உரத்துக் குரல் கொடுக்கக்கூடிய ஒருவராகவும் புதிய பாப்பரசர் திகழுவார் என்று எதிர்பார்க்கலாம்.

உலகெங்கணும் வாழும் கத்தோலிக்க மக்களின் திருச்சபை, திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட ஒரு மேசைபோன்றதல்ல, அது வாழும் உண்மை. உலகில் வாழும் உயிர்களைப் போன்றே திருச்சபையும் வளர்ந்து வருகின்றது- என்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் கூறியிருந்தார்.

அவருக்கு அடுத்துப் பதவியேற்கும் புதிய பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் திருத்தந்தையும் திருச்சபைக்கு மேலும் உயிரூட்டுவார் என்று கத்தோலிக்க மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# காணிப் பிரச்சினையைத் தீர்க்க புதிதாக ஒரு சுற்றறிக்கை

## ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜயசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

காணிப்பிரச்சினை இங்கு மட்டுமல்ல இலங்கை முழுவதுமே உள்ளது. இதற்கென புதிய சுற்றறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

விரைவில் காணிப்பிரச்சினை தீர்ப்பதற்கு இந்தச் சுற்றறிக்கை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவ விஜயசிங்க இவ்வாறு கூறினார்.

நேற்றுமுன்தினம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முரண்பாடுகளைத் தீர்த்தல் என்பது தொடர்பான கலந்துரையாடலில் மக்களின் காணிப்பிரச்சினைகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

காணிகள் குறித்து மக்கள் சபை ஒன்று நிறுவி ஆராயப்பட்டு அதனூடாக காணிப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும்.

எனவே இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம அலுவலர்கள் மற்றும் பட்டதாரிகள் தெரிவித்தனர்.

இதன் போது புதிய சுற்றறிக்கை குறித்து சுட்டிக் காட்டப்பட்டது.

விரைவில் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காணி உறுதிகள் வழங்கப்படாமையால் பெரும்பாலான மக்கள் வீட்டுத் திட்டம் உட்பட பல்வேறு உதவிகளையும் பெற முடியாத நிலையில் உள்ளனர் என்றும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது. (ம-7)

# வடமாகாண இளைஞருக்கு இலவச கணினிப் பயிற்சிகள்

## 100 பேரைத் தெரிவு செய்து வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

அரசு, ஈ.கொம், கணினிப் பயிற்சி நிலையத்துடன் இணைந்து வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நூறு இளைஞர் யுவதிகளுக்கு இலவச கணினிக் கற்கை நெறியை வழங்கவுள்ளது.

இது தொடர்பான புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் வடமாகாணம் முழுவதிலும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முதல் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

16 வயதைப் பூர்த்தி செய்த மாணவராகவும், சாதாரணதர, உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது பெறுபேற்றுக்காக காத்திருப்பவர்கள். பெறுபேறு போதாதிருப்பவர்கள், பாடசாலையில் இருந்து இடைவிலகிக் கொண்டவர்கள் இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள முடியும்.

பயிற்சி நெறிகள் பதினைந்து தினங்கள் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை இடம்பெறும். இக் கற்கை நெறிக்கு எவ்வித கட்டணமும் மாணவர்கள் செலுத்தவேண்டியதில்லை.

புத்தகங்கள், பாடக்குறிப்புகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுவதுடன் அரச அங்கீகாரத்துடனான சான்றிதழ்களும் கற்கை நெறி முடிவில் வழங்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் ,தொழில்நுட்பக் கல்லூரி உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியாது.

இந்தப் பயிச்சி நெறியில் இணைய விரும்பும் மாணவர்கள் 95, ஏ, கோவில் வீதி, நல்லூர்,மற்றும் கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் ஆகிய இடங்களில் உள்ள ஈ.கொம் கணினிப் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

# முரண்பாடு தீர்க்கும் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் 'முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் முகமாக சமூகத்தைத் திரட்டுதல்' என்னும் பொருளிலான செயலமர்வை இந்த மாதத்தில் நடத்தி வருகின்றது.

செயலமர்வில் பிரதேசத்தில் உள்ள சமூக மட்ட குழுக்களின் பிரதிநிதிகள் 25 பேரைக் கூட்டத்தில் பங்குபற்றச் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, மருதங்கேணி, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களில் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்த 25 பேருக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# சிறைக் கைதிகளை நல்வழிப்படுத்த ஒரு கோடி ரூபாவில் பாடசாலை

## சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 16

சிறைக் கைதிகளை நல்வழிப்படுத்தும் நோக்குடன் சிறைக் கைதிகளுக்கென பாடசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஒரு கோடி 90 இலட்சம் ரூபா செலவில் வட்டரெக்க பிரதேசத்தில் இதற்கான பாடசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதற்கென கல்வி அமைச்சுடன் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது ஆண்டு ஒன்றுக்கு சிறைச்சாலைகளுக்கு வரும் 26 ஆயிரம் பேர் என்ற எண்ணிக்கையை 2014 ஆம் ஆண்டளவில் 15 ஆயிரம் வரையில் குறைத்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்கு வருவோரில் நாற்பத்து மூன்று வீதமானோர் அடிப்படைக் கல்வி அறிவைக் கொண்டிராதவர்களாகவே உள்ளனர்.

சிறைச்சாலைகளுக்கு வரும் அனைவருக்கும் மனிதாபிமானத்துடன் கரிசனை செலுத்தி சிறைச்சாலைகளுக்கான பாடசாலையை ஆரம்பிப்பதன் மூலம் சிறைச்சாலைகளுக்கு வருவோர் கல்வியைப் பெற முடியும்.

அதன் மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-22)

# ஊழியர் சேமலாப நிதியில் 75 வீதம் வீடமைப்புக் கடனாகக் கிடைக்கும்

## அரச முதலீட்டு வங்கி வழங்க நடவடிக்கை

ஊழியர் சேமலாப நீதியில் 75 வீதத்தை வீடமைப்புக் கடனுக்காக அரச முதலீட்டு வங்கி வழங்கி வருகின்றது என்று அரச முதலீட்டு வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் கே.நடராஜமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் உடைய பணியாளர்களின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 75 வீதத்தை வீடமைப்புக் கடனுக்காக வழங்க அரச முதலீட்டு வங்கி முன்வந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர் சேமலாபநிதியம் உடைய பணியாளர்களுக்கு இது தொடர்பான விவரம் தெரியாது. இதன் காரணமாக பலர் வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பிப்பது இல்லை.

தற்போது யாழ்ப்பாணத்துக்கான சேவையை அரச முதலீட்டு வங்கி இல.127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகிறது.

வீடமைப்புக்கடன் தொடர்பான மேலதிக விவரங்களை வங்கியிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.- எனவும் தெரிவித்தார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேசத்தில் 'கோர்கிள்' பயிர்ச் செய்கை

கிளிநொச்சி, மார்ச் 16

''வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென முதல் தடவையாக 'கோர்கிள்' பயிர்ச் செய்கை இந்த வருடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.''

கோர்கிள் பயிர்ச் செய்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 444 குடும்பங்களுக்கும் இலங்கை மத்திய வங்கி வறுமை ஒழிப்பு நுண்பாகக் கடன் திட்டத்தின் கீழ் உதவிகளை வழங்கி வருகின்றது. ஹேலீஸ் நிறுவனம் விதைகள், பசளை, கிருமிநாசினி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை இலவசமாக வழங்கி வருகின்றது.

இந்தத் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நுண்பாகக் கடன் திட்ட ஆலோசகரும் கடன் குழுத் தலைவருமான ஆர்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

வடபகுதியில் முதல்தடவையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள 'கோர்கிள்' பயிர்ச் செய்கை தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இந்தப் பயிர்ச் செய்கை முதல் தடவையாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் உடனடியாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை, பனிக்கன்குளம் பிரதேசத்தில் இருந்தும், கிளிநொச்சி மாவட்டத்தில் விசுவமடு பிரதேசத்தில் இருந்தும், வவுனியா மாவட்டத்தில் பெரியமடு, தரணிக்குளம் பிரதேசத்தில் இருந்தும் மொத்தமாக 444 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கோர்கிள் பூசணிக் குடும்பத்தைச் சேர்ந்த பணப் பயிராகும். பயிர்ச் செய்கைக் காலம் இரண்டு மாதங்களாகும். 28 தொடக்கம் 30 தினங்களில் காய்களை அறுவடை செய்யலாம். தினசரி காய்களை அறுவடை செய்யவேண்டும். குறைந்தது ஒரு மாத காலம் உச்ச விளைச்சலைப் பெறமுடியும்.

அறுவடை செய்யப்படும் காய்கள் கிலோ ஒன்று 58 ரூபா வீதம் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும்.

கோர்கிள் காய்கள் சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கு உள்ள உணவகங்களில் உயர் தர உணவுகளுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் உள்நாட்டில் இவை பயன்படுத்தப்படுவதில்லை. உற்பத்திச் செலவில் ஐந்து மடங்கு தொகையைக் குறுகிய காலத்தில் வருமானமாகப் பெறமுடி யும்.

ஒவ்வொரு பயனாளிக்கும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாக கால் ஏக்கர் பயிர்ச் செய்கைக்கு உதவிகள் வழங்கப்படுவதோடு அவர்களது உற்பத்திகளை வதிவிடத்துக்கு அண்மையில் வைத்துக் கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தினசரி காலை, மாலை வேளைகளில் கோர்கிள் காய்களை அறுவடை செய்ய முடியும். இந்த வகையில் பெண்கள் ஆர்வத்தோடு இந்தச். செய்கையில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் கோர்கிள் பயிர்ச் செய்கை முழுமையாக பயன் தரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-11)

### வவுனியாவில் சுயதொழில் கொடுப்பனவு

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என இரு கட்டங்களாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், கொடுப்பனவுகளுக்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனைத் தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். (க-எ)

## விபத்தில் மூவர் காயம்




வவுனியா ஏ - 9 வீதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறையிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸும் ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனமுமே நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் இரு வாகனங்களின் சாரதிகள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

டிப்பர் ரக வாகனத்தின் சாரதி தூக்கமயக்கத்தில் இருந்ததன் காரணமாக இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாமெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த மூவரும் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது. (க-எ)

## புத்துவெட்டுவான் பாடசாலையை தரமுயர்த்துமாறு வேண்டுகோள்

அக்கராயன், மார்ச் 16

புத்துவெட்டுவான் அ.த.க. ஆரம்பப் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுவொரு ஆரம்பப் பாடசாலையாக உள்ளதால் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்களில் மட்டுமே இங்குள்ள மாணவர்கள் கல்வி பயில முடிகின்றது. இவர்கள் தமது இடைநிலைக் கல்வியைக் கற்பதாயின் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள திருமுறிகண்டிக்கும், 4கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஐயன்கன்குளத்துக்கும் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆனால் புத்துவெட்டுவான் கிராமத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இந்த மாணவர்கள் அதிக சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே தமது பாடசாலையை ஆரம்பப் பாடசாலை என்ற நிலையிலிருந்து இடைநிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1956 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் போக்குவரத்து, மின்சாரம் போன்ற வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் கல்வியைப் பெறுவதிலும் மாணவர்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

ஆகவே தமது பிள்ளைகள் இடைநிலைக் கல்வியைப் பெறும் வகையில் இந்தப் பாடசாலையைத் தரமுயர்த்தும் பொருட்டு வலயக் கல்விப் பணிமனையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

## இரண்டு நிகழ்வுகள்

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் இறுதிநாள் விளையாட்டு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல், வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க, 571 ஆவது படையணியைச் சேர்ந்த கேணல் அமரதுங்க ஆகியோரும் கலந்து கொள்வர். (க-9)

## புண்ணிய கிராமம்

முழங்காவில் கிருஷ்ணன் ஆலயத்தில் 'புண்ணிய கிராமம்' நிகழ்ச்சித் திட்டம் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை ஆலய பரிபாலன சபைத் தலைவர் இ.குகேந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

பிரார்த்தனைகள், சொற்பொழிவுகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும், கிருஷ்ணா கலாமன்றத்தினரின் குறும் திரைப்பட வெளியீடும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)


### மணமகள் தேவை

*83இல் பிறந்த, 8இல் செவ்வாய், 18¼ பாவமுடைய, M.Sc. Engineer இக்கு சிங்கப்பூரில் வேலை புரிபவருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*83 இல் பிறந்த, 12இல் செவ்வாய், 46 பாவ முடைய ஆசிரியருக்கு படித்த அழகான மணமகள் தேவை.

*82இல் பிறந்த 12 இல் செவ்வாய்,36 பாவமுடைய M.Sc. Engineer இக்கு பட்டதாரி மணமகள் தேவை.

*79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 55¾ பாவமுடைய M.Sc. Engineer UK பிரஜா உரிமை பெற்று பணிபுரிகின்றார். படித்த மணமகள் தேவை.

*80 இல் பிறந்த 2இல் செவ்வாய் 28½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.(சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது)

தொ.ந.கமலக்கண்ணன் திருமண சேவை
இல.135/3,கோயில் வீதி, நல்லூர்.
(34383)(5-6-7) தொ.பே.: 077 607 0862

### வாடகைக்கு

Multimedia Projector & Water pump குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும்.
(நாள், கிழமை, மாதம்)
தொடர்புகளுக்கு
021 5670350/ 0773296407
(திங்கள் - சனி 8.00 - 6.00 வரை)
(34500)(6.7.2)

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் English Convent முன்பாக 3அறைகள் குளியலறை உட்பட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(இந்துக்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 6100365
(27889)(5-6-7)

### காணி விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் 5பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு.
நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 075 510 9327
(34774)(5.6.7)

மணிவிழாக் காணும் பிரதி அதிபர்
திருமதி செல்வராணி ஜெகநாதன் அவர்களை
எனது குடும்ப சகிதம் பாராட்டி வாழ்த்துகிறேன்



1989 ஆம் ஆண்டு தொடக்கம் நல் ஆசிரியையாகவும், பகுதித் தலைவராகவும், 01.09.2000 தொடக்கம் பிரதி அதிபராகவும் கடமையாற்றி வடமராட்சி மண்ணில் இடம்பெயர்ந்து பாடசாலையை நடத்திய காலத்திலும் மீசாலையில் இடம்பெயர்ந்து பாடசாலை இயங்கிய காலத்திலும், ஒட்டுமொத்தமாக போர்க் கால சூழ்நிலையிலும் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் பல்வேறு வகையிலும் செழிப்புற்று பிரபல பாடசாலைகளில் ஒன்றாகச் சிறப்படையவும் எனது அதிபர் பதவி சிறப்புறவும் எல்லா வகையிலும் எனது நிர்வாகத்திற்குப் பக்கபலமாகக் கைகொடுத்துதவி 13.03.2013 இல் மணிவிழாக்காணும் பிரதி அதிபர்

திருமதி
செல்வராணி ஜெகநாதன்
அவர்களை ஓய்வு காலத்தில் தேகாரோக்கியம் உடையவராகப் பல்வேறு சிறப்புக்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வாழ வேண்டுமென இறையருளை வேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

வாழ்த்துபவர்:- தம்பு கந்தையா
முன்னாள் அதிபர், கச்சாய் வீதி, கொடிகாமம். (84579)(2-6-7)

### மக்கள் வங்கி அறிவித்தல்

நகை அடகு ஏலவிற்பனை

மக்கள் வங்கியினால் இன்று 16.03.2013, நாளை 17.03.2013 ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த நகை அடகு ஏலவிற்பனை 21.03.2013 (வியாழக்கிழமை) மற்றும் 22.03.2013 (வெள்ளிக்கிழமை) ஆகிய திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், யாழ்ப்பாணம்.
(சி/7477)(6.7.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த போக செய்கைக்கு விதை உருளை மானியம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு அடுத்த போக உருளைக்கிழங்குச் செய்கைக்கு மானிய அடிப்படையில் விதை உருளைக் கிழங்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றை விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்க பிரதேச மட்டத்தில் செய்கையாளரை உள்ளடக்கிய அமைப்புகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள் ளன.

> விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்க பிரதேச மட்டத்தில் செய்கையாளரை உள்ளடக்கிய அமைப்புகள் அங்குரார்ப்பணம்

புத்தூர், உரும்பிராய், உடுவில், தெல்லிப்பழை போன்ற விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அடுத்த போகத்தில் குடாநாட்டில் உருளைக் கிழங்குச் செய்கையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடனும், அதற்குத் தேவையான உதவிகளை அமைச்சிடம் இருந்து பெற்றுக் கொள்ள வசதியாகவும், இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு உருளைக்கிழங்குச் செய்கைக்கு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விவசாய அமைச்சு உருளைக் கிழங்கை வழங்கியிருந்தது.

அதன் பின்னர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளை கிழங்கு மானிய அடிப்படையில் விநி யோகிக்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# வான் தோண்டும் பணிகள் விரைவில்

வடமராட்சி, மார்ச் 16

வடமராட்சி கடற்பிரதேசத்தில் தொண்டைமானாறு தும்பளை வரையான பகுதிகளில் வான் தோண்டும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் தொழிலுக்காக வள்ளங்களை கடலுக்குள் கொண்டு செல்லவும், தொழில் முடிவுற்றதும் கரையில் வள்ளங்களை ஏற்றவும் வசதியாகவே இந்த வான்கள் தோண்டப்படவுள்ளன.

கடந்தகாலங்களில் தோண்டப்பட்ட 33 வான்களும் தூர்ந்து போயுள்ளன. இதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

வான் தோண்டுவதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சமாசம் தெரிவித்துள்ளது. (ம-8)

# மின் பிறப்பாக்கியால் ஆபத்து ஏற்படும் என அச்சம்

## அகற்றக் கோருகின்றனர் கொக்குவில் சி.சி. மாணவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 16

கொக்குவில் சி.சி.பாடசாலை வளாகத்தில் உள்ள மின்பிறப்பாக்கியால் அச்சநிலை தோன்றியுள்ளது.

எந்த நேரத்திலும் மாணவர்கள் இதனால் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று பாடசாலைச் சமூகம் அச்சமடைந்துள்ளது.

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இந்த மின்பிறப்பாக்கியை அகற்ற கடந்த மூன்று வருடங்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

எனினும் அது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## புதிய வெளியீடுகள்

மாதாந்த கல்விச் சஞ்சிகை
"இமாசி" - வெளியீடு
★ பாலர் வகுப்பு முதல் - தரம் 5 வரையானது
ஒரு புத்தகம் எடுத்தால் ஒரு புத்தகம் Free
மாதாந்தம் தொடர்ந்து வரும்
விலை - 50/= (கலர் பிறின்ட்)
ஒமேகா வெளியீடு
தரம் - 2 முதல் 5 வரையானது. விரைவாக கணிதம்.
குறிப்பு:- இவை இரண்டு வெளியீடும்
யாழ்.நகருக்கு வருவது இதுவே முதல் தடவை
யாழ்.நகரில் அன்னை புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம். 222 9881
(தி/7485)2-6-7)



## கண்ணீர் அஞ்சலி



திருமதி கலாவல்லி
ஆறுமுகதாசன்
07.03.2013 வியாழக்கிழமை
சிவபதமெய்திய வீமன்காமம்
மகாவித்தியாலய முன்னாள்
அதிபரும் பாடசாலை ஸ்தாபகரின்
மகளும் ஆகிய
திருமதி கலாவல்லி ஆறுமுகதாசனுக்கு
அவரின் நிர்வாகத் திறமையால் உயர்ந்த மாணவர்களின்
கண்ணீர் அஞ்சலிகள். அவரின் மறைவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்கள்.


## மரவள்ளி தெற்குக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும் அளவிலான மரவள்ளிக் கிழங்கு தெற்குக்குக் கொண்டு செல்லப்படுவதால் அதற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தம்புள்ள பகுதிகளில் இருந்து வருகை தரும் விவசாயிகள் விவசாயிகளது தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மரவள்ளிக் கிழங்கைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அது தவிர குடாநாட்டுச் சந்தைகளில் மரவள்ளிக் கிழங்கைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இதேவேளை கிலொவொன்று 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த மரவள்ளிக் கிழங்கின் விலை 50 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. (ம-17)

# எழுதுமட்டுவாழ் தெற்கில் தற்காலிக கிளைக் கட்டடம்

தென்மராட்சி, மார்ச் 16

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவுக்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கிளைக் கட்டடம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கில் எட்டு மாதங்களுக்கு முன்னர் மீள் குடியமர்வு இடம்பெற்று சுமார் 280 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் சங்கத்தின் கிளைக் கடை இல்லாததால் மக்களுக்கான நிவாரணம், உப உணவுப் பொருள்கள் உட்பட பல்வேறு தேவைகளுக்கு மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள கிளைக் கடைக்கு பல சிரமங்களின் மத்தியில் சென்று வருவதைச் சுட்டிக் காட்டி சங்க நிர்வாகத்துக்கு முறையிடப்பட்டது. • இதனை அடுத்து எழுதுமட்டுவாழ் சந்திக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கிளைக் கட்டடம் எதிர்வரும் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## இளைஞர் கழகங்களிடையே இந்த வருட போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 16

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தினால் சாவகச்சேரி பிரதேச இளைஞர் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இந்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள இளைஞர் கழகங்களை நாளையும் நாளை மறுதினமும் கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் அமைந்துள்ள சம்மேளன அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பதிவு செய்யாத கழகங்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# அடிப்படை வசதிகள் இன்றி எழுதுமட்டுவாழ் முன்பள்ளி

தென்மராட்சி, மார்ச் 16

எழுதுமட்டுவாழ் தெற்கில் இயங்கும் முன்பள்ளி அடிப்படை வசதிகளற்றநிலையில் செயற்பட்டு வருகிறது.

கடந்த வருடம் இந்தப் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து அங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தின் ஒரு பகுதியில் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 20 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை முன்பள்ளிக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டார்.

அப்போது மாணவர்கள் பாயில் அமர்ந்திருந்ததையும் ஆசிரியை மேசை கதிரையின்றி நின்றபடி கல்வி போதித்ததையும் கண்டார்.

ஆசிரியையுடன் கலந்துரையாடியதை அடுத்து முன்பள்ளியின் தேவைகள் குறித்து எழுத்து மூலம் ஆசிரியை கோரிக்கை முன்வைத்தார்.

முன்பள்ளிக்குத் தேவையானவற்றை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதேச சபை உறுப்பினர் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)


## விற்பனைக்கு

பழைய கதவு, யன்னல், நிலை, பனைமரம் தீராந்தி (பாலை), ஓடுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0778737384
(31595)2-6-7)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம்,ஸ்ரான்லி வீதி,
சிறாம்பியடி லேனில் சகல
வசதிகளுடன் கூடிய இரண்டு
மாடிக் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 606 2842
(31590)(5-6-7)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அல்சேசன், பொமேரியன், டாஸ்
Seven நாய்க்குட்டிகளும்,
அல்சேசன் நாய்களும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771016407,
இல.06, மதவடி ஒங்கை, திருநெல்வேலி.
(34584)2-6-7)



QP மூலம்
சவுதி அரேபியாவுக்கு
பலதியா
சுத்திகரிப்பாளர்கள்
உடனடி வேலைவாய்ப்பு
இலங்கையிலிருந்து பயணிக்க
பணம்தேவையில்லை
சம்பளம் - SR 650/- (1 SR = Rs.35/-)
பயணத்திற்கான செலவு மாத சம்பளத்திலிருந்து அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா. 38,500/- அறவிடப்படும்.
AL/1316 Advt:/04/13

Terms & Conditions:
- தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் இலவசம்
- ஒப்பந்த காலம் 3 வருடம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்தில் 48 மணித்தியால வேலை
- 2 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்து நாடுதிரும்பும்போது விமான டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபிய சட்டத்திற்கு உட்பட்டது.

பாஸ்போட், 8 பாஸ்போட் அளவு போட்டோக்களுடன் உடன் நேரல் வரவும்.

தொடர்புகளுக்கு: 0112681515
(தி/7021)2-6-7)

QP Employment (pvt) Ltd,
No.06, Campbell Terrace, Punchi Borella,Colombo -10.
Tel: 0112 681212, 2684433, 2681515. e-mail: admin@qpjobsonline.con

### மீனவர் மீது தொடரும் தாக்குதல்

# இலங்கைத் தூதரை அழைத்து கடும் கண்டனம் தெரிவியுங்கள்

## மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை, மார்ச்.16

தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் மேற் கொள்வது தொடர்பில் இலங்கைத் தூதரை அழைத்து கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்குக் குக் கடித மூலம் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இராமேஸ்வரம் மீன்பிடித் தளத்தில் இருந்து 9 இயந்திர படகுகளில் 53 மீனவர்கள் கடந்த 13 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்றனர். அவர்களைக் கைது செய்த இலங்கைக் கடற்படை, தலை மன்னார் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

குறுகிய தூரமுடைய பாக்கு நீரிணைப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இந்தச் சூழலில், பாக்கு நீரிணை பகுதியில் தமிழக அர சையோ அல்லது தமிழக மீனவர்களையோ கலந்தாலோசிக்காமல் இலங்கை அரசே தன்னிச்சையாக சர்வதேச எல்லைக்கோட்டை வகுத்துள்ளது.


இரு நாடுகளுக்கும் இடையிலான மீன்பிடி பிரச்சினைகளில், ஒரு நாட்டைச் சேர்ந்த மீனவர்களைத் தாக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்தியும் அவர்களை குற்றவாளிகள் போன்று நடத்துவதும் கைது செய்வதும் தீர்வாக அமையாது என்ற எனது கருத்தை தாங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

இந்திய மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன் பிடிப்பகுதிகளில் மீன்பிடிக் கும்போது அவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், கைது செய்வதும் அண்மைக் காலங்களில் தொடர்கதையாகி வருவது கவலை அளிப்பதாக உள்ளது. கச்சதீவு பகுதியில் தன்னிச்சையாக சர்வதேச எல்லைக் கோட்டை இலங்கை அரசு வகுத்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்துக்காக மீன் பிடித் தொழிலை மேற் கொண்டு வருகின்றனர். அவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்படும் போது அதற்கு மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், தாங்கள் மௌனம் சாதிப்பது தமிழக மீனவர்கள் மீது மத்திய அரசுக்கு அக் கறை இல்லை என்று இலங்கை இலங்கை அரசை எண்ண வைத்துவிடும்.

தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக டில்லியில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து இந்தியா தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்-என்றுள்ளது.(வ)

### ஆகாயத்தில் இருந்தும் தாஜ்மஹாலை கண்டு மகிழலாம்



காதல் சின்னமாக விளங்கும் உலகப்புகழ் பெற்ற தாஜ்மஹாலை பார் வையாளர்கள் ஆகாயத்தில் இருந்து பார்ப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதியின் மூலம், 50 மீற்றர் விட்டமுடைய ஹீலியம் வாயு பலூனில் ஆகாயத்தில் இருந்து மிதந்த வாறு தாஜ்மஹாலின் விநோத அழகை பார்வையாளர்கள் கண்டு மகிழலாம். குறித்த ஹீலியம் பலூனானது 500 மீற்றர் உயரத்தில் பறந்து தாஜ்மஹாலின் அழகைக் கண்டு ரசிக்க ஏற்றவாறு 2 கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து இயக்கப்படும் என்று காலக்கிருத்தி மையம் தெரிவித்துள்ளது. (வ)

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக புதுவை சட்டசபையில் தீர்மானம்

புதுவை, மார்ச்.16

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக புதுவை சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று புதுவை சட்டசபை முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தி இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பில் விசாரணை மேற்கொண்டு தண்டிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி புதுச்சேரி அம்பேத்கர் சட்டக்கல்லூரி மாணவர்கள் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அரியாங்குப்பத்தில் இருந்து உப்பளம் கடற்கரை வீதி வழியாக சட்டசபைக்கு முதல்வர் ரங்கசாமி காரில் சென்றார். அவரது கார் அம்பேத்கர் மணி மண்டபம் அருகே வந்தபோது மாணவர்கள் திடீரென காரை வழி மறித்து தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர்.

மாணவர்களின் நியாயமான உணர்வுகளை இந்த அரசு புரிந்து கொண்டு செயல் படும் என தெரிவித்த முதல்வர், உங்களிடம் பேச்சு நடத்த அமைச்சரை அனுப்பி வைக்கிறேன், அத்துடன் நாளை இதுதொடர்பில் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படும்-என்றார். (வ)


## மரண அறிவித்தல்

### திருமதி பாலசுந்தரம் மாதரசி



துன்னாலை வடக்கு மிசன் பாடசாலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் மாதரசி 13.03.2013 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-நாக முத்து தம்பதியரின் ஏக புதல்வியும், பொன்னுத்துரை (P.W.D.ஓவசியர்)-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் (P.W.D. ஓவசியர்-பாலா ஓவசியர்) அன்பு மனைவியும், சிறிஸ்கந்தராசா (U.K), விஜயகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-பச்சிலைப்பள்ளி, பிரதேசசபை), சந்திரவதனி (சிரேஸ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக் கழகம்), விஜியகுமாரி (கண்டி), கமலகுமாரி (துன்னாலை), நிர்மலா (ஜேர்மனி), மனோறஞ்சிதம் (ஜேர்மனி), சத்தியபாமா (U.K) ஆகியோரின் தாயும், றஞ்சினிதேவி (U.K), ஜசிந்தா (ஆசிரியை- யா/ஞானாசாரியார் கல்லூரி-துன்னாலை), காலஞ்சென்ற தேவதா சன் மற்றும் இராகவன் (ஆராதனாஸ், கண்டி), சரவணபவன் (கஜமுகன் பல்பொருள் வாணிபம்), யோகலிங்கம் (ஜேர்மனி), விஜயசங்கர் (ஜேர்மனி), விமல்ராஜ் (U.K) ஆகியோரின் மாமியும், லபோசி- மயூரன் (U.K), கோகுல் (U.K), சஜீவன் (தே.க.க), ஷியாமினி, செந்தூரன் (U.K), பிருந்தா (கண்டி), கஜந்தன், கவிதா, தர்சிகா, லக்ஷயா, அபினயா, ஜனனி, துஷானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று கியான் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மிசன் பாடசாலை அருகில்,**
**துன்னாலை வடக்கு,**
**கரவெட்டி.**
**0779057701**

தகவல்:
குடும்பத்தினர்.

(C/7486)(10.6)



## Sales Executive - Super Market

- ஆகக் குறைந்தது ஒரு சில வருடங்களாவது முன் அனுபவம் தேவை.
- கடமை நிமித்தம் வெளிநாடு செல்ல சந்தர்ப்பம்.
- இலவச தங்குமிட வசதி.
- மாதாந்தம் ரூ. 100,000.00 க்கு மேல் உழைக்கச் சந்தர்ப்பம் உண்டு.

ஆர்வம் உடையோர் கீழ் தரப்பட்டுள்ள மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிக்கலாம்.
E-mail: sika@online.net.pg


### காஷ்மீர் தாக்குதல்; விசாரணைக்கு உத்தரவு

ஜம்மு, மார்ச்.16

ஜம்மு-காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகரில் உள்ள சி.ஆர். பி.எப். முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் குறித்த விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

சி.ஆர்.பி.எப். முகாம் மீது நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 5 வீரர்கள் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் இருவரும் கொல்லப்பட் டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாநில முதல்வர் ஓமர் அப்துல்லா தலைமையிலான உயர் நிலைக்கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்குப்பின், தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள மாநில பொலிஸ் அதிகாரி அசோக் பிரசாத்துக்கு உத்தரவிட்டுள்ளதாக அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

தீவிரவாதத் தாக்குதலில் காயமடைந்த வீரர்களுக்கு இரத்ததானம் அளிக்க சி.ஆர். பி.எப். வீரர்கள் மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்தனர். அப்போது, சைத்போரா எட்கா பகுதியில் வீரர்கள் மீது இளைஞர்கள் கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் அட்லப் அகமது வானி என்பவர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

### பாதுகாப்பு கணினியில் தகவல் திருட்டு

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் டி.ஆர்.டி.ஓ. கணினியில் இரகசியத் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சீனர்களால்தான் குறித்த நாசவேலை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மிகவும் முக்கியமான இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்கள் போன்றவை குறித்து ஆய்வு நடத்தும் டி.ஆர்.டி.ஓ. கணினியில் ஊடுருவியது சீனர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது. அந்தக் கணினியில் இருந்து முக்கியமான பல தகவல்கள் திருடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.


## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் அன்னப்பிள்ளை



நந்தாவில் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சம்பியன் லேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் அன்னப்பிள்ளை நேற்று (15.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-சுந்தரம் தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகம்(ரதி மில்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (இலங்கை வங்கி), மற்றும் ஈஸ்வரி (மலேசியா), கனகமணி (கிளி- வெள்ளவத்தை, கொழும்பு), முருகையா(கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி(பேபி), மற்றும் புஸ்பராணி, யோகராணி, சண்முகதாஸ்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் துரைராசா(கனடா), காலஞ்சென்ற துரைராசா மற்றும் ரகுநாதன்(ஓய்வு/ஆசிரியர்), சரோஜினி(கனடா), ஆகியோரின் அன்பு மாமியும் ரஜினி(ஜேர்மனி), ரஜிதா(கனடா), காயத்ரி(யா/பல்கலை மாணவி), ரகுவர்னன்(நில அளவையாளர் மன்னார்), சந்தியா(கனடா), நிசாந்தி(கனடா), சத்தியகீத்(கனடா) ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன், கொக்குவில்.
0212052323

ந.ரகுநாதன்
(ரகுநாதன்-ஓய்வு பெற்ற ஆசிரியர்)

(சி/7022)(8.16.14)



## வினாசித்தம்பி இராசலிங்கம்



காரைநகர் களபூமி நந்தாவிலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Leverkuse ஐ வதிவிடமாகவும் கொண்ட A.R வினாசித்தம்பி இராசலிங்கம் அவர்கள் கடந்த (12-03-2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றர்களான வினாசித்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமசாமி, இலட்சுமிப்பள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசமணி யின் அன்புக் கணவரும், காயத்திரி, மிதிலா, அனிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலாதேவி (லண்டன்), யோகலிங்கம் காலஞ்சென்றவர்களான சங்கரலிங்கம், சொர்ணலிங்கம் மற்றும் சிகாமணிதேவி, தியாகலிங்கம்(லண்டன்), சரோஜினிதேவி (ஜேர்மனி), சந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கயிலைநாதன் (லண்டன்), சாரதாதேவி, தேவராசன், ரஞ்ஜினி (லண்டன்), ஆறுமுகநாதன் (ஜேர்மனி), கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி), சுப்ரமணியம், கந்தையா, நடராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காந்தன்(இலண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், பார்திபன்(லண்டன்), பாரதி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

535/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
யோகலிங்கம் (சகோதரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இத்தாலிக் கடற்படையினர் நடத்திய இந்திய மீனவர் மீதான துப்பாக்கிச் சூடு**

# பேச்சு மூலம் தீர்வு காண்க வலியுறுத்துகின்றது ஐ.நா.

ஜெனிவா, மார்ச் 16

இந்தாலிக் கடற்படையால் இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பில் இருநாடுகளும் பேச்சு மூலம் சுமூகமான தீர்வை எட்டவேண்டும் என்று ஐ.நா.சபை வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் கேரளக் கடற்பரப்பில் இத்தாலிக் கடற்படைக் கப்பல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். அதையடுத்து இத்தாலி கடற்படை வீரர்கள் இருவர் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

எனினும் இத்தாலியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பங்குபற்றுமுகமாக, இத்தாலி அரசின் உறுதிமொழியுடன் கடற்படை வீரர்கள் இருவருக்கும் நிபந்தனை அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது. தற்போது வழக்கு விசாரணைக்காக இருவீரர்களையும் இந்தியா அனுப்ப இத்தாலி அரசு மறுத்துவருகின்றது.

அதையடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இத்தாலி அரசுக்குக் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தார். ''இத்தாலியின் இந்த நடவடிக்கை இந்திய அரசின் இறையாண்மையைப் பாதிக்கும் செயலாகவே கருதப்படுகின்றது. இந்த நடவடிக்கையால் இந்தியா-இத்தாலி நாட்டுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் பாதிக்கப்படும். இதுகுறித்து ஐரோப்பிய யூனியனின் உதவியை நாடவுள்ளோம்'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதையடுத்தே ஐ.நா. சபை மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. ''இந்தப் பிரச்சினையால் இருநாட்டு உறவுகளும் பாதிக்கப்படும் சாத்தியங்கள் உள்ளன. எனவே இருநாடுகளும் பேச்சுக்கள் மூலம், சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.''- என்று ஐ.நா. சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சர்வதேச நீதிமன்றமே வழி முரண்டு பிடிக்கிறது இத்தாலி



ரோம், மார்ச் 16

இத்தாலி கடற்படையினர் தொடர்பான பிரச்சினை தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் செல்லவுள்ளதாக இத்தாலி தெரிவித்துள்ளது. பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ.நா. வலியுறுத்தியுள்ள நிலையிலேயே இத்தாலி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இத்தாலியின் வெளியுறவு துறை அமைச்சர் ஜியுலியோ டெர்சி,

''எங்கள் கடற்படை வீரர்கள் மீதான வழக்கை சர்வதேச நடுவர் மன்ற விசாரணைக்கு கொண்டு செல்ல எங்களிடம் சரியான காரணங்கள் உள்ளன. சர்வதேச விசாரணை வரம்புக்கு உட்பட்ட பிரச்னை என்பதை நிரூபிக்க எங்களிடம் போதிய ஆதாரங்கள் உள்ளன. எங்கள் காரணங்கள் பற்றி இந்திய அரசுக்கும், மற்றவர்களுக்கும் நாங்கள் விளக்கியிருக்கிறோம்'' - என்று தெரிவித்தார். (ற)


## அகதி முகாமில் இப்படியும் அவலம்



சிரிய உள்நாட்டுப் போரால் இடம்பெயர்வோரின் எண்ணிக்கை கடந்தவாரம் மூன்று சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இதுவரைகாலமும் இல்லாத அளவு உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள ஐ.நா.சபை, சிரியப் படைகள் மற்றும் புரட்சியாளர்களுக்கு இடையே கட்டுப்பாடற்ற மோதல்கள் இடம்பெறுவதே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளது. இடம்பெயரும் மக்களுக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில், சர்வதேச நாடுகள் போதியளவு பங்களிப்பை வழங்காததால் வினைத்திறனுடன் பணியாற்ற முடியவில்லை என்று தெரிவித்துள்ள ஐ.நா. சபை, உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதும் அதுகுறித்த புள்ளிவிபரங்களைப் பெறுவதில் தாம் கடும் நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (ற)

# ஈரானை ஒடுக்குகின்ற வல்லமை எமக்குண்டு

**அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா**



வொஷிங்டன், மார்ச் 16

''ஈரான் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா சகல வழிகளிலும் முயற்சிக்கின்றது. அவை பயனளிக்காத பட்சத்தில் ஈரானின் நடவடிக்கைகளை ஒடுக்கும் வல்லமை எம்மிடம் உண்டு''- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு அடுத்தவாரம் பயணம் மேற்கொள்ளவுள்ளார் அமெரிக்க ஜனாபதி பராக் ஒபாமா. இந்தநிலையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே ஒபாமா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

''ஈரான் அணு ஆயுதம் ஒன்றை உருவாக்குவதற்கு ஒரு வருடம் அல்லது அதற்குக் கூடுதலான காலம் எடுக்கும். நாங்கள் அவர்களின் நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த விரும்பவில்லை. ஈரான் பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்க அனைத்து வழிகளிலும் முயற்சிக்கின்றது. அந்த ராஜதந்திர நடவடிக்கைகள் தோல்வி அடைந்தால், ஈரானைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தேவையான அனைத்துத் திறனும் அமெரிக்காவுக்கு உள்ளது.

ஈரானிடம் இஸ்ரேலை அச்சுறுத்தும் வகையிலோ அல்லது பிராந்திய நாடுகளுக்கிடையே ஆயுதப் போட்டிகளை தூண்டும் விதமான அணு ஆயுதங்கள் இல்லை என்பதை உறுதி செய்வது மட்டுமே எங்களின் நோக்கமாகும்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு நான் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப்பயணத்தின் முக்கிய நோக்கம் அங்குள்ள நிலைமையை நேரில் கேட்டு தெரிந்து கொள்வதே''- என்று தெரிவித்துள்ளார்.(ற)



## நேபாளத்தின் புதிய பிரதமராக ராஜ் ரெக்மி

காத்மண்டு, மார்ச் 16

நேபாளத்தின் புதிய பிரதமராக அந்நாட்டு பிரதம நீதியரசர் கீல் ராஜ் ரெக்மி நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் நியமனத்தின் மூலம் சில மாதங்களாக நாட்டில் நிலவி வந்த அரசியல் பதற்ற நிலைமைக்கு தற்காலிக தீர்வு காணப்பட்டுள்ளது.

ரெக்மி தலைமையிலான அரசாங்கம், நேபாளத்தில் இடைக்கால ஆட்சியை நடத்தும் எனவும், எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த பதவியேற்பு விழாவில், ரெக்மிக்கு ஜனாதிபதி ராம்பரண் யாதவ் பதவிப் பிரமாணமும், இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

நேபாளத்தில் தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக, அங்குள்ள முக்கிய அரசியல் கட்சிகளுடன் கடந்த புதன்கிழமை பேச்சுக்கள் நடைபெற்றன. அதையடுத்தே பிரதமர் தெரிவு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. அந்தக் பேச்சுக்களில் மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டாவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(ற)

# 28%

## தென்னாபிரிக்க மாணவிகளுக்கு எச்.ஐ.வி.

ஜொகன்னர்ஸ்பேர்க், மார்ச் 16

தென்னாபிரிக்காவில் பாடசாலைச் சிறுமிகளில் 28 சத வீதத்தினருக்கு எச்.ஐ.வி. தொற்று உள்ளது என்று தொண்டு நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன:

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி,

2011ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 94 ஆயிரம் சிறுமிகள் கருவுற்றுள்ளனர். அதில் 77 ஆயிரம் சிறுமிகள் கருக்கலைப்புச் செய்துள்ளனர். பணக்கார முதியவர்கள், வறுமையில் உள்ள சிறுமிகளை பாலியல் ரீதியாக பயன்படுத்துவதாலேயே இந்த நிலை ஏற்பட்டுகின்றது என்று கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் மொத்தமாக 10 சதவீதத்தினர், அதாவது 50 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் அங்கு எச்.ஐ.வி. தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் 2,60,000 பேர் எய்ட்ஸ் நோயால் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பாக். தற்காலிக பிரதமர் பதவிக்கு 3 பேர் பரிந்துரை

இஸ்லாமாபாத், மார்ச் 16

பாகிஸ்தானில் தற்போதைய ஆட்சி எதிர்வரும் 16ஆம் திகதி கலைக்கப்படுவதை அடுத்து இடைக்கால பிரதமர் பதவிக்கு மூன்று பேரின் பெயர்களை பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் பரிந்துரை செய்துள்ளார்.

முன்னாள் நிதி மந்திரி அப்துல் ஹாபீஸ் சைக், பொருளாதார நிபுணர் இஷ்ராத் ஹுஸைசன், ஓய்வு பெற்ற நீதிபதி மிர் ஹசார்கான் ஆகிய மூவருமே அஷ்ரப்பால் பரிந்துரைக்கப்பட்டவர்களாவர்.

பரிந்துரைக்கப்பட்டவர்களில் ஹசார்கான் முக்கிய எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந்த மூத்த தலைவராக இருக்கிறார். அதேநேரத்தில் அப்துல் சைக்கை எதிர்க்கட்சிகள் ஏற்க மறுக்கும் என்று கூறப்படுகிறது. எதிர்வரும் 16ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் பிரதமரும், எதிர்க்கட்சி தலைவரும் கலந்துரையாடி இடைக்கால பிரதமரை தேர்ந்தெடுப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# ஈராக் குண்டுவெடிப்பில் 22 பேர் சாவு

**50க்கு மேற்பட்டவர்கள் படுகாயம்**



பக்தாத், மார்ச். 16

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 7 பொலிஸார் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாக்தாக் நகரில் வெளிநாட்டுத் தூதரகங்கள் இயங்கி வரும் பாதுகாப்பு மிக்க பகுதியில் குண்டு வெடித்துள்ளது. அந்தப் பகுதிக்குள் பொலிஸ் உடையில் நுழைந்த தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

ஷியா பிரிவைச் சேர்ந்த பிரதமர் நூரி அல் மாலிக்கை, சன்னி பிரிவினர் தொடர்ந்தும் எதிர்த்து இவ்வாறான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு அமெரிக்கப் படைகள், ஈராக்கிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் ஈராக் அரசு செயலற்றதாக இருக்கிறது என்று சர்வதேச ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (ற)

# இறந்த பின்னரும் தொடரும் வழக்கு



லண்டன், மார்ச் 16

பிரிட்டனின் புகழ்பெற்ற வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான ஜிம்மி சேவில் மீது தொடரப்பட்டுள்ள பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளநிலையில், மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதான குற்றவாளியான ஜிம்மி சேவில் இருமாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் அவர் மீதான வழக்கு இன்னும் முடிவடைவதாகத் தெரியவில்லை. ஜிம்மி சேவில் மீது 450 பாலியல் முறைகேடுகள் குறித்து புகார்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 328 புகார்கள் சிறுவர்களிடம் அவர் தவறாக நடந்து கொண்ட குற்றங்களாகும்.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தற்போது பெரியவர்களாகி தற்போது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். விசாரணைகளின் அடிப்படையில் மேலும் நான்கு செய்தியாளர்கள் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதனால் ஜிம்மி சேவில் இறந்த பின்னரும் வழக்கு நீண்டு செல்கிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் சரியான திசையில்

## ஹிருனிகா சொல்கிறார்



கொழும்பு,மார்ச்16

நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை சரியான திசையில் நகர்வதாக உணர்கின்றேன். பாதலக்ஸ் மன்பிரேம சந்திரவின் புதல்வி ஹிருனிகா பிரேமச்சந்திர இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

துமிந்த சில்வாவின் உள நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்து சரியாகக் கூற முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், ஏனையவர்களைப் போன்றே துமிந்தவின் உடல் நிலை காணப்படுகிறது.

அதற்கான ஆதாரங்களும் உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

துமிந்தவின் மருத்தவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவுவிடுத்தமை வரவேற்கப்படவேண்டியது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# மாணவரிடம் பணம் அறவிடுவதற்குத் தடை

## சுற்றறிக்கையை அனுப்பியது கல்வி அமைச்சு

கொழும்பு,மார்ச்16

பாடசாலை மாணவர்களிடமிருந்து எந்தக் காரணத்துக்காகவும் பணம் அறவிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைக்கான சட்டரீதியான கட்டணம் செலுத்தாத மாணவர்களை எந்த விதத்திலும் உடல், உள ரீதியான அழுத்தங்களுக்கு உட்படுத்தக் கூடாது என்று கல்வி அமைச்சு விசேட சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. அதற்கான சுற்றறிக்கையை கல்வி அமைச்சு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது என்று அமைச்சின் செயலர் எஸ்.எம்.கோத்தபாய ஜயரட்ண கூறினார்.

அந்தச் சுற்றறிக்கை அனைத்து மாகாண கல்விச் செயலர்களுக்கும், மகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சட்டரீதியான கட்ட ணங்கள் அறவிடப்பட வேண் டும் என்று பெற்றோருக்கோ, மாணவர்களுக்கோ கட்டாயப்படுத்தக் கூடாது. சட்டரீதியான கட்டணமாக இருந்தாலும் அதனை செலுத்த முடியாத மாணவர்கள் கிராம சேவகரின் சான்றிதழ் ஊடாக அதனை உறுதிப்படுத்திய பின்னர் சகலவிதமான அறவீடுகளிலிருந்தும் அந்த மாணவனுக்கு விலக்களிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த ஒரு மாணவனுக்கு கட்டண அறவீடு விலக்களிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய கடிதமொன்றை பாடசாலை அதிபர் பெற்றோருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். கட்டணம் செலுத்தாத மாணவர்கள் எந்த விதத்திலும் உடல் ரீதியாகவோ, மனோ ரீதியாக அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படக் கூடாது-

மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களை மீறி சட்ட விரோதமாகச் செயற்படுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை கட்டமைப் புக்குள் சேவை புரிகின்ற ஆளணியினர் எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக ஸ்தாபன விதிக் கோவைக்கு அமைய கடும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றும் கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது. (ச)

# நாளாந்தம் 5 கிராம் உப்பே தேவை பாவிப்பதோ இரட்டிப்புக்கு மேல்

## இலங்கையில் நடத்திய ஆய்வில் தகவல்

தேவையான அளவை விட இரட்டிப்புக்கும் மேற்பட்ட உப்பை இலங்கை மக்கள் நாளாந்தம் பயன்படுத்துவது ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை உலக சுகாதார ஒன்றியத்துக்கான இலங்கையின் இணைப்பாளர் வைத்திய நிபுணர் பாலித்த கருணா பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வயது வந்த ஒருவருக்கு நாளாந்தம் ஐந்து கிராம் உப்பு தேவைப்படு கின்ற போதிலும், இலங்கையில் சராசரி யாக ஒருவர் 12.5 வீத உப்பை உண வில் சேர்த்துக்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போதுகருத்து வெளியிட்ட சுகாதார பணியகத்தின் வைத்திய நிபுணர் நீலமனி ராஜபக்ஷ ஹேவாகீகனகே, ஒரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் சிறுநீரகங்கள் உப்பைத் தாக்குபிடிக்காது என சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும் ஒருவயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு சாதாரண உணவை வழங்கவேண்டியது அவசியம். அதற்கமைய ஒரு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு உப்புக் குறைவாக சேர்க்கப்பட்ட உணவு வகைகளைக் கொடுக்கவேண்டிய பொறுப்பு தாய்மாருக்கு உள்ளது- என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இலண்டனைச் சேர்ந்த

**செல்லையா தெய்வேந்திரன்**

(இந்திரன்)

தோற்றம் 26.01.1958 — மறைவு 27.03.2012



சேராத செல்வமெல்லாம் சேர்த்து விட்டு
சேர்ந்திருக்க மறந்து நீங்கள் சென்றதெங்கே?
பாரினிலே பந்தங்கள் பலவிருக்கு - எம் செல்வமே
பக்கதுணை நீங்கள் இன்றி பயனேது எமக்கு!!

ஓராண்டு எமைப்பிரிந்து சென்றதனை
ஒரு பொழுதும் எமது மனம் ஏற்றதில்லை.
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் -
எம்முடன் நீங்கள்
வாழ்வதாகவே பாவனை செய்கிறோம்....!!!

எண்ணில் அடங்காத நற்குணங்கள் அத்தனைக்கும்
ஏக நாயகனாய் இன்புற்று வாழ்ந்த உனைக்
கண்ணிமைக்கும் நேரத்திற் கவர்ந்து சென்ற காலனின்
கருணையற்ற செயலில் கலங்குதே எமது உள்ளம்....!!!
ஆண்டு ஒன்றில் ஒருகணம் ஏனும் உங்களை நாங்கள்
மாண்டதாக நினைத்ததே இல்லை
ஆண்டுகள் எத்தனை இனி இனி வரினும்
மீண்டும் மீண்டும் உங்கள் நினைவுடன் வாழ்வோம்.

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

(34504) (45.6.7)



## ஐந்தாம் ஆண்டு நினைவுகளில்....

திருமதி
**பூபதி குமாரசாமி**
(திதி:-மாசிமாத வளர்பிறைப் பஞ்சமி)



பிறப்பு 19.01.1937
இறப்பு 12.03.2008

அன்பினுக்கு ஊற்றாய்!
பாசத்திற்கு உறைவிடமாய்!
பண்பிற்கு சிகரமாய்
வாழ்ந்த எம் அம்மாவின்
அன்பகலா பிரியங்களுடன்.....

"பூபதி", ஐயனார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19.06.1948

மறைவு 14.02.2013



அமரர்
**கணபதி தேவராசா**

அறுவரைப் பெற்று
அகிலம் போற்ற வைத்து
அழியா ஒளியான
எங்கள் அன்புப் பிதாவின்
ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவின் போது எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நி.மு.: மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை.

த.மு.: சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(34494)(5.6.7)



## மணமகன்கள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1980 சித்திரை 2 செவ்வாய் பட்டதாரி ல/பாவம் 32 (38) உயரம் 5'- 8," - 1983 அவிட்டம் 8 செவ்வாய் பட்டதாரி ல/பாவம் 36(60) உயரம் 5' - 4" உள்ள மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை.

தொடர்பு: 0770783832 (27791)(6.7.2)

## உடன் விற்பனைக்கு

JU - xxxx இலக்க Honda CD - 200
விற்பனைக்கு. தொடர்புகளுக்கு:
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0712214114 (34507)(6.7.2)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற
RMP/MD/MBBS
வைத்தியர்கள் தேவை.
தொடர்பு: 0779465467 (34456) (6.7.11)

## Class Room For Rent

கச்சேரிக்கு அருகில் அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளக் கூடிய அறை வாடகைக்கு விடப்படும். 30 மாணவர்கள் கற்கக் கூடிய வசதியுள்ளது.

தொடர்புகளுக்கு:
021 222 8193, 07732 96 407

(34520)(6.7.2)



## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி **சரவணமுத்து நித்தியேஸ்வரி**



தோற்றம் 23.06.1933

மறைவு 12.02.2013

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் இருப்பிடமாய் இருந்து எம்முடன் வாழ்ந்த
அம்மாவே! உந்தன் இன்னுயிர் இறையடிசேர
பிரார்த்தனை செய்யும் உன் குடும்ப உறவுகளாம்
நாம் என்றென்றும் இறையடி வேண்டுகின்றோம்.

இன்று (16.03.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில்
நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்.
077 6594 617

(34232)(6.7.45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைஞர்களுக்கான நாளைய அமைப்பு மற்றும் தேசிய இளைஞர் சபை இணைந்து நடத்தும் சமாதானத்துக்கான இளைஞர் பாத யாத்திரை ஆறாம் நாளான நேற்று வெள்ளிக்கிழமை கண்டி நகரை வந்தடைந்துள்ளது. கதிர்காமத்தில் ஆரம்பித்த இந்தப் பாத யாத்திரை யாழ்ப்பாணம் வரை செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் பிரேரணை வலுவாக்கப்பட வேண்டும்

## உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு,மார்ச்16

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வலுவானதாக்கப்பட வேண்டும் என்று உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகள் சில கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் பி.பி.சி. வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தக் கூடியவகையில் இந்தப் புதிய பிரேரணை அமைய வேண்டும் என்று பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு கோரியுள்ளது.

இலங்கை மீதான போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் இனப்படுகொலை குறித்த குற்றச்சாட்டு ஆகியவை குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவிடயங்களை வலியுறுத்தியுள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் என்ற அமைப்பு, மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அதன் பாதுகாவலர்கள் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்தமுறை ஜெனிவாவில் இலங்கையின் மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுத்தவர்களுக்கு ஓர் அமைச்சரவை உறுப்பினரே அச்சுறுத்தல் விடுத்ததாகவும், இந்தமுறையும் அவ்வாறான நிலைமைகளுக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த அமைப்பின் இயக்குநரான பில் லின்ச் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள அமைப்பொன்றும் அமெரிக்கப் பிரேரணை வலுவானதாக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் பணியாற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்தமுறை கொண்டுவரப்பட்ட அமெரிக்கப் பிரேரணை, இலங்கையில் மனித உரிமைகள் மேம்படுவதில் உரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் பிரேரணை கொண்டுவரப்பட்ட பின்னரும் இலங்கையில், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் தாக்குதலுக்கு ஆளாகுதல் உள்ளிட்ட ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன என அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (ச)

# ஐ.ஓ.சிக்கு எரிபொருள் ஏற்றி வந்த வியட்நாம் கப்பல் தடுத்து வைப்பு

## திருமலை துறைமுக கடற்பரப்பில்

கொழும்பு,மார்ச்16

லங்கா இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சிக்கு வழங்க 4500 மெற்றிக்தொன் எரிபொருள்களை ஏற்றிவந்த வியட்நாம் கப்பலை கைப்பற்றுமாறு கொழும்பு வர்த்தக நீதிமன்ற நீதிவான் பி.பி.எஸ் மொராயஸ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

வியட்நாம் கொடியுடன் வந்துள்ள 'வினாலையின்ஸ் க்ளோரி' என்ற கப்பலையே கைப்பற்றுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தமக்கேற்பட்டுள்ள 25 லட்சம் அமெரிக்க டொலர் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுத்தருமாறு விடுத்த கோரிக்கையை அடுத்தே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த கப்பல் டீசல், பெற்றோல் மற்றும் கப்பலுக்கு பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளது.

**லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தமக்கேற்பட்டுள்ள 25 லட்சம் அமெரிக்க டொலர் நட்டஈட்டுத் தொகையை பெற்றுத்தருமாறு விடுத்த கோரிக்கையை அடுத்தே கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது**

கப்பலில் ஏற்றும்போது நல்ல நிலையிலிருந்த எரிபொருள் கள் இலங்கைக்கு கொண்டுவருகின்றபோது தரங்குறைந்ததாக மாறிவிட்டது என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்தே நீதிவான் கப்பலை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த கப்பல் இலங்கை கடற்படையினரின் பாதுகாப்புடன் திருகோணமலை துறைமுக கடற்பரப்பில் நங்கூரம் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நீதிவானின் வாகனத்துக்கு கல்வீச்சுத் தாக்குதல்

கொழும்பு,மார்ச்16

நீதிவான் பயணித்த வாகனத்தின் மீது கல்வீசிய சம்பவம் ஒன்று மிஹிந்தலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஐந்து பேரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அனுராதபுரம் பிரதான நீதிவான் ருவன்திக்கா மாரப்பன பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தின் மீதே இவ்வாறு கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் வாகனம் சிறு சேதமடைந்துள்ளது. இந்த வாகனம் கஹட்டகஸ்திகிலியவிலிருந்து அனுராதபுரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

# வாகன விபத்தில் மூவர் படுகாயம்

கம்பளை,மார்ச்16

கம்பளை, பேராதனை பிரதான வீதியில் கஹட்டபிடியவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.


வானும், ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வானின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க மயக்கமே இந்த விபத்துக்கு காரணம் என்று கம்பளை பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கம்பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
உயர்திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
(B.Com.P.G.D.E, M.Ed, SLEAS III)
கல்வியே தொழிலாய் கொண்டு
கந்த நீ - கவிதை பெற்றாய்
அல்லு நன் பகலும் முயன்று மேலான
தராதரம் நிறைவாய்க் கொண்டு
சொல்லிலே நிகரில்லாSLEAS பதக்கம் தன்னை
வேந்தனவன் நிறைந்து தந்தான்
கல்லிலே பதித்த நின் புகழ் காலமெல்லாம்
கலந்து வாழ்ந்த கந்த நீ வாழி வாழி!
அண்மையில் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இற்கு பதவி உயர்வு பெற்ற எமது பாடசாலை அதிபர் வே.கந்தசாமி அவர்கள் மேன்மேலும் பட்டங்கள் பதவிகள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய
கல்விச் சமூகம்.
(27887)(C.6.7)



உ
சிவமயம்
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
உசன் - மிருசுவில்
திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மஹாயக்ஞம்
17.03.2013 ஞாயிற்றுக்கிழமை
ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில்
"அருள்வாக்குச் சித்தர்"
குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்
(பிரதமகுரு உசன் கந்தசுவாமி கோயில்)
தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்
குறிப்பு: அன்றைய தினம் இல. 769 வழி இ.போ.ச. பஸ் மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவை யாழ்ப்பாணம் - உசன் - யாழ்ப்பாணம் இடம்பெறும். மாற்று வலுவுள்ளோர்களுக்கான உதவியும் ஆலயத்தில் வைத்து வழங்கப்படும்.
MR.R.KETHEESWARA SARMA
COMMERCIAL BANK - JAFFNA
A.C.No. 860092 1092
பிரதமகுரு தொ.பே. எண். 0777 238561
நிகழ்வுகளை www, usankanthan.com
பார்வையிடலாம்
மயிலேறு பெருமான் திருவடி போற்றி!
உசன் பதிக்குமர வேலவா போற்றி!
உசன், மிருசுவில்
ஆலய தர்மகர்த்தா
விளம்பர அனுசரணை
ஹோட்டல் ஓங்காரபவன்- உயர்தர சைவ உணவகம்,
தங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான காலை, மதிய, இரவு உணவுவகைகள்மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தும் உங்கள் இல்லம் தேடிவர வாகன வசதியுடன் ஒடருக்கு செய்து கொடுக்கப்படும்.
இல. 37, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(34457) (45.6.7)
தொடர்பு: T.S.சர்மா
0777 231680



ஏழாலை மத்தி ஏழாலை
வசந்தி கோயிலென விளங்கும்
அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் -2013
நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் பங்குனி மாதம் 03ஆம் நாள் இன்று(16.03.2013) சனிக்கிழமை பூர்வபக்க பஞ்சமித் திதியும், பரணி நட்சத்திரமும் விஷ்ணு யோகமும் கூடிய சுபவேளையில் நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்று வைபவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.
பிரதம சிவாச்சாரியார்:
புன்னாலைக்கட்டுவன் சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் JP
தொடர்ந்து 11நாள்கள் தினசரி காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை விசேட பூஜைகளும் நடைபெற்று, அம்மன் எழுந்தருளி வீதி வலம் வருவார்.
26.03.2013 செவ்வாய்க்கிழமை அன்று உத்தரநட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கும் வைபவம் நடைபெறும்.
வழக்கம் போல 01.04.2013 ஆம் திகதி 3ஆம் திங்கள் குளிர்த்தி பூஜையும் நடைபெறும். பங்குனித் திங்கள் விசேட பூசைகளும் வழமைபோல் அன்ன தானமும் வழங்கப்படும்.
ஏழாலை.
ஆலய பரிபாலகர் வசந்தி அம்மன்.
[34496][5.6.7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தாரியின் பொறாமை

கௌரவர்களைப் பெற்றெடுத்தவள் காந்தாரி. பாண்டவர்களைப் பெற்றவள் குந்திதேவி. குந்திதேவி இளவயது மங்கையாக இருந்த போது ஒரு முனிவருக்குப் பணிவிடைகள் செய்தாள். அதனால் மனம் மகிழ்ந்த அந்த முனிவர் ஐந்து மந்திரங்களை அவளுக்கு உபதேசித்தார். ''அந்த மந்திரங்களை உச்சரித்தால் தேவர்கள் காட்சி தருவார்கள். நீ வேண்டிய வரங்களைப் பெறலாம்'' என்று அவர் சொல்லியிருந்தார்.

குந்திதேவியின் கணவனாகிய பாண்டு மகாராஜா ஒரு சாபத்தின் காரணமாகத் தன் மனைவியருடன் இன்பம் துய்க்க முடியாத நிலையினை அடைந்தான். மனைவியுடன் சேர்ந்தால் அடுத்த கணமே அவனுக்கு மரணம் சம்பவிக்கும் என்ற சாபம் அவனுக்கு இருந்தது. அதனால் புத்திரப்பேறின்றி பாண்டு மகாராஜன் வருந்தினான்.

கணவனின் வருத்தத்தைக் கண்ட குந்திதேவி இளம் வயதில் தனக்கு முனிவர் கற்றுத் தந்த மந்திரங்களைச் சொன்னாள். அதைப் பயன்படுத்தி பிள்ளை வரம் கேட்கலாம் என்று சொன்னாள். அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த பாண்டு மகாராஜா அப்படியே செய்வோம் என்றான். அதன்படி யமதர்மராஜன் மூலமாக தருமபுத்திரன் தோன்றினான். வாயு தேவன் மூலமாக பீமன் பிறந்தான். இந்திரன் மூலமாக அருச்சுனன் பிறந்தான். பாண்டு மகாராஜாவுக்கு இரு மனைவியர். ஒருத்தி குந்திதேவி மற்றவள் மாத்ரி தேவி. தனக்கு மூன்று பிள்ளைகள் கிடைத்து விட்டதால் தன் சகோதரியான மாத்ரி தேவிக்கு மற்ற மந்திரங்களைக் குந்தி தேவி உபதேசித்தாள். அதன்படி மாத்ரி தேவிக்கும் நகுலன் சகாதேவன் ஆகியோர் பிறந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் திருதராட்டிரனின் மனைவியான காந்தாரி பரிபூரண கர்ப்பவதியாக இருந்தாள். குந்தியும் மாத்ரியும் பிள்ளை களை அடைந்துவிட்டார்கள் என்பதை அறிந்த அவள் பொறாமை கொண்டாள். தன் வயிற்றைப் பலமாக இடித்துக் கொண்டாள். அதனால் அவள் தாங்கியிருந்த கர்ப்பம் வலுக்கட்டாயமாக வெளியே வந்தது. அவற்றை நூறு குடங்களில் பிரித்துப் பாதுகாத்தார்கள். அந்த நூறு குடங்களிலிருந்து நூறு புதல்வர்கள் தோன்றினார்கள். முதலில் தோன்றியவன் துரியோதனன். அவன் தோன்றிய போதே பல அவலக் குரல்கள் எழுந்தன. இவனால் பல ஆபத்துக்கள் நிகழப்போவதை இந்தச் சகுனங்கள் எடுத்துக்காட்டி நின்றன.

குந்தியும், மாத்ரியும் பிள்ளைகளைப் பெற்றுவிட்டார்கள் என்பதற்காக பொறாமை கொண்டு காந்தாரி தன் வயிற்றை இடித்துக் கொண்டாள். அதனால்தான் அவளுடைய பிள்ளைகள் பொறாமையும் வஞ்சகமும் கொண்டவர்களாக இருந்தார்கள். தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே அவர்கள் பொறாமைக் குணம் படைத்திருந்ததற்கு இதுவே மூல காரணமாகும். 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்று சொல்வது போல் தாய் காந்தாரியின் பொறாமைக் குணம் பிள்ளைகளுக்கு வாய்த்தது. ஆனால் காந்தாரி சிறந்த பதிவிரதையாகத் திகழ்ந்தாள். தன் கணவன் கண்பார்வையற்றவன் என்பதனால் தானும் உலகத்தைக் காண விரும்பாது துணியால் கண்களைக் கட்டிக் கொண்டாள். சிறந்த அறிவாளியாகவும்? அவள் இருந்தாள். ஆயினும் பிள்ளைப் பேறு வாய்க்கும் சமயத்தில் குந்தி தேவி, மாத்ரி ஆகியோர் மீது பொறாமை கொண்டு அவள் நடந்து கொண்ட விதம் சரியானதாக இருக்கவில்லை.

பொறாமை என்னும் துர்க்குணத்தின் காரணமாகத்தான் பல ஆபத்துக்களும், அழிவுகளும் தோன்றுகின்றன. சிறு வயது முதல் கொண்டு பாண்டவர்கள் மீது துரியோதனன் பொறாமை கொண்டு நீதிக்குப் புறம்பான காரியங்களையெல்லாம் செய்தான். சூலத்தை நாட்டிப் பீமனைக் கொல்ல நினைத்தான். உணவில் விஷத்தைக் கலந்து அவனை அழிக்கப் பார்த்தான். அரக்கு மாளிகையில் பாண்டவர்களைத் தங்க வைத்துப் பூண்டோடு அழிக்க சூழ்ச்சி செய்தான்.

வஞ்சக சகுனியோடு சேர்ந்து கொண்டு பாண்டவர்களின் இராஜ்ஜியம் செல்வம் அனைத்தையும் கவர்ந்து கொண்டான். பாண்டவர்களை அடிமையாக்கியதோடு திரௌபதியையும் அடிமையாக்கிச் சபையில் அவமானப்படுத்தினான். காட்டுக்குத் துரத்தினான். அங்கேயும் அவர்கள் வாழ முடியாதபடி பல இன்னல்களை ஏற்படுத்தினான். துர்வாச முனிவரின் சாபத்தில் விழுந்து ஒழிந்து போகட்டும் என்று அவரை அங்கே அனுப்பி வைத்தான். வனவாசம் முடிந்து பாண்டவர்கள் வந்தும் கூட இராஜ்ஜியத்தை திருப்பித்தர மறுத்தான். தூது வந்த ஸ்ரீகிருஷ்ணனையே சிறை வைக்க முயன்றான்.

இவ்வளவு தீய செயல்களைச் செய்த துரியோதனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் சபையில் எச்சரிக்கை செய்தார். பாண்டவர்களுடன் சமாதானமாகப் போகாவிட்டால் போர்க்களத்தில் பாண்டவர்கள் உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவார்கள் என்று அவர் சொன்னார். இவ்வளவு சொல்லியும்கூட ஊசி முனை நிலமும் பாண்டவர்களுக்குத் தரமாட்டேன் என்று துரியோதனன் சொன்னான். அதனால்தான் போர் மூண்டது. போரில் பாண்டவர்கள் வென்றார்கள். துரியோதனன் குலத்தோடு மடிந்தான். இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்தும் கூட காந்தாரி ஸ்ரீ கிருஷ்ணனை நிந்தனை செய்தாள். நீ வேண்டுமென்றே என் பிள்ளைகளை போரில் ஆழ்த்திக் கொன்றுவிட்டாய். நீ நினைத்திருந்தால் போரைத் தவிர்த்திருக்கலாம். போர் நடக்க வேண்டும் என்பதற்காகவே நீ காரியங்களைச் செய்தாய். அதனால் என்னுடைய நூறு பிள்ளைகளும் மிச்சம் மீதமின்றி மாண்டு போனார்கள். அதனால் உன் குலமும் புண்டோடு அழியும் என்று அவள் சாபம் கொடுத்தாள்.

அதர்மத்தை அழித்து தருமத்தை நிலைநிறுத்த வந்த ஆண்டவனின் அவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்கே காந்தாரி இத்தகைய சாபத்தைக் கொடுத்தாள். துரியோதனனுக்காக எத்தனையோ அறிவுரைகளை அவர் கூறிப் பார்த்தார். எதையும் கேட்காமல் தன் அழிவுக்கு அவனே காரணமாக ஆனான். அதை அறிந்து கொள்ளாமல் காந்தாரி சாபம் தந்தாள். அவளுடைய பதிவிரதை பலம் காரணமாக அந்தச் சாபம் பலித்தது.

ஆனாலும் அவள் தன் புண்ணிய பலத்தை அதனால் இழந்து போனாள். எம்முடைய சக்தியைத் தருமத்துக்கு ஆதரவாகப் பிரயோகிக்கும் போது நம்முடைய புண்ணிய கணக்கு கூடிக் கொண்டே செல்லும். எமக்கிருக்கும் சக்திகளை அதர்மத்துக்காகப் பயன்படுத்தினால் புண்ணிய கணக்கு குறைந்து பாவக் கணக்கு அதி கரிக்கும். காந்தாரியின் பொறாமை என்னும் துர்க்குணத்தால் அத்தகைய நிலையினை அவள் அடைந்தாள். ஆகவே பொறாமை என்னும் துர்க்குணத்தை நாம் அறவே நீக்க வேண்டும்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# கொட்டிலில் ஆரம்பித்து கல்லூரியாக பரிணமிக்கும் உரும்பிராய் இந்து




**லக்ஸ்மன்**

அந்நியர் வருகையை அடுத்து தமிழையும் சைவத்தையும் காக்க ஆறுமுக நாவலர் மேற்கொண்ட முயற்சிகளில் சைவத்தமிழ் வித்தியாலயங்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தோற்றம் பெற்றுக் கொண்டிருந்தன. நாவலரின் இந்த முயற்சியின் பயனாக 1988 இல் சைவபரிபாலன சபை தோன்றியது. அதன் தூண்டுதலில் ஆங்காங்கே சைவ, ஆங்கிலப் பாடசாலைகளும் உதயமாகின. கலாநிதி வல்லிபுரம் சுவாமிநாதன், நாகலிங்கம் ஆகியோர் சைவ ஆங்கிலப் பாடசாலையை தமது ஊரான உரும்பிராயிலும் ஆரம்பிக்க வேண்டும் என்ற தேவையை உணர்ந்து வீடு வீடாகச் சென்று ஆரம்பத்தில் பத்து மாணவர்களுடன் 1911 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை தற்போது அமைந்துள்ள காணியின் மேற்குப் பகுதியில் உள்ள கிணற்றின் அருகே ''பொடியார்'' என்பவரின் புகையிலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டது.

சின்னையா இதன் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதன் முதலாவது மாணவராக வல்லிபுரத்தின் சகோதரரான சிதம்பரப்பிள்ளையின் மகன் விசுவலிங்கம் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்த வகுப்புக்கள் பின்னர் செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை என்பவர்களின் வீட்டுக்கு இடம் மாற்றப்பட்டன. பின்பு சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை என்பவரின் பத்துப் பரப்புக் காணி இலவசமாகப் பெறப்பட்டு அங்கு கொட்டில்கள் அமைக்கப்பட்டு இந்துக்கல்லூரி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது. அவர்கள் மேலும் ஒரு மண்டபத்தை அமைத்து அதிகமானவர் கல்விகற்கக் கூடியதாக வசதிகளை ஏற்படுத்தினர். இந்தக் காலத்தில் சின்னையா ஆசிரியர் விலகிக் கொள்ள வியாகேசர் என்பவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

> 1957 இல் ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் செயலாளராக செ.ஜயாத்துரை நியமிக்கப்பட்டார். 1958 இல் 'பி' தரத்தில் இருந்த இந்துக் கல்லூரி 'ஏ' தரத்துக்கு உயர்த்தப்பட்டதுடன் ஒரு தொழிற்பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் அரசு விடுத்திருந்தது.

1915 இல் பண்டிதர் வேலுப்பிள்ளையைத் தலைமை ஆசிரியராகக் கொண்ட தமிழ் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. இதில் ஆரம்பப் பிரிவு முதல் மூன்றாம் வகுப்பு வரை வகுப்புகள் இடம் பெற்றது. மாணவர்கள் மூன்றாம் வகுப்பு சித்தியடைந்ததும் ஆங்கில மொழிப் பாடசாலைக்குச் சேர்க்கும் திட்டம்நடைமுறைப்படுத்தப்பட்டன. அவர்கள் ஆங்கில முதலாம் ஆண்டில் சேர்க்கப்பட்டனர். ஆங்கிலம் இரண்டாம் ஆண்டில் சித்தியடைந்ததும் ஐந்தாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். இந்தப் பாடசாலை ஆரம்பமானதும் கோப்பாய், கோண்டாவில், சுன்னாகம், இணுவில், நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன் போன்ற சுற்றாடல் கிராமத்துப் பிள்ளைகளும் இந்தப் பாடசாலையில் இணைந்து கொண்டனர். ஆரம்ப காலத்தில் ஆறாம் வகுப்புக்கள் வரையே இங்கு இடம் பெற்றன. மாணவர்களின் தொகை அதிகரிக்க ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. [illegible] இல் வியாகேசர் இடம் மாறிச்செல்ல குமாரசாமி தலைமை ஆசிரியரானார். அவரைத் தொடர்ந்து பி.தம்பு சீதாராமன், இராசரத்தினம், கனகசபை அதிபர்களாக ஸ்ரீநிவாசன், எம்.இளையதம்பி, அ.வைத்திலிங்கம் சச்சிதானந்தன், சுவாமிநாதசர்மா, தியாகராசா, சி.கனகலிங்கம், சிவபாலன், ஈ.சிவானந்தன், செ.சிவபாலன், சி.பாலசுப்பிரமணியம், மா.சண்முகரத்தினம் (பதில் அதிபர்) அ.ஈஸ்வரநாதன் என்போர் கடமையாற்றியுள்ளனர். தற்போதைய அதிபர் அ.அருள்நந்திசிவம் ஆவர்.

குமாரசாமி தலைமை ஆசிரியராக இருந்த சமயம் ஏழாம், எட்டாம் வகுப்புகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் கட்டட வசதிகள் இன்மையால் வைத்திய கலாநிதி வல்லிபுரம் மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை அடுத்து கட்டடம் அமைக்கப்பட்டு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டது. எட்டாம் வகுப்பு E.S.L.C என அழைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் அதிபராக இருந்த சீதாராமன் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தக் கூடியதாக ஓய்வு நாள்களிலும் ஆங்கில வகுப்புகளை நடத்தி வந்தார். இதனால் மாணவர்களின் வரவு மேலும் அதிகரித்தது. மேலும் ஒரு கட்டடத்தை அதிகார சபை அமைத்தது. அதில் விஞ்ஞான ஆய்வு கூட அறையும் அமைக்கப்பட்டது. 1932 இல் (ஜே.எஸ்.சி.வகுப்பு) கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இந்து ஆங்கிலப் பாடசாலை என வழங்கி வந்த கல்லூரியின் பெயர் உரும்பிராய் இந்துக் கல்லூரி எனவும் மாற்றம் பெற்றது. சீதாராமன் இந்தக் கல்லூரியில் மூன்று தடவைகள் தலைமை ஆசிரியராக இருந்துள்ளார். 1941 இல் க.பொ.த. சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. கல்லூரியும் தரம் மூன்றிற்கு உயர்த்தப்பட்டது. 1945 இல் இலவச கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தமிழே போதனா மொழியானது. மீண்டும் மாணவர் தொகை அதிகரிக்க மேலும் இரண்டு பரப்பு நிலம் கொள்முதல் செய்யப்பட்டு கொட்டகைகள் அமைக்கப்பட்டன. 1915 ஆம் ஆண்டில் இருந்து இங்கு இயங்கி வந்த தமிழ்ப்பிரிவு 1949 இல் கற்பகப்பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான காணிக்கு மாற்றப்பட்டது.

1957 இல் ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் செயலாளராக செ.ஜயாத்துரை நியமிக் கப்பட்டார். 1958 இல் 'பி' தரத்தில் இருந்த இந்துக் கல்லூரி 'ஏ' தரத்துக்கு உயர்த்தப்பட்டதுடன் ஒரு தொழிற்பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் அரசு விடுத்திருந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ 9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி வெலக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## கொடும்பாவி பயம்

''எல்லாரும் சிவமயம், சிவமயம் எண்டு சொல்லுவினம். எனக்கு எல்லாம் பயமயம்'' தெனாலி படத்தில் கமலஹாசன் அடிக்கடி உச்சரிக்கும் வசனம் இது. பயத்தைத் தவிர வேறு எதுவுமே அறியாத ஒரு மனிதனின் விம்பமே அது. பயம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானதுதான். ஆனாலும் ஒவ்வொருவரினதும் வாழ்வியல் சூழல், தன்னம்பிக்கை, முடிவெடுக்கும் திறன் என்பவற்றைப் பொறுத்து, பயத்தின் அளவு கூடிக் குறையும். பயம் என்ற உணர்வு இல்லாத மனிதர்கள் எவருமே கிடையாது. மாவீரன் என்று புகழப்படும் நெப்போலியன்கூட பூனைக்கு பயந்தவன்தான்.

''எதிரிகள் பற்றிய பயமே எப்போதும் என்னை எச்சரிக்கையோடு வைத்திருக்கிறது. இந்த எச்சரிக்கைதான் அவர்களை எப்படி வெல்ல வேண்டும் என்ற வழிகளையும் கற்றுத் தருகிறது. ஆகவே, பயம் தேவையான விடயம்தான்'' என்று உலகையே வெல்லப் புறப்பட்ட அலெக்ஸாண்டர் அடிக்கடி சொல்லிக் கொள்வாராம்.

இலங்கையில் தமிழருக்கு எதிராக நடந்த கொடூரங்களை துணிச்சலுடன் அறிக்கையிட்ட தருஸ்மனுக்கும் ஒரு பயம் இருக்கவே செய்கிறது. பேய், பிசாசுகளுக்குக்கூட பயம் கொள்ளாத தருஸ்மனுக்கு ''கொடும்பாவி எரிப்பு'' என்ற பயமே ஆட்டிப் படைக்கிறது. இதனால்தான் இலங்கைக்கு வந்து இன்னல்கள் நடந்த பகுதிகளையும், மக்களையும் சந்திக்க வேண்டும் என்ற அவாவை அவர் நிராகரிக்க வேண்டியிருக்கிறது. இலங்கை என்றவுடனேயே அவருக்கு முதலில் நினைவுக்கு வருவது கொடும்பாவி எரிப்புத்தான்.

அந்தளவுக்கு கொடும்பாவி எரிப்பதில் உலகப் புகழ்பெற்று, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நாடாக விளங்குகிறது இலங்கை. எதற்கெடுத்தாலும் கொடும்பாவி எரிப்பதையே இலங்கை அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் தமது நீண்டகால பழக்கமாக வைத்திருக்கிறார்கள். அந்தப் பழக்க தோஷத்தில்தான் போலும் இனக் கலவரங்கள் தோன்றியவுடன் கொடும்பாவிகளுக்குப் பதிலாக தமிழர்களை டயர்போட்டு, எரித்திருக்கிறார்கள்.

இப்போதும், அந்தப் பாரம்பரியத்தை முள்ளிவாய்க்காலில் செய்தே இருக்கிறார்கள். அது தவிர, தமக்கு எதிரான கருத்துகளை வெளியிடும் நபர்களினதும் அல்லது நாடுகளின் தலைவர்களினதும் கொடும்பாவிகளை எரித்து மகிழ்வதில் இன்பம் கண்டு கொண்டிருக்கிறார்கள் பேரினவாதிகள். கொடும்பாவி எரிப்பதை ஒரு விளையாட்டாக்கினால் அந்தத் தரவரிசையில் முன்னணி வீரராக வருவதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸவைத் தவிர, வேறு யாருக்கும் தகுதி கிடையாது. ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணிபோல பல்லாயிரக்கணக்கான கொடும்பாவிகளை எரித்து தன் வரலாற்றுக் கடமையை கனகச்சிதமாக செய்துகொண்டிருக்கிறார் அவர்.

உலகப் பிரமுகர்களின் மிகப் பெரும்பாலானோர் விஞ்ஞான தொழில்நுட்பத்தால் உலகையே வெல்ல முடியும் என்ற கருத்தியலைக் கொண்டிருந்தாலும், இன்னொரு புறத்தில் பில்லி சூனியம், பேய், பிசாசு, மாந்திரீகம் போன்றவற்றையும் உண்மை என்றே நம்புபவர்கள். அதனால்தான் இப்போதும் பேய், பிசாசு பற்றிய படங்கள் அதிகளவில் வெளிவந்து வசூலில் சாதனை படைக்கின்றன. அந்த எண்ணக் கருவில் இருந்து விடுபடாத தருஸ்மனும், '' ஒரு வேளை கொடும்பாவி எரித்து எனக்கு ஏதாவது ஆகி விடுமோ?'' என்று பயம் கொள்வதில் தவறில்லை.

ஆக மொத்தத்தில், விமல் வீரவன்ஸ தலைமையிலான கொடும்பாவி எரிப்புக் குழுவுக்கு ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது.

# திட்டமிட்டு மாற்றப்படும் திருமலை மாவட்ட வரலாறு

■ திருமலையான்

திருகோணமலை மாவட்டத்தின் முகம் மாறி வருகின்றது. 2006 ஆம் ஆண்டு சம்பூரில் தொடங்கிய போர், முள்ளிவாய்க்காலுடன் முடிவடைந்ததும், தமிழர் அடையாளத்தை அழித்து வருகின்றது. விடுதலைப்புலிகளின் இராணுவப் பலம் சிதைக்கப்பட்டதன் பின்னர், தமிழர்களின் கலாசாரமும் சிதைக்கப்பட்டு வருகின்றது. விடுதலைப் போராட்டம் இலங்கை அரசினால் வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னர் பௌத்த அடையாளங்கள் தமிழர் நிலங்களில் முளைக்கத் தொடங்கியுள்ளன.

ஈழ வரலாற்றில் திருகோணமலை மண்ணுக்கு பல சிறப்புகள் உள்ளன. கோணேசர் ஆலயம், கன்னியா வெந்நீர் ஊற்று, வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயம், சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், கங்குவேலி அகத்திய தாபனம் என்பன தமிழர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த அம்சங்கள். இந்தச் சான்றுகள் திருகோணமலை மாவட்டத்தின் தமிழர் வரலாற்றை புராண இதிகாச காலங்களுக்கு இட்டுச் செல்கின்றது. இதன் மூலம் தமிழர்களுக்கும், திருகோணமலைக்கும் உள்ள சிறப்பு வெளிப்பட்டு நிற்கின்றது. நீண்ட வரலாற்றை உடைய தமிழர்களின் வாழ்வியலில் போர் முடிவடைந்ததன் பின்னரான கடந்த மூன்று வருடங்களில் வரலாற்று மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சைவ மக்களின் புனித தலமான கோணேசர் ஆலயம் இன்று சுற்றுலாத்தலம் போன்று மாற்றம் அடைந்து வருகின்றது.

ஆலயத்தின் சூழல் கூட இன்று மாற்றம் பெற்றுள்ளது. ஆலயத்தின் பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் குறிப்பிட்ட தூரத்துக்குத் தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கோயில் சூழலின் இயற்கை அழகில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கோணேசர் ஆலயச் சூழலில் மான் கூட்டங்களும் , குரங்குகளின் கூட்டமும் தனி அழகு. 2006 ஆம் ஆண்டு சம்பூரில் ஏற்பட்ட போரின்போது , இலங்கை இராணுவம், கோட்டையிலிருந்து சம்பூர் பிரதேசத்தின் மீது பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டதனால் பீரங்கிச் சத்த அதிர்வு காரணமாக கோணேசர் ஆலய சூழலில் இருந்த பெருமளவு குரங்குகள் காட்டுப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டன.

இப்போது கோணேசர் ஆலயச் சூழலில் குரங்குக் கூட்டங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. இதே போன்று தான் கடைகளின் ஆதிக்கம் ஏற்பட்டதன் காரணமாக மான்களுக்குத் தேவையான உணவுகிடைப்பது குறைவாக இருப்பதனால், மான் கூட்டங்கள் ஆலய சூழலில் இருந்து இன்று வெளியேறி வருகின்றன. அவை திருகோணமலை நகரசபை வளாகத்துக்குள்ளும், கடற்கரைப் பகுதிகளிலும் நடமாடித் திரிகின்றன. இதனால் ஆலயச் சூழலின் இயற்கை அழகு மாற்றமடைந்து வருகின்றது. ஆலய சூழலில் மான்களின் எண்ணிக்கை கூட தற்போது குறைவாகவே காணப்படுகின்றது.

கோணேசர் ஆலயம், திருகோணமலை சைவ மக்களுக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. உலகில் வாழும் இந்து மக்களின் அடையாளமாக இந்த ஆலயம் விளங்குகின்றது. எனவே ஆலய பரிபாலன சபையினர் மேற்குறிப்பிட்ட சில விடயங்களில் தமது கவனத்தை [illegible] [illegible] விளங்கும் இந்த ஆலயத்தைச் சுற்றுலாத் தலமாக மாற்றி வருவதற்கு இடமளிக்கக் கூடாது. இந்த ஆலயத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த அரசுடன் இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் முயற்சி எடுக்க வேண்டும்.

கன்னியா வெந்நீர் ஊற்று, கோணேசர் ஆலயத்துடன் தொடர்புபட்டது. கன்னியா நீரூற்றைப் பற்றிப் புராணங்கள் கூறும் வரலாற்றின் படி மகாவிஷ்ணு மூர்த்தியே அவற்றை உற்பத்தியாக்கினார் எனக் கூறப்படுகிறது. கோண நாயகரிடம்தான் பெற்ற இலிங்கத்தைக் கையிலேந்திக் கொண்டு, இலங்கை மன்னன் இராவணன் செல்லும் போது விஷ்ணு மூர்த்தி ஓர் அந்தண வடிவம் தாங்கி தசக்கிரீவனைச் சந்தித்து அவன் தாயார் உயிர்நீத்த செய்தியைத் தெரிவித்தார். இலங்கைக் காவலன் அதைக் கேட்டதும் துக்கத்தில் ஆழ்ந்தான். முனிவர் அவனைத் தேற்றிய பின்னர், தனயன் தாய்க்குச் செய்ய வேண்டிய கன்மாதிக் கிரியைகளைச் செய்யுமாறு நினைவுறுத்தினார். இந்தப் புண்ணிய தலத்தில் கன்மாதிக் கிரியைகளைச் செய்தால் அவர் மோட்ச வீட்டை அடைவது திண்ணம் என்று கூறினார். அந்த அந்தணரே அதைச் செய்து முடிக்க வேண்டுமென்று இராவணன் வேண்டிக் கொண்டதற்குச் சம்மதித்த அந்தணர் அவனை அழைத்துக்

> தமிழரின் அடையாளமாக விளங்கும் கன்னியா வெந்நீர் ஊற்று, இன்று தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டு அந்தப் பகுதி பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றது.

கொண்டு திருகோணமலைக்கு மேற்கிலுள்ள கன்னியா என்னும் தலத்திற்குச் சென்று அந்த இடத்தில் தமது கையிலிருந்த தண்டினால் ஏழு இடத்தில் ஊன்றினார்.

அந்தண வடிவங்கொண்ட மகாவிஷ்ணு ஊன்றிய ஏழு இடங்களில் நீரூற்றுத் தோன்றின என்று புராணங்கள் கூறுகின்றன. இறந்தவர்களுக்கு அந்த இடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்தால், அந்த ஆன்மாக்கள் முத்தியடையுமென நம்பப்படுகின்றது. இராவணன் தனது தாயாருக்குரிய கன்மாதிக் கிரியைகள் எல்லாவற்றையும் அங்கு முறைப்படி செய்தான் என வரலாறு கூறுகின்றது.

தமிழரின் அடையாளமாக விளங்கும் கன்னியா வெந்நீர் ஊற்று, இன்று தொல்பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டு அந்தப் பகுதி பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலய சூழலில் கூட பாதுகாப்பு பிரிவினர் நிலை கொண்டுள்ளனர். இது ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்படுத்துவதாக அமைகின்றது.

குளக்கோட்ட மன்னனுடன் தொடர்புடைய சம்பூர் பிரதேசம், தமிழரின் கலை, கலாசார விடயத்தில் ஆணிவேராகவும் கருதப்படுகிறது. 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் பின்னர் அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் இன்று வரை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இதனால் தனித்துவமான பாரம்பரியமுடைய கிராமிய கலைகள் கூட அந்த மக்களிடம் இருந்து சிதைவடைந்து வருகின்றன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள காளி கோயில்களில் மிகவும் பழைமையான ஆலயமாக விளங்குவது சம்பூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயமாகும். இந்த ஆலயம் கூட வெளியாரால் போரின் போது உடைக்கப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளது. விலை மதிக்க முடியாத பல விக்கிரகங்கள் கூட எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

கடந்த வருடம் வைகாசி மாதத்தில் மட்டும் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இந்த ஆலயத்துக்கு மக்கள் சென்று வழிபட கடற்படையினர் அனுமதி வழங்கி இருந்தனர். அதன் பின்னர் ஆலயத்துக்கு மக்கள் சென்று வழிபட கடற்படையினரால் அனுமதி வழங்கப்படவில்லை. ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதற்கு கூட அனுமதி மறுக்கப்படும் சூழல் காணப்படுகின்றது.

இந்த நிலையில், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழரின் வரலாற்றுப் பிரதேசமான சம்பூர் இராணுவ மயமாக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலையில் தமிழரின் பண்டைய அடையாளங்களை பார்க்கும் போது ,முத்தூர் என்பது இன்று மூதூர் என்று அழைக்கப்படும் திருகோணமலையிலுள்ள ஓர் இடமாகும். தமிழ்க் கலைகள் அறுபத்தி நான்கும் அகத்தியரால் போதிக்கப்பட்டவையாகும். அகத்தியத் தாபனம் பல்கலைகளையும் போதித்து வந்துள்ளது.

திருமங்கலாய் தொடங்கி முத்தூர் துறை மகாவலி வரை மகாவலி ஆற்றுக்கு கிழக்கே கங்கை வெளி பரந்து காணப்பட்டது. இன்று கங்குவேலி என்று பெயர் குறுகி விட்டது. உலகில் முதலில் நாகரீகம் தோன்றியது இங்கே தான் என முத்தூர் அகத்தியர் என்ற ஆய்வு நூலில் கூட குறிப்பிடப்பட்டுள்ளது. கங்குவேலியிலுள்ள அகத்தியத் தாபனம் அழிந்த பின்னரும், வழிபாட்டுத் தலமாக சிவலிங்கம் காட்சியளித்தது.

அத்துடன் அகத்தியத் தாபனத்தின் வாயில் படிகள், சந்திரவட்டக் கல் உட்பட கல்வெட்டுக்கள் என்பன போர் முடிவடைந்த பின்னர் சமாதானச் சூழல் நிலவுகிறது எனக் கூறப்படும் காலத்தில் தான் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. ஈழ நாட்டில் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் , நூல்கள், வரலாற்றுச் சுவடுகள் அதிகம் காணப்படுகின்றன. இந்தியாவில் காணப்படும் தமிழரின் வரலாற்றுக் காலத்துக்கு இவை முற்பட்டவையாகும். தமிழ்ப் பேரவைக்கால நூல்களில் முத்தூர் அகத்தியர் என்று தம்மைத் தாமே அறிமுகப்படுத்தியுள்ளமையை நாம் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அகத்தியர் ஈழத்தில் திருகோணமலையில் பல்லாண்டுகள் காலம் வாழ்ந்துள்ளார் என்பதை அவர் பணிகளாலும், நூல்களாலும் அறிய முடிகின்றது. திருமங்கலாய்ச் சிவன்கோயில் , அகத்தியத் தாபனம், திருக்கரசைச் சிவன் கோயில் என்பவற்றை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இதன் மூலம் திருகோணமலையின் தமிழரின் வரலாறு, வரலாற்றுக் காலங்களுக்கு முற்பட்டது என்பதை உறுதி செய்ய முடிகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் பழையபொருள்களை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் பொறாமை பிரச்சினை வந்து நீங்கும்.

**இடபம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியத்தை தவிருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதத்தைத் தவிருங்கள்.

**மிதுனம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**சிங்கம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். உடன்பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

**கன்னி:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் விரயம் வரும்.

**நாளை**

பங்குனி-04 ஞாயிற்றுக்கிழமை 17.03.2013
திதி: ஷஷ்டி முழுவதும்
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ. 08.21 வரை
சுபநேரம்: 09.19- 10.49 வரை
இராகுகாலம்: 04.49- 06.19 வரை

**துலாம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். வாகனச் செலவுகள் நீங்கும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கும்பம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மீனம்:** வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | 1 | 6 | 7 | 8 | | 3 |
| | | | 8 | 5 | | 1 | 9 | |
| | | | 3 | | | 5 | | |
| | | | 9 | 7 | 1 | | 3 | |
| | 3 | | | | | | 7 | |
| | 6 | | 5 | 3 | 2 | | | |
| | | 8 | | | 6 | | | |
| | 1 | 3 | | 8 | 5 | | | |
| 6 | | 2 | 7 | 9 | 3 | 4 | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 5 | 1 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 8 | 5 | 4 | 1 | 9 | 2 |
| 4 | 8 | 1 | 3 | 2 | 9 | 5 | 6 | 7 |
| 8 | 2 | 4 | 9 | 7 | 1 | 6 | 3 | 5 |
| 5 | 3 | 9 | 6 | 4 | 8 | 2 | 7 | 1 |
| 1 | 6 | 7 | 5 | 3 | 2 | 9 | 8 | 4 |
| 7 | 4 | 8 | 2 | 1 | 6 | 3 | 5 | 9 |
| 9 | 1 | 3 | 4 | 8 | 5 | 7 | 2 | 6 |
| 6 | 5 | 2 | 7 | 9 | 3 | 4 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## யாழ்ப்பாணம் -தென்மராட்சி கிழக்கு -கரம்பகம் திருவருள்மிகு வீரபத்திரப் பெருமான் ஆலய
# மஹா கும்பாபிஷேகம்







**வீரபத்திரப் பெருமான் அடியார்களே!**

யாழ்ப்பாணத்து தென்மராட்சிப் பிரிவில் கரம்பகம் பகுதியில் கோயில்கொண்டு எழுந்தருளி, அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வீரபத்திரப் பெருமானிற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான நந்தன வருட பங்குனி மாதம் 5ஆம் நாள் (18.03.2013) திங்கட்கிழமை ரோகிணி நட்சத்திரமும் இடப இலக்கினமும் அமிர்தயோகமும் ஸப்தமி திதியும் கூடிய சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இப்புண்ணிய காலங்களில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து நடைபெற உள்ள கிரியைகளைத் தரிசித்து எல்லாம் வல்ல வீரபத்திரப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்தி பெறுவீர்களாக.

### கிரியைகள் விவரம்

**இன்று (16.03.2013) சனிக்கிழமை பங்குனி மாதம் 3ஆம் நாள் கர்மாரம்பம்**
காலை 6.35 மணி விநாயகர் வழிபாடு, தொடர்ந்து திரவிய சுத்தி, கணபதி ஹோமம், அனுக்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, பூசைகள் நடைபெறும். பகல் 11 - 12 மணி யந்திர விம்பஸ்தாபனம்

### எண்ணெய்க்காப்பு

**நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை பங்குனிமாதம் 4ஆம் நாள்**
காலை 7.00 மணிமுதல் பி.ப 4.00மணிவரை **எண்ணெய்க்காப்பு இடம்பெறும்**

### மஹா கும்பாபிஷேகம்

**18.03.2013 திங்கட்கிழமை பங்குனிமாதம் 5ஆம் நாள்**
மு.ப 10.17 முதல் 11.29 வரை வளர்பிறை ஸப்தமி திதியும், ரோகிணி நட்சத்திரமும் இடப லக்கினமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

### பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள்

கிரியாமணி, சிவாகம கிரியா தத்துவநிதி
வாமதேவ சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
(அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் தர்மகர்த்தா)

கிரியாமணி அருள்வாக்குச் சித்தர்
**சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள்**
(உசன் கந்தசாமி கோயில் மிருசுவில்)

ஆலய பூசகர்:
**வல்லிபுரம் சபாரத்தினம்**
(கரம்பகம் வீரபத்திரர் ஆலயம்)

பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள் தலைமையில் ஏனைய சிவாச்சாரியார்களும் இணைந்து **மஹா கும்பாபிஷேகத்தினை** நடத்தி வைப்பார்கள்.
அனைவரும் வருக. எம்பெருமான் அருள் பெறுக.

கரம்பகம்,
மிருசுவில்.

(ச/7449)(5.6.7)

**நிர்வாக சபையினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள வேடுவர்களின் பிரச்சினையும் ஐ.நா. சபையில்

கொழும்பு,மார்ச்16
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையில் இலங்கையின் பழங்குடியின மக்களான வேடுவர்களின் உரிமைகள் குறித்தும் வலியுறுத்தப்பட வேண்டும்

இவ்வாறு 'சவர்வைல் இண்டர்நேஷனல்' என்ற சர்வதேச அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பி.பி.சி. வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

**இலங்கையில் வேடுவர்களின் பாரம்பரிய வதிவிடங்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன.**

இலங்கையில் வேடுவர்களின் பாரம்பரிய வதிவிடங்கள் சிங்களக் குடியேற்றவாசிகளால் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றன. தமது பாரம்பரிய காடுகளில் தமது தேவைகளுக்காக வேட்டையாடுவதற்கு வேடுவர்கள் தடுக்கப்படுகின்றனர்.

தமது உறைவிடங்களான காடுகளை அவர்கள் இழந்துள்ளனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து இலங்கை அரசால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் எதுவும் சரியாக நிறைவேற்றப்படவில்லை என்று அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தமிழர் பகுதிகளில் வாழும் வேடுவர்கள் போரால் ஏற்பட்ட பல பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர் என்று வேடுவர்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்ட மானுடவியல் ஆய்வாளர் விஜய் எட்வின் தெரிவித்தார். (ச)

களஞ்சியப்படுத்த விசேட எண்ணெய்த் தாங்கி

## மத்தல விமான நிலையத்தில் விமானங்களுக்கு எரிபொருள்

கொழும்பு,மார்ச்16
மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் விமானங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் வகையில், 2½ லட்சம் லீற்றர் எரிபொருள் களஞ்சியப்படுத்தக்கூடிய எண்ணெய்த் தாங்கியொன்று அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெற்றோலிய வள அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. இங்குவரும் விமானங்களுக்கு எரிபொருள் வழங்க ஏற்றவாறு எரிபொருள் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளதோடு, அதனை விஸ்தரிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

உலகிலுள்ள எந்த விமான நிலையத்துடனும் போட்டியிடக்கூடியவாறு குறைந்த விலையில் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. மத்தலவிமானநிலையம் இயங்க ஆரம்பித்ததும், ஹம்பாந்தோட்டை துறைமுக களஞ்சியத் தொகுதியின் அளவை 23 மில்லியன் லீற்றராக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதனூடக தாமதமின்றி எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பெற்றோலிய வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உலகில் தலைசிறந்த தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி மத்தல விமான நிலைய களஞ்சியத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஹலால் உற்பத்திகள் புறக்கணிக்கப்படும்

**சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் எச்சரிக்கை**

ஹலால் உற்பத்திகள் புறக்கணிக்கப்படும் என்று நாடு முழுவதும் உள்ள சிற்றுண்டிசாலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். ஹலால் சான்றிதழை தற்காலிகமாக அன்றி முழுமையாகத் தடை செய்யுமாறு பொது பல சேனா அமைப்பு வலியுறுத்தி வருகிறது. அந்த நிலையில் பொது மக்கள் ஹலால் உற்பத்திகளை கொள்வனவு செய்ய மறுத்து வருகின்றனர் என்று உணவகங்களின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனால் அடுத்த மாதம் முதல் ஹலால் உற்பத்திகளை முற்றாக புறக்கணிக்க உள்ளதாக உணவக உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர். (ச)

## விரட்டியடிக்க மாட்டோம் கொம்பனித் தெரு மக்களை

**நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சொல்கிறார்**

கொழும்பு,மார்ச்16
கொழும்பு, கொம்பனித் தெரு மக்களை விரட்டியடிக்க மாட்டோம் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமல் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எப்பல்வத்தை மக்களுக்கு மாடி வீட்டுத் திட்டம் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதால், சிறிது காலம் மாத்திரம் அவர்கள் அங்கிருந்து அகற்றப்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

கொம்பனித்தெரு மக்கள் விரட்டப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

எப்பல்வத்தை மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுத்ததும் தமது வாக்கு வங்கி இல்லாது போகும் என்ற பயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

### நெஞ்சம் நெகிழ்ந்த முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள்
19.12.1971

தெய்வத்துள்
28.03.2012

**செல்வி புகழினி இரவீந்திரன் (ரஜி)**
(யோகாசனப் பயிற்றுவிப்பாளர்)

உண்பதென்று உணவை வைத்தால்
உன் முகத்தைக் காட்டுகின்றாய்!
உறக்கம் என்று படுக்கை போட்டால்
ஓடிவந்து எழுப்புகிறாய்
கண்மணியில் வாழுகிறாய்
புன்னகையால் வாட்டுகிறாய்
யாருமில்லை உனக்கே என்று
ஓடி விட்டாய் எம் மகளே.

"புகழகம்"
கந்தையா வீதி, சாவகச்சேரி.
(சி.9228) (45.6.7)

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கந்தவனம் சின்னையா சண்முகலிங்கம்**
(ஓய்வுபெற்ற உப அதிபர்,
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்)

தோற்றம்
10.10.1939

மறைவு
14.02.2013

அன்புள்ள அப்பாவே...! சண்முகமாய் நீங்கள் மலர்ந்து
கமலத்துடன் நீங்கள் மகிழ்ந்து
ஆசைக்கு ஒரு மகனை ஆஸ்திக்கு இரு மகள்களை
கோப்புடன் நீங்கள் தந்து
கம்பீரம் குறையாமல் கண்கூட மங்காமல்
லிங்கத்துடன் கலந்ததேன் எங்கள் அப்பாவே!
அம்மப்பாவைத் தேடி இங்கு கலங்குதே இரு சிட்டு
வெகு தூரமிருந்து கடமை தவறியதாய்
கலங்குகின்றான் உம் மைத்தன்
மாமன் முகம் காண ஏங்குகின்றனர் மருமக்கள்
உங்கள் கம்பீரக் குரல் கேட்க ஆசையப்பா!
எம்மை நிற்கதியாய் விட்டுவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டீர்
அப்பா.... திரும்பி வந்திடுங்கள் எம்மிடமே!

கடந்த 14.02.2013 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைத்தொடர்பு மற்றும் இதர ஊடகங்கள் மூலமும் அனுதாபம்தொரிவித்தவர்களுக்கும்,கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (16.03.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில்நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(34448) (45.6.7)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிக் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு

தென்மராட்சி , மார்ச் 16

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது.

கூட்டம் தொடர்பாக பிரதேசத்தில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றுக்கு அழைப்புகள் அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# பறைச்சேரி வெளி காணிகளின் எல்லைகள் இனங்காண முடியாத நிலையில்

## யாழ். பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பறைச்சேரி வெளியில் மிதிவெடி அகற்றும் பணிகளின் போது காணிகள் வெட்டப்பட்டதால் அந்தப்பகுதிக் காணிகளின் எல்லைகளை இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

யாழ். பிரதேச செயலகத்தில் காணிப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது பறைச்சேரி வெளிப் பகுதியின் காணிப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பறைச்சேரி வெளிக் காணிகளுக்கு எல்லை நிர்ணயிக்கப்படுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கான காரணத்தை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது பறைச்சேரி வெளியில் குடியிருந்த 42 குடும்பங்கள் இடம் பெயர்ந்திருந்தன.

இந்த நிலையில் அண்மையில் அப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஹலோறஸ்ட் நிறுவனம் மேற்கொண்டது.

கண்ணிவெடி அகற்றும் பணிகளின் போது காணிகள் வெட்டப்பட்டு மிதிவெடிகள் அகற்றப்பட்டன. இதன் காரணமாக வெட்டப்பட்ட மண் அடையாளங்கள் பரந்து காணப்படுவதால் காணிகளின் எல்லைகள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில தற்போது இந்தப் பகுதி மக்களது காணிகளின் எல்லைகளை இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடையாளப்படுத்தக் கூடிய க்காணிகளுக்கு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1969 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாவாந்துறை வடக்கு சோனகதெருவில் 42 முஸ்லிம் குடும்பங்கள், ஒரு குடும்பத்துக்கு சுமார்3 பரப்பு வீதம் காணி என்ற வீதத்தில் பிரித்து குடியேற்றத் திட்டத்தை அமைத்திருந்தனர்.

இந்தநிலையில் இடப்பெயர்வால் இந்தக் குடும்பங்கள் வெளியேறின. தற்போது ஜே/85, ஜே/86,ஜே/87, ஜே/88 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பறைச்சேரி வெளிப்பகுதியில் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காணிகளின் எல்லைகளை நிர்ணயிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இது தொடர்பாக ஹலோறஸ்ட் நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

மிதிவெடி அகற்றலுக்காக ஒரு பெரிய பகுதி எம்மிடம் ஒப்படைக்கப்படும்.

இதன்போது மிதிவெடி அகற்றும் பிரிவினர் காணிகளின் எல்லைகளைக் கருத்தில் கொள்வது இல்லை. மிதிவெடி இருக்கும் என அடையாளம் காணப்பட்ட இடங்களில் மண்ணை வெட்டி மதிவெடி அகற்றுவார்கள் என்று கூறினர். (ம-14-7)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பத்மநாதன்



இருபாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மநாதன் 10.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) - பவளம்மா (ஆஸ்திரேலியா) தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவேணியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், நிசாம்பவி (ஜேர்மனி), காருன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருட்செல்வம் (ஜேர்மனி), கமலாதேவி (இருபாலை), மோகனராசா (இந்தியா), யோகராசா (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திலகராணி (கனடா), திலகராஜன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரி யைகள் இன்று (16.03. 2013) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கமலாதேவி தவபாலசிங்கம்

அரசடி வீதி, இருபாலை. (2.8.7)(34580) (சகோதரி குடும்பத்தினர்).

# பாராட்டிக் கௌரவிப்பு

சுழிபுரம், மார்ச் 16

சுழிபுரம் வடகிழக்கு சாந்தாவோலை சம்புநாதர் ஆலயத் திருவிழா நாள்களில் பெரியபுராண தொடர் விரிவுரையாற்றிய ஆசிரியர் சைவப் புலவர் ஆ.கனகரத்தினத்தின் சேவையைப் பாராட்டி ஆலய சபையார் இயல் இசைச் சொல் வாருதி என்னும் சிறப்பு பட்டத்தை வழங்கி பாராட்டிக் கௌரவித்தனர்.

பாராட்டு வைபவத்தில் நல்லை திருஞான சம்பந்த ஆதீன குருமகா சன்னிதானம் பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், சிவ தெட்சணாமூர்த்தி மற்றும் பல பிரமுகர்கள் கலந்து பாராட்டுரை வழங்கிக் கௌரவ உரையாற்றினர். (ம-28)

# வடமராட்சி கல்வி வலயத்தில் எழுத்தாக்கப் போட்டிகள்

நெல்லியடி, மார்ச் 16

வடமராட்சி வலய மட்ட எழுத்தாக்கப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட மூன்று கோட்டங்களிலும் எழுத்தாக்கப்போட்டிகள் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (37)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் (ஞான வீரசனசமூக நிலையத்தின் முன்) கடைகளுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவர்கள் 0778095100 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (தரகர்கள் தேவையில்லை) (34558)(6.7.2)

## TV கள் மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் SONY Flat Wega TV கள் 21"- 13000/= முதல், 29"- 16000/= Panasonic (பனசோனிக்) 29" - 15000/= Box வகைகள், DVD -4200/=

தொடர்பு: 0770440570 (அம்பலம்)

சோனி ரேடிட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)

56, K.K.S வீதி, சுன்னாகம். (34676)(2.8.7)



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ


# ஓராண்டு நினைவலைகள்

## அமரர் கந்தையா சச்சிதானந்தன் (சச்சி)

மலர்வு 25.05.1940

உதிர்வு 27.03.2012





ஓராண்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம்காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கிறோம் அப்பா!
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
அன்புத் தெய்வத்திற்கு ஈடாகுமோ!
அனைவரது உள்ளத்திலும் உறைந்திட்டீர்களே அப்பா!
வாசல் கதவுச் சத்தம் கேட்டதும் தாத்தா வருகிறார்
தாத்தா வருகிறார் என்று அழைத்து ஏமாறும் பேரப்பிள்ளைகள்
நீங்கள் எங்களுடன் வாழ்கின்றீர்கள் என்ற உணர்வுடனும்
உங்கள் செயல் நினைவுகளையும்
எத்தனை வருடங்கள் சென்றாலும் மறவோம் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று (16.03.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

366, கோயில் வீதி,
நல்லூர். 021 222 6156

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(34560) (2.8.7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளி தமிழர்கள் புறக்கணிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலை கண்டிக்கிறார் பிரபாகணேசன் எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 16

இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வன்னி நிலப் பரப்புக்குள் இடம் பெயர்ந்து சென்ற இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு விடுதலைப் புலிகள் காணிகளை வழங்கி குடியமர்த்தியிருந்தனர்.

ஆனால் மீள் குடியேற்ற அமைச்சு அவர்களை இன்று புறக்கணித்து வருகிறது. இவ்வாறு ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1977, 1983 ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணமாக களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் வசித்த இந்திய வம்சாவளித் தமிழர்கள் வன்னி பெருநிலப்பரப்புக்குள் இடம்பெயர்ந்தனர்.




இந்த மக்களை அரவணைத்த தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களுக்குக் காணிகளை வழங்கி குடியமர்த்தினர். அவர்களும் வன்னி நிலப்பரப்பிலேயே நிரந்தரமாகத் தங்கினர். இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால் வரை சென்ற இந்த மக்களும் இன்று மீள் குடியமர்ந்துள்ளனர்.

அவர்கள் இன்று காணிகளுக்குரிய உறுதிகளற்று இருக்கின்றனர். மீள்குடியேற்ற அமைச்சும் இன்று அவர்களைப் புறக்கணித்து வருகின்றது. இந்திய வம்சாவளியினர் என்று அடையாளத்தை மறந்து வடமாகணத் தமிழர்களாகவே இவர்கள் மாறியுள்ளனர்.

இந்த நிலையில் காணியற்று இருக்கும் அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்று மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோனிடம், வவுனியாவிலுள்ள 58 ஆவது இராணுவப் பிரிவு தலைமையகத்தில் வைத்து கலந்துரையாடும் போது கேட்டுள்ளேன்.

இந்த மக்களுக்கு மாற்று ஏற்பாடுகள் நிச்சயமாக செய்து தரப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார்-என்றார். (ச-5)



தேசத்துக்கு மகுடம் கண்காட்சியின் ஆரம்பகட்ட வேலைத்திட்டத்தை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழு அம்பாறைக்குச் சென்று பார்வையிட்டது.

## மர்மமான முறையில் காகங்கள் இறப்பு

மட்டக்களப்பு,மார்ச்16

மட்டக்களப்பு, கோவில் போர தீவு பகுதியில் மர்மமான முறையில் பெருந் தொகையான காகங்கள் இறந்துள்ளன.

இந்தப் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பரவலாக காகங்கள் இறந்து கிடந்துள்ளன. அதனை அவதானித்த கிராமவாசிகள் அது தொடர்பில் மிருக வைத்தியசாலைக்கு அறிவித்துள்ளனர்.

நஞ்சு கலந்த உணவினை உட்கொண்டதாலேயே இந்தக் காகங்கள் இறந்திருக்கலாம் என்று கிராம வாசிகள் சந்தேகிக்கின்றனர். (ச)

## 'பாதை' பழுதடைந்தமையால் வாவியில் தத்தளித்த மக்கள்

மட்டக்களப்பு,மார்ச்16

'பாதை' பழுதடைந்ததையடுத்து அதில் பயணித்த நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வாவியில் தத்தளித்துள்ளனர்.

மண்முனைக்கும் படுவான்கரைக்கும் இடையில் உள்ள வாவியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு கடந்த புதன்கிழமை மாலை பயணித்த 'பாதை' வாவியில் பழுதடைந்தது.

இதனால் அதில் பயணித்த நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் சுமார் மூன்று மணித்தியாலயங்கள் வாவியில் தத்தளித்துள்ளனர்.

இந்தப் 'பாதை' பெரும்பாலும் தினமும் வாவியில் பழுதடைவதும் அதனால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## கடன் பிரச்சினையால் குழந்தை கடத்தல்

### சந்தேகநபரைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

மட்டக்களப்பு,மார்ச்16

மட்டக்களப்பு, காத்தான் குடியில் கடந்த புதன்கிழமை கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட குழந்தை நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழந்தை கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு கோவில் வீதியை சேர்ந்த சிவகுமார் கிருஷ்ணாதேவி என்பவரின் குழந்தை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

ஆறு மாதமுடைய இந்தக் குழந்தையை கடந்த புதன்கிழமை மாலை கொக்கட்டிச்சோலையிலிருந்து நபரொருவர் கடத்திச் சென்றுள்ளார்.

அதனையடுத்து மட்டக்களப்பில் வசிக்கும் நபரொருவர் தனது குழந்தையை கடத்திச் சென்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தில் குழந்தையின் தாய் சிவகுமார் கிருஸ்ணாதேவி புதன்கிழமை முறைப் பாடு செய்திருந்தார்.

தனக்கும் குழந்தையை கடத்திய வருக்கும் இடையில் இருந்த கடன் விவகாரத்தால் குழந்தையை கடத்திச் சென்றதாக அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

மீட்கப்பட்ட குழந்தையை நீதிமன்றத்தின் ஊடாக தாயிடம் கையளிக்க நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த குழந்தையைக் கடத்திய சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் முன்பாகவுள்ள வீதியில் மரமொன்றின் கீழ் குறித்த குழந்தை கைவிடப்பட்ட நிலையில் கிடப்பதை கண்ட மக்கள் குழந்தையை மீட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பள்ளிவாசலில் 22 வருடங்களின் பின்னர் தொழுகை

மட்டக்களப்பு,மார்ச்16

காத்தான்குடி, ஹுஸைனிய்யா பள்ளிவாசல் கடந்த 22 வருடங்களுக்குப் பின்பு தற்போது புனரமைக்கப்பட்டு, அதில் நாளாந்தம் தொழுகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி காத்தான்குடி, முதலாம் குறிச்சியிலுள்ள பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்தைத் தொடர்ந்து, ஹுஸைனிய்யா பள்ளிவாசல் மூடப்பட்ட நிலையில் இருந்துள்ளது.

இந்தநிலையில் ஹுஸைனிய்யா பள்ளிவாசல் தற்போது புனரமைக்கப்பட்டு தொழுகை நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)


# நீங்காத நினைவுகளுடன் .....
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**04.03.1913 தோற்றம் 03.07.1933**





**18.11.2011 மறைவு 27.03.2012**

அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை — அமரர் கணபதிப்பிள்ளை பாக்கியம்

மருதடியான் மலரடியை மருவிய தந்தையே
கருணைமிகு அப்பூதி யடிகளென நன்றாய்
அருமையாய்த் தாக சாந்தி தவறாமல் அளித்தனையே
திருவள்ளுவ ரும்வாசுகியு மெனவாழ்ந்தீர் பாரினில்
பெருமைசேர் இல்லறத்தை நல்லறமாய்க் கொண்டீர்
ஒருவர்பின் னொருவராய் எமைப்பிரிந்து சென்றீர்களோ
பொருவிலா வேழ முகம் சாந்திதான் அருள்கவே
வேறேது வழி இதைத்தவிர உங்களை நினைக்க
எம் அகத்தின் ஒளியில் உங்கள் உருவம்
என்றும் நினைவு கூரும்

கடந்த ஆண்டு சிவபதமடைந்த எங்கள் குலவிளக்குகளின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (16.03.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(34498)(10,6,7)

120, "ஐங்கரன் அகம்",
யாழ் வீதி,
மானிப்பாய்.


என்றும் உங்கள்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## கந்தையா பொன்னுத்துரை

(உரிமையாளர், முன்னாள் துரை மோட்டார் வேக்ஸ், செம்மண் தீவு, முருங்கன், மன்னார்)



கரணவாய் தெற்கு, வீரப்பதிராஜனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை 12.03.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வீரப்பதிராஜன்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
021 226 2146, 0776184692,0213002171

(2.6.7)(27797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3,200 கலங்களுக்கு எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

குடாநாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 200 கடற் கலங்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகிறது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சில் கடற் கலங்களைப் பதிவு செய்த தொழிலாளர்களுக்கே மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்கலங்கள் பதிவுக்கு உட்படுத்தப்படாமல் உள்ளன.

இந்த நிலையில் இவர்கள் பதிவு செய்வதற்கு ஏற்ப மாதாந்தம் மானியம் பெறுவோரின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படும்.

இதேவேளை பெப்ரவரி மாதத்துக்கான எரிபொருள் மானிய முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மார்ச் மாதத்துக்கான மானிய முத்திரைகளை மாத இறுதியில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்று கூறப்பட்டது. (ம-17)



இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரி சென்னை சட்டக் கல்லூரி மாணவ, மாணவிகள் நேற்று பாரி முனையில் மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சுப்பிரமணியம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா (இரத்தினம்) சுப்பிரமணியம் நேற்று (15.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சுப்பிரமணியத்தின் மனைவியும், தர்மதேவி, குமரேஸ்வரி (மக்கள் வங்கி - ஓய்வூதியர்), பவானந்தராசா, தேவகுஞ்சரி, பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற இராசலிங்கம் (நீராவியடி பிரபல வர்த்தகர்) மற்றும் லோகேஸ்வரி, பத்மநாதன் (அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்), தங்காதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும், Dr.நிமலன் (பெலாறஸ்), விமலன் (பவா), கமலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.03. 2013) வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

36/10, மணல்தறை ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2.6.7)(34586)

## நிறுத்தல் அளவைக்கு முத்திரையிடல்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவைகள், நிறுவைகள் உபகரணங்களுக்கு யாழ். மாவட்ட அளவைகள், நிறுவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 21,22,25 ஆகிய திகதிகளில் கொடிகாமத்தில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையை இடுமாறு பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தெரிவித்துள்ளார். இதேவேளை சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட வியாபார, வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கான முத்திரையிடும் பணிகள் மேலும் ஒரு நாள் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு நாள்களாக முத்திரையிடும் பணிகள் நகரசபை அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றன. வர்த்தகர்கள், வியாபாரிகளின் வேண்டுகோளுக் கிணங்க எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை உபகணரங்களுக்கு முத்திரை யிடும் பணிகள் இடம்பெறும். (ம-9)

## சமய சந்நிதிகளில்

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் எதிர் வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3)

★ ★ ★

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளிஅம்பாள் ஆலய வருடாந்தப் பெரும் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்திருவிழாவில் எதிர்வரும் 26ஆம்திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 27ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

நவக்கிரி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயவருடாந்தப் பெரும் திருவிழா கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் இன்று சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சப்பரத் திருவிழாவும், 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-13)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தின் பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை நேற்று வெள்ளிக்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இந்த இலட்ச அர்ச்சனையில் 10 ஆவது நாள் திங்கட்கிழமை முற்பகல் 8 மணிக்கு 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைவடையும். (3-13)

★ ★ ★

புலோலி மத்தி அல்லொல்லை பிள்ளையார் ஆலய 108 சங்காபிஷேகமும், அலங்காரத் திருவிழாவும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.(3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சின்னப்பு செல்லையா

**அன்னை மடியில் :- 21.06.1934**
**அம்பாளின் திருவடியில்:- 14.02.2013**

பட்டென செய்தி ஒன்று சட்டென வந்து
எம் காதுகளில் வீழ்ந்து கதி கலங்கி நின்றோம்
உண்மையா பொய்யா என.....
பரிதவித்துத் துடித்தோம்
காற்றெனவே வந்த விதி கடிதெனவே பிரிந்ததனால்!
ஆற்றொணாச் சோகமுற்றோம்!
என்றும் எமது உள்ளத்தில்
மறையாது இந்நாள்......

14.02.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சின்னப்பு - செல்லையா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.03.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**சாத்திரியார் வீதி, அரியாலை.**

(C/7475) (2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியின் குரலாய் ஒலிக்கிறது தமிழக மாணவர் போராட்டம்

## சிறிதரன் எம்.பி. பெருமிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழக மாணவர்கள் நீதியின் குரலாக ஓங்கி ஒலிப்பதற்கு புறப்பட்டு விட்டனர். அவர்களின் குரலை யாராலும் அடக்கி விடமுடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

ஒரு சமூகத்தினதும், நாகரிகத்தினதும் பெருமை அது எவ்வளவு தூரம் நீதியைப் போற்றுகின்றது; நீதிக்காகப் போராடுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது.

ஒரு சமூகத்தின் மனச்சாட்சி தான் அதன் பண்பாட்டின் அளவைத் தீர்மானிக்கின்றது. இந்த வகையில் தமிழக மாணவர்கள் தமிழகத்தினதும் இந்தியாவினதும் மனித குலத்தின் மனச்சாட்சியாய் எழுந்து நிற்கின்றனர். அவர்கள் கொல்லப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் குரலாய் மட்டுமன்றி நீதிதேவனின் பிரதிநிதிகளாகவும் வீரியத்துடன் எழுந்து நிற்கின்றனர்.

மாணவர்களின் பாசம் மிகுந்த போர்க்குரல் இன்னல்படும் ஈழத்தமிழர்களின் செவிகளில் தேனாய் இனிக்கிறது.

இழப்புகளுக்குப் பின்பும் நாம் தனித்து விடப்படவில்லை என்ற உணர்வை எமக்குத் தோற்றுவிக்கின்றது.

தமிழகத்தை ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும், இடதுசாரிகள் உட்பட பொது அமைப்புக்கள் பலவும் மாணவர்களின் இந்தப் போராட்டத்தை ஆதரித்து வருகின்றமை தர்மச் சக்கரம் மேல் நோக்கி சுழலத் தொடங்கிவிட்டதை காட்டுகின்றது என செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(3-400)

கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. தயாகரன்
அவர்களின் அன்புச் சகோதரன் இராமச்சந்திரா சுதாகரன்
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



யாழ்ப்பாணம் மாவட்ட
கூட்டுறவுச் சபை.
(சி/7482)(45.6.7)
தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி, மார்ச் 16

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று தள இராஜகோபுரத்துடன், ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகமும், முற்பகல் 10.17 மணிக்கு மூல மூர்த்தியாகிய வீரமாகாளி அம்பாளுக்கு கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

முன்னதாக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

தென்மராட்சி, மார்ச் 16

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் வீரபத்திரப் பெருமான் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகக் கிரியைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7 மணிமுதல் 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். தொடர்ந்து திங்கட்கிழமை முற்பகல் 10.17 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (3-13)

## தடகள போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலகம் தடகள போட்டிகளுக்கான விண்ணப்பங்களை ஆண்கள், பெண்கள் எனப் பிரித்து தனித் தனியாக இரு பிரதிகளில் பிரதேச செயலகத்தில் விரைவில் சமர்ப்பிக்குமாறு விளை யாட்டுக் கழகங்களை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

அத்துடன் படிவம் இது வரை கிடைக்கப்பெறாத கழகங்கள் பிரதேச செயலக வரவேற்பு கருமபீடத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (வ)

## "உங்கள் செல்வம் எங்கோ? அங்கே உள்ளமும்

"உள்ளத்தின் நிறைவில் வாய் பேசும்" எம் பேச்சுக்கு ஏற்றதாகவே செயல்களும் அமையும். மனிதனுக்கு உள்ளே.. செல்வமே அவனை அசுத்தப்படுத்துவதில்லை. உள்ளே இருந்து வரும் வார்த்தைகளே வஞ்சகமும், கபடும் நிறைந்ததாக இருக்கும். நல்லவர்கள் நல்ல கருவூலத்தில் நின்று நல்லவற்றைப் பேசுகின்றார்கள். தீயவரோ தீயதைக் கக்குகின்றார்கள். எங்கள் உள்ளங்களை கடவுள் தரும் செல்வங்களால் நிரப்புவோமாக இருந்தால் எம் உள்ளங்கள் பிறரன்பாலும் இறையன்பாலும் நிறைந்திருக்கும். அன்றேல் உலக செல்வங்களைச் சேர்த்து வைப்பதிலே ஆர்வமுள்ளதாக இருக்கும்போது நன்மை, தீமை, உண்மை, பொய்மை என்பவற்றை நோக்காது அதிகாரத்துக்கும் ஆணவத்துக்கும், அநீதிகளுக்கும் உறைவிடமாகின்றது.

ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் செல்வந்தர் விண்ணரசில் நுழைவது அரிதாகும் என்பது இயேசுவின் பொன்மொழி. தவக்காலத்தில் நாம் செய்யும் நோன்பு உணவிலும், ஈகையிலும் மட்டும் அமையாமல், எமது சிந்தனைகளும், வார்த்தைகளும் மற்றவர்களை மனம் நோகச் செய்பவையாக அமையக்கூடாது. குடும்பங்களில் கூட இந்த வார்த்தைப் பிரயோகங்கள் குரோதத்தை வளர்த்து விடக் கூடியவை. "உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் வரும் நன்மை என்ன"? (லூக் 6:33) அடுத்தவரைக் கெடுப்பதிலும் அவர்களுக்கு இடையூறு செய்வதிலும், வஞ்சிப்பதிலும் கங்கணம் கட்டும் உலகப் போக்கையே காணுகின்றோம்.




நாம் மேலதிகமாகச் சேர்த்து வைத்திருக்கும் செல்வமும் பொருள்களும் ஏழைகளுடையதே என்று பசிலியார் என்ற புனிதர் கூறுகின்றார். இவ்வுண்மையை நாம் உணர மறுக்கின்றோமே. சமதரையில்லாமல் மேடும் பள்ளமும் நிறைந்தால் பயணம் செய்ய முடியுமா? தீமையின் ஆட்சிகளை களைந்து நன்மையின் ஆட்சியை வரவேற்பது இறை அருளைப் பெறும் செயலாகும். கள்ளங்கபடமற்ற பிள்ளை உள்ளங்கொண்டவர்களாக மாறும்போதே இறை செல்வங்கள் நிறையும் உள்ளங்களாக எமது உள்ளங்கள் மாற்றம் பெறும். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் இருந்தால் விரும்பியதெல்லாம் கேளுங்கள் உங்களுக்கு அருளப்படும் என்று கூறும் இயேசுவின் வார்த்தைகளுக்கு பொருள் கொடுக்கும் வாழ்வை மேற்கொள்வோம். துன்பங்களைக் கண்டு துவண்டு பாதை மாறிவிடாது நானே வழியே என்று கூறும் இயேசுவின் உண்மை வழியைக் கடைப்பிடித்து, இறுதிவரை நிலை வாழ்வை நோக்கிச் செல்லும் பயணத்துக்கு எம் உள்ளங்களைத் தயார் படுத்தி ஒப்பற்ற செல்வமாகிய விண்ணரசை அடையும் பேறு பெற்றவர்களாக வாழ முன்வருவோம்.

அன்ரனி பீற்றர் ஆசிரிய ஆலோசகர் (RC)

WANTED
HEAD OF OPERATIONS

Capstone is a leading higher education provider in Northern Sri Lanka. Planning to start more study programmes in the year 2013/14, we are looking for a smart person to fill the above position.

Requirements
- Bachelors Degree or Equivalent Professional Qualification
- Fluency in English and Tamil
- Basic computer literacy
- Age above 30 years
- Experience in similar capacity will be an advantage

Job Description
- Implementing the operational plans of the organization
- Maintaining relationships with students and parents
- Ensuring the quality of delivery by working close with lecturers
- Coordinating and involving in Marketing Activities

Please call 0779148753/0212220727 to get an appointment for interview.

Chairman
Capstone
(C/34592)(2.6.7)

ஏப்ரல் 13 ஆம் திகதி வரை மட்டும்
சரவணா ரெக்ஸ் (களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
புதிய தெரிவுகளுடன்.........
சித்திரைப் புதுவருடத்தை
முன்னிட்டு மிக பிரமாண்டமான
சும்மா அசர வைக்கும்
மலிவு விற்பனை
சும்மா மனதை ஈர்க்கும்
அழகிய தெரிவுகள்
★ Office Wear சேட்டும் ஜீன்ஸ் துணியும் Rs.1000/=
★ புத்தம் புதிய ரெடிமேற் பஞ்சாபி கொட்டன் Rs.2000/=
★ ரெடிமேற் சில்க் பஞ்சாபி Rs.2000/=
★ பெண்களுக்கான Office Wear Top Rs.500/=
★ Office Wear சில்க் சல்வார் துணி Rs.750/=



Office Wear Silk Saree Rs.500/=
Office Wear Cotton Saree Rs.500/=
1000 ரூபாவிற்கு ஒரு சேட்டும் ஜீன்ஸ் துணியும்
சரவணா ரெக்ஸ்
(களஞ்சியசாலை)
இடம்:- சிவப்பிரகாசம் வீதி,
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
நேரம்:- முற்பகல் 9 மணிமுதல் இரவு 8மணி வரை
காலம்:- ஏப்ரல் 13ஆம் திகதி வரை
(C/7483)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விமாணி பட்டக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் கல்வித்துறையினால் நடத்தப்படும் 2013 ஆம் ஆண்டுக்கான கல்விமாணி பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச அல்லது அரச அனுமதி பெற்ற பாடசாலைகளில் ஆசிரியர் சேவையிலுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்று ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி அல்லது, தேசிய கல்வி டிப்ளோமா அல்லது பல் தொழில் நுட்ப நிலைய மணைப் பொருளியல் டிப்ளோமா, அல்லது அரச அங்கீகாரம் பெற்ற விவசாய டிப்ளோமா, அல்லது உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா எனும் சான்றிதழ்களைக் கொண்டவர்கள் இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

தகுதியானவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு விண்ணப்படிவங்களை பெற்று விண்ணப்பிக்கமுடியும். (3-13)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்கத்தின் புதிய நிர்வாக சபை கடந்த மாத இறுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக சு.சுரேஸ்குமார், பொதுச் செயலாளராக த.சபேசன், உபதலைவர்களாக ப.துஸ்யந்தன், கா.சுஜந்தன், பொருளாளராக ப.குமுதன், உபசெயலாளராக ந.தனுசன்.

விளையாட்டுச் செயலாளர் சி.தனேஸ், நூல் நிலையப் பொறுப்பாளர் சி.சுதானந்தன், சமய விவகாரம் க.ஸ்ரீரங்கநாதன், பத்திராதிபர் சோ.சிவகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக பா.பிரதீபன், உ. தமோனு தன், ரா.ராதிகன், இ.கின்சன், ஸ்ரீ.கேமலன், வே.சொர்ணலிங்கம்.

காப்பாளர் கோ.சிவசுந்தரமூர்த்தி, கணக்காய்வாளர்களாக பா.சத்தியன், பா.நேசரூபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-5)

## மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.ஞானசீலன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவருமான த.குருகுலராசா கலந்துகொள்வார். (க-405)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 16

வதிரி திரு. இருதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் வ.கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார். (3-14)

## விண்ணப்பிக்கலாம்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்கான தேசிய தொழிற்தகைமை மட்டப் பாடநெறியை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சின் கீழ் தொல்பொருள் திணைக்களத்துக்கு பல தரங்களிலான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியும் ஆர்வமும் உடையோர் இவை குறித்த மேலதிக விவரங்களை 15.03.2013 திகதிய அரச வர்த்தமானியின் பகுதி I தொகுதி II (அ) பகுதியில் பார்வையிட்டு விண் ணப்பிக்க முடியும். (3)

# மரண அறிவித்தல்

## இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம்

(இளைப்பாறிய ஆசிரியை,வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி)



கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட இலட்சுமிப்பிள்ளை பரமானந்தம் நேற்றுமுன்தினம் (14.03.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-விசாலாட்சி தம்பதியரின் அருமை மகளும், சின்னத்தம்பி பரமானந்தம் அவர்களின் துணைவியும், நாகேசுவரி, சிவப்பிரகாசம் ஆகியோரின் சகோதரியும், சுலோசனா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கந்தவேள்,வசந்தா ஆகியோரின் அருமை மாமியும், பகீரதன், பார்த்திபன்,இந்து, விஜே ஆகியோரின் பேர்த்தியும், சத்தியா, கோதை, பிரணவன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப.5.00-9.00 மணிவரை அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் (18.03.2013) திங்கட்கிழமை காலை 8.00-10.00 மணிவரை (Highland Funeral Home 3280 Sheppard Ave.East.Scarborough MIT 3K3,ON, CANADA) நடைபெற்று தகனக்கிரியைக்காக 11.00 மணியளவில் பூதவுடல் Elgin Nills Road Cemetery (1591 Elgin mills Road East Richmond Hill On L4S 1m9) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பிரணவன் (பெறா மகன்)
பரமானந்தம், சுலோசனா, பிரபா
(CANADA)
4162698348

20/3, சுவாமியார் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(34587)(5-6-7)

## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

பதிவு இலக்கமும் திகதியும் :- P/46, 08.02.1971

### அறிவித்தல்

கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் 23.03.2013, 24.03.2013.

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு சிற்றம்பலம் தவராசா ஆகிய நான் 2009.04.08 அம் திகதிய 1596/17ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின்படி நடத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | திரு க.செந்தூரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிளை நிலையம், கணேசபுரம். |
| 02 | கனகபுரம் | திரு ந.நாவேந்தன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிராம அபிவிருத்திச் சங்கம், கனகபுரம். |
| 03 | திருநகர் | திரு இ.ஜெகதீபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | முன்பள்ளி, திருநகர் வடக்கு |
| 10 | கிளி-கிழக்கு | திரு க.செல்வகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 11 | இரணைமடு கிழக்கு | திரு இ.விஜயகுமார். கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 12 | கனகாம்பிகைக்குளம் | திரு வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | ஆரம்ப சுகாதார நிலையம் கன.குளம். |
| 13 | திருவையாறு | திரு சி.சிவாகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | திருவையாறு மகாவித்தியாலயம் |
| 14 | இரத்தினபுரம் | திரு க.சசிகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | கிளை நிலையம், இரத்தினபுரம் |
| 17 | உதயநகர் | திரு வே.ஸ்ரீஸ்கந்தராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | முன்பள்ளி உதயநகர் மேற்கு |
| 18 | அம்பாள்குளம் | திரு செ.ஜெயராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | அம்பாள்குளம் அதக பாடசாலை |
| 19 | செல்வாநகர் | திரு சோ.கிருஸ்ணகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.23. சனிக்கிழமை முப. 10.00 | செல்வாநகர் அ.த.க பாடசாலை |
| 04 | ஜெயந்திநகர் | திரு க.செல்வகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | இந்து ஆரம்ப வித்தியாலயம், ஜெயந்திநகர். |
| 05 | கிளி-மேற்கு | திரு இ.விஜயகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | சென்திரேசா பெண்கள் கல்லூரி, கிளி |
| 06 | உருத்திரபுரம் மேற்கு | திரு வே.ஸ்ரீஸ்கந்தராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளை நிலையம், உருத்திரபுரம் மேற்கு |
| 07 | உருத்திரபுரம் கிழக்கு | திரு இ.ஜெகதீபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளைநிலையம் உருத்திரபுரம் மேற்கு |
| 08 | சிவநகர் | திரு க.செந்தூரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | சிவநகர் அத.க.பாடசாலை |
| 09 | புதுமுறிப்பு | திரு சி.சிவாகரன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளை நிலையம், புதுமுறிப்பு |
| 15 | ஆனந்தபுரம் | திரு வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | கிளி-மத்தியகல்லூரி ஆரம்ப பாடசாலை. |
| 16 | பாரதிபுரம் | திரு சோ.கிருஸ்ணகுமார் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | 2013.03.24 ஞாயிற்றுக்கிழமை முப.10.00 மணி | பாரதி வித்தியாலயம், பாரதிபுரம். |

கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.16 ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கு அமைய கூட்ட அறிவுறுத்தல் வழங்கப்படும்

கிளைக்குழு தெரிவுசெய்வதற்கான கிளை பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவுறுத்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கிளை பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவுறுத்தலின் படி கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுத்திணைக்களம்,
கிளிநொச்சி.

திரு சி.தவராசா,
கூட்.அபி.உதவி ஆணையாளர்,
கிளிநொச்சி.

(சி/7484)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAR விற்பனைக்குண்டு
Nisan Sunny (N16) Color- Silver
No-HG xxxx. Manual gear
T.P- 0774521392

# பாரதவின் சகோதரி ஜெனிவாவில் உரை

கொழும்பு, மார்ச்16

கடந்த வருடம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாரதரட்ண பிரேமச் சந்திரவின் சகோதரி, ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ளார்.

**ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் படுகொலை செய்யப்பட்ட பாரதவின் சகோதரி உரையாற்றி உள்ளார்.**

இந்தக் கூட்டத் தொடரில் பாரத குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் பங்குபற்றுவார்கள் என்றும் அவர்களில் ஒருவரான சகோதரியே இலங்கை அரசின் படுகொலை பற்றி இன்று உரையாற்றவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்காக பாரதரட்ண பிரேமச் சந்திர குடும்பத்திற்கு மனித உரிமைகள் சபை அழைப்பு விடுத்திருந்தது இதனையடுத்து இன்று பாரதவின் சகோதரி சுவர்ணா குணரத்னா ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் உரையாற்றுவார் என்று கூறப்படுகிறது. (400)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




28.02.2013 அன்று நடைபெற்ற
யாழ்.பல்கலைக்கழகத்தின்
28ஆவது பட்டமளிப்பு விழாவில்
B.Sc(Bio Science) பட்டம்
பெற்ற செல்வி
**நீலஜா சிவபாக்கியநாதன்**
அவர்களுக்காக இயேசுவை
ஸ்தோத்திரம் செய்வதோடு மேலும்
கர்த்தருடைய ஆசீர்வாதத்தால்
வாழ்வில் மேன்மையடைய
வாழ்த்துகின்றோம்.

வாஞ்சை நிறைவேறுவது ஆத்துமாவிற்கு இனிது
[நீதி மொழிகள் 13:19]

பெருங்குளம் சந்தி
சாவகச்சேரி

வாழ்த்துவோர்:
போ.தேவபாலன் குடும்பம்

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதி, வேம்படிச் சந்திக்கு
அருகில் 3 பரப்பு கொண்ட வீடு, காணி
விற்பனைக்குண்டு. உயர் விலை
கோருவோருக்கு முன்னுரிமை.
**தொடர்பு- 0774086527**
(சனி, ஞாயிறு முழு நாளும், ஏனைய நாள்களில் 4 மணிக்கு பின்)

## வான் விற்பனைக்கு

58-XXXX தொடரிலக்க
Toyata கஜஸ் விற்பனைக்கு
உண்டு.
T.P- 0777902524

## அறிவித்தல்

**15.03.2013 அன்று அதிர்ஷடம் பார்க்க இருந்த அராலி கிழக்கு அம்பாள் முன்பள்ளி காணிக் கொள்வனவு நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 14.04.2013 சித்திரைப் புத்தாண்டு தினத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.**

அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகம், அராலி

## மரண அறிவித்தல்



### *பொன்னையா பரமேஸ்வரன்*

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை புகுந்த இடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் கடந்த (11.03.2013) திங்கட்கிழமை ஜேர்மனியில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புளியங்கூடல் லைற் வேலுப்பிள்ளை -தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் லுகாஜினி (பிரான்ஸ்), மதுராங்கனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரிதேவி மற்றும் பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), மகாலிங்கம் (சுவிஸ்), மேனகராணி (பிரான்ஸ்), சரஸ்வதி (கொழும்பு), மகேந்திரன் ஆகியோரின் சகோதரனும், மற்றும் காலஞ்சென்ற சிவகடாட்சம் (மெக்கானிக்), இராசரத்தினம் மற்றும் இராசலட்சுமி, காலஞ்சென்ற மகாதேவா மற்றும் நவரத்தினம், அமிர்தாதேவி, சிவசுப்பிர மணியம் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும், சந்திர குமாரின் (பிரான்ஸ்) மாமனும், சண்பகா (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்), சஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற மோகன் மற்றும் மோகன வசந்தா, மோகனகுமார், ரவிச்சந்திரன், உமாதேவி (ஆசிரியை, யா/வேலணை மத்திய கல்லூரி), செந்தமிழ்ச்செல்வன் (உள்ளககணக்காய்வு உத்தியோகத்தர்- சமுர்த்தி அதிகார சபை மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) அருட்செல்வன் (ஊழியா நம்பிக்கை பொறுப்பு நிதியம் யாழ்ப்பாணம்), ஸ்ரீதேவி (பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2013) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஜேர்மனி Greeven நகரில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Stauffen Berg Str -11,
48268. Greeven,
Germany.
004925711250209

தகவல்: பேரமகன்கள்
ஞா.செந்தமிழ்ச்செல்வன், ஞா.அருட்செல்வன்
*புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்துறை.*
*0776162092, 0771641847*

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



26.01.2013 அன்று அமரத்துவமடைந்த

*அமரர்* **மயில்வாகனம் நந்தீஸ்வரன்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் கல்வியங்காடு திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேளாதோப்பு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம் : 19.08.1947
மறைவு : 27.08.2012

தோற்றம் : 19.07.1946
மறைவு : 31.05.2000

அமரர் **சின்னப்பு நடராசா** | அமரர் **இராசம்மா நடராசா**

குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வங்களே...
அப்பா......... அம்மா.......
உங்கள் அன்பாலும்
எல்லையில்லா அர்ப்பணிப்பாலும்
தலை நிமிர்ந்து வாழுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த
கவலை மறையாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கத்தாப்பிட்டி வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(27891)(8.14.16)

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் பிரதீப் (பிரபு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.585, பொன்னகர், துணுக்காயை நிரந்தர வதிவிடமாகவும், யாழ். ஆனைக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் பிரதீப் (பிரபு) கடந்த 13.03.2013 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் கனகரத்தினம் - காலஞ்சென்ற சிவகரி தம்பதியரின் அன்பு மகனும், சுஜித்தா, ஜெனாத்தனன், தேனுகா, ஜெனரூபி, சாருஜன் ஆகியோ ரின் சகோதரனும், காலஞ்சென்ற மருதையினார் மற்றும் பார்வதிப்பிள்ளை, சின்னமணி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வடக்கு,
ஆனைக்கோட்டை.


தகவல்
**ம. கனகரத்தினம்**
**(தந்தை).**


(34588)(45-6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 107ஆவது வடக்கின் பெரும் போர்

# மழையும் பின்வரிசை வீரர்களும் மத்திய கல்லூரியைக் காத்தனர்









யாழ்ப்பாணம்,மார்ச் 16

மழையின் குறுக்கீட்டாலும், மத்திய கல்லூரியின் மிக மிக நிதானமான துடுப்பாட்டத்தாலும் 107 ஆவது வடக்கின் பெரும் போர் சமநிலையில் முடிவடையும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சென்.ஜோன்ஸ் அணியும், யாழ்.மத்திய கல்லூரி அணியும் 107 ஆவது வடக்கின் பெரும் போரில் மோதிக் கொண்டன.

முதல் நாள் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. அந்த அணியின் தலைவர் அமிர்தயனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 183 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலளித்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை சென்.ஜோன்ஸ் அணியின் லோகதீஸ்வரின் அபார பந்துவீச்சுக்கு பறிகொடுத்தது. இதனால் முதல்நாள் ஆட்ட நிறைவில் 4 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை பெற்றிருந்தது. லோகதீஸ்வர் 3 இலக்குகளை கைப்பற்றியிருந்தார். களத்தில் சௌமிதரனும், யூலியஸ் கனிஸ்ரனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றுக் காலை இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டத்தின் இடையிடையே மழை குறுக்கிட்டது. எனினும் மழை விட்டபின்னர் ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மழையின் உதவியாலும், மத்திய கல்லூரியின் பின்வரிசை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தாலும் நேற்றைய ஆட்ட நேர நிறைவுவரை மத்திய கல்லூரியின் முதல் இன்னிங்ஸை முடிவுக்குக் கொண்டுவர சென்.ஜோன்ஸ் அணியால் முடியவில்லை.

குறிப்பாக சௌமிதரன், கனிஷ்டன், அலன்ராஜ், நிறோஜன் ஆகியோர் ஓட்டங்களைக் குவிப்பதைவிடவும், அணியின் இலக்குகளை சரியவிடாது தடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள். அதிகளவான பந்துகளைச் சந்தித்த போதும் ஓட்டங்களை நத்தை வேகத்திலேயே இந்த வீரர்கள் பெற்றுக்கொண்டார்கள். இது பார்வையாளர் தரப்பில் சலிப்பை ஏற்படுத்தினாலும், யாழ்.மத்திய கல்லூரியின் சரிவை இத்தகைய நிதான ஆட்டமே ஓரளவுக்கு தடுத்து நிறுத்தியுள்ளது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் சௌமிதரன் 100 பந்துகளை சந்தித்து 28 ஓட்டங்களையும், யூலியஸ் கனிஷ்டன் 110 பந்துகளைச் சந்தித்து 23 ஓட்டங்களையும், சஞ்சயன் 9 பந்துகளைச் சந்தித்து 2 ஓட்டங்களுடனும் தமது இலக்குகளைப் பறிகொடுத்தனர். களத்தில் 108 பந்துகளைச் சந்தித்து 18 ஓட்டங்களுடன் அலன்ராஜும், 44 பந்துகளைச் சந்தித்து 12 ஓட்டங்களை எடுத்த நிலையில் நிறோஜனும் ஆட்டமிழக்காது உள்ளனர். இரண்டாம் நாள் ஆட்ட நிறைவில் மத்திய கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பில் லோகதீஸ்வர் 4 இலக்குகளையும், காணாமிர்தன் 2 இலக்குகளையும், நிலோஷன் ஓர் இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

போட்டியில் இன்னும் ஒரு நாள் ஆட்டம் மாத்திரமே மீதமுள்ள நிலையில், பெரும்பாலும் முடிவு சமநிலையில் முடிவதற்கான சாத்தியங்களே தென்படுகின்றன.

(ங-23-86)

## விளையாட்டே இனங்களை இணைக்க உதவுகிறது



### சுசந்திக தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.16

இனம், மதம், மொழி என்ற பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட விளையாட்டுத் துறையே வழிசமைத்துள்ளது.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உப தலைவியும், குறுந்தூர ஓட்ட வீராங்கனையுமான சுசந்திக ஜெயசிங்க.

வடமாகாண விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுக்கான செயலமர்வு ஒன்று யாழ்ப்பாணம் தேசியக் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது சுசந்திக மேலும் தெரிவித்ததாவது:

நான் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் போது சிங்களப் பெண் என்ற ரீதியில் பங்குபற்றவில்லை. இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வீராங்கனை என்ற அடிப்படையிலேயே ஒலிம்பிக் பங்குபற்றி, நாட்டுக்குப் பதக்கத்தையும் வெற்றியையும் தேடிக் கொடுத்தேன்.

என்னுடன் போட்டி போட்டு ஓடி பதக்கங்கள் வென்றவர்கள் ஊக்க மருந்து பயன்படுதிய குற்றச்சாட்டில் பதக்கங்களை பறிகொடுத்து விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் நான் அத்தகைய தவறான செயற்பாடுகளில் ஈடுபடாததால் இன்று உங்கள் முன்னிலையில் நிற்கின்றேன்.

மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்து பல்வேறு இடர்களை எதிர்நோக்கியிருந்த போதும் எனது விடா முயற்சியும், கடினமான உழைப்புமே என்னை இந்த நிலைக்கு உயர்த்தியது.

அது போலவே இங்குள்ள இளைஞர்கள், யுவதிகளும் திறமை வாய்ந்தவர்கள். அவர்களின் திறமைகளை வெளிக் கொணர இந்தத் துறை சார்ந்தவர்களே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள வீர வீராங்களைகளின் திறமைகளை வெளிக் கொணர்ந்து சர்வதேச போட்டியகளில் பங்கு பற்றும் வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். இதற்கு என்னால் முடிந்த சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன் - என்றார்.

(ங-23-400)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

இரவு - 7மணி

ஆலடிசிந்து 'பி' அணி எதிர் இணுவில் அறிஞர் ''ஏ'' அணி

★ ★ ★

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்திலும், உடற்பயிற்சிப் போட்டி முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

வவுனியாப் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மாவட்ட மட்ட கபடிப்போட்டி வவுனியா நகர மைதானத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

★ ★ ★

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆண், பெண் அணிகளுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

17, 19 வயது ஆண்கள் பிரிவுகளுக்கான ஆட்டங்கள் புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்திலும், 15 வயது ஆண்கள் மற்றும் 19 வயது பெண்கள் பிரிவுகளுக்கான ஆட்டங்கள் சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

(ங-288- 23 -400-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சூழலுக்கு ஆஸி



இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது நாள் முடிவில் இந்திய அணி சுழலுக்கு ஆஸ்திரேலியா மீண்டும் பணிந்துபோகத் தொடங்கியுள்ளது.


போட்டியின் முதல்நாள் மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்தது. எனவே, நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய ஆஸ்திரேலிய அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 7 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதலாவது இலக்குக்காக 139 ஓட்டங்களைப் பகிர்ந்த அந்த அணி, அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக எட் கொவான் 86 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 71 ஓட்டங்களையும், ஸ்டீவென் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவீந்திர ஜடேஜா 3 இலக்குகளையும், இஷாந்த் சர்மா 2 இலக்குகளையும், ரவிச்சந்திரன் அஷ்வின், பிரக்ஜான் ஓஜா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ந)

# இங்கிலாந்து முன்னிலை



நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி முன்னிலையைப் பெற்றுள்ளது.

2 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, 465 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதலாவது பந்திலேயே ஜொனதன் ட்ரொட் ஆட்டமிழந்தார். அந்த அணி 7 இலக்குகளை இழந்து 374 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியபோது இணைந்துகொண்ட மற் பிரையரும், ஸ்டீவன் ஃபின்னும் இணைந்து 83 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதனால் அந்த அணி 465 ஓட்டங்களை எட்டமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்ரொட் 121 ஓட்டங்களையும், நிக் கொம்ப்டன் 100 ஓட்டங்களையும், மற் பிரேயர் 82 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 73 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக புரூஸ் மார்ட்டின் 4 இலக்குகளையும், ட்ரென்ட் போல்ட்ற், நீல் வக்னர், கேன் வில்லியம்ஸன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் கேன் வில்லியம்ஸன் 32 ஓட்டங்களோடு ஆட்டமிழக்காமல் உள்ளார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 2 இலக்குக்களையும் ஜேம்ஸ் அன்டர்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ந)

# சிம்பாப்வேயை சுருட்டிய மேற்கிந்தியத் தீவுகள்



மேற்கிந்தியத்தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியை மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

கெனிஸ்டன் ஒவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 4 இலக்குகளையும், ஷேன் ஷிலிங்பேர்ட் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி டெரன் சமியின் அதிரடியான 73 ஓட்டங்கள், டினேஷ் ராம்டினின் 62 ஓட்டங்கள், மார்லன் சாமுவேல்ஸின் 51 ஓட்டங்கள், கிறிஸ் கெய்லின் 40 ஓட்டங்கங்கள் என்பவற்றின் துணையோடு 307 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக கைல் ஜார்விஸ் 5 இலக்குகளையும் டென்டய் சத்தர, ஹமில்ற்றன் மஸகட்ஸா இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

96 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 107 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அந்த அணி சார்பாக கிரெய்க் ஏர்வின் அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக ஷேன் ஷிலிங்பேர்ட் 6 இலக்குகளையும், ஷனொன் கப்றியல் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

12 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஷேன் ஷிலிங்பேர்ட் தெரிவானார். (ந)

# ஏன் மறைத்தார்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான மைக் ஹஸி அனைவரும் அதிர்ச்சியடையும் வகையில்அண்மையில் திடீரென ஓய்வு பெற்றிருந்தார்.

தான் ஓய்வுபெறும் விடயத்தை வெளியில்கசியவிடாமல் அதனை ரகசியமாக எதற்காக வைத்திருந்தார் என்பதை இப்போது மைக் ஹஸியே தெரிவித்துள்ளார்.

''எனக்கு ஒவ்வொரு டெஸ்ட் போட்டியையும் சுவைத்து விளையாடுவதுதான் பிடிக்கும். ஆஸ்திரேலியாவில் நடைபெறும் அந்தத் தொடர் முழுதிலும் விளையாட ஆசைப் பட்டேன்.

நான் முன்னரே ஓய்வு பெறும் எண்ணத்தை வெளியிட்டிருந்தால் அவர்கள் நிச்சயம் என்னை அணியிலிருந்து நீக்கியிருப் பார்கள். கடைசி 2 டெஸ்டில் நான் விளையாடியிருக்க முடியாது. அதனால் சிறிதளவு சுயநலத்துடன் செயல் பட்டேன்.

மைக்கேல் கிளார்க் அணியை நன்றாகக் கட்டமைத்து வருகிறார். அணியில் நட்புணர்வும் சகோதரத்துவமும் உருவாகி அணி பழைய ஆதிக்க நிலைக்குத் திரும்புவதற்கு சிறிது காலம் பிடிக்கும். என்றார் ஹஸி.

# காதலனை உதைத்த வீராங்கனை



முன்னாள் காதலரை அடித்து உதைத்தார் என்ற குற்றச்சாட்டில் டென்னிஸ் வீராங்கனை ஒருவர் கைதாகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜெனீபர் கேப்ரியாட்டி என்ற முன்னாள் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனை இவ்வாறு கைதானவராவார். இவர் 3 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்றிருந்தார். 1992ஆ ம் ஆண்டு ஒலிம்பிக்கிலும் தங்கப் பதக்கம் வென்றவர்.

37 வயதான ஜெனீபருக்கும் முன்னாள் பல்கலைக் கழக கோல்ப் வீரரான இவான் பிரானன் என்பவருக்கும் இடையே காதல் பிறந்தது. 10 மாதமே நீடித்த இந்த காதல் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முறிந்தது.

இந்த நிலையில் கடந்த மாதம் 14ஆம் திகதி காதலர் தினத்தன்று உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த முன்னாள் காதலரான இவான் பிரானை, கேப்ரியாட்டி அடித்து உதைத்துள்ளார். அவரது மார்பில் 4 முறை கேப்ரிடியாட்டி குத்தியதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புகாரின் பேரில் ஜெனீபர் கேப்ரியாட்டி கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. கேப்ரியாட்டியும் உதைபந்து விளையாடும் காலக்கட்டத்தில் பல சர்ச்சையில் சிக்கியவர். . ஊக்க மருந்து பயன்படுத்திய அவர் 1994ஆம் ஆண்டு தற்கொலைக்கு முயன்று அதில் இருந்து உயிர்தப்பியிருந்தார். (ந)

# சாய்னா முன்னேற்றம்



ஒலிம்பிக்கில் வெண்கலப் ப்தக்கம் வென்ற இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேஹ்வால் உலக தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்துள்ளார்.

கடந்த வாரம் வரை மூன்றாம் இடத்தில் இருந்த சாய்னா இங்கிலாந்து பட்மின்ரன் தொடரில் அரையிறுதி வரை முன்னேறியதன் மூலம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.

இவர்களைப் போன்று உலகத் தரவரிசையில் இந்தியாவைச் சேர்ந்த அஜய் ஜெயராம் 31ஆவது இடத்திலும், குருசாய்தத் இரண்டு இடங்கள் முன்னேறி 36ஆவது இடத்திலும், சவுரப் வர்மா நான்கு இடங்கள் முன்னேறி 39ஆவது இடத் திலும் உள்ளனர். வளர்ந்து வரும் வீராங்கனை சிந்து 16ஆவது இடத்தை தக்க வைத்துள்ளார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப் பகலில் ஆலயத்துக்குள் உண்டியல் உடைத்த சிறுவர்கள்

## இருவரும் சீர்திருத்தப் பாடசாலைக்கு

வலி.தென்மேற்கு,மார்ச் 16

பட்டப்பகலில் ஆலயத்துக்குள் புகுந்து உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடிய இரு சிறுவர்களைப் பொதுமக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பணத்தைக் கைப்பற்றிய பொலிஸார் சிறுவர்கள் இருவரையும் கைதுசெய்து யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தினர். நீதிவான் இருவரையும் சீர்திருத்தப் பாடசாலையில் சேர்க்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார்.

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்துக்குள் பட்டப்பகலில் நுழைந்த மூன்று சிறுவர்கள் அங்கிருந்த உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருடும் போது பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். இவர்களில் இருவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள், இது குறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸ் பொறுப்பதிகாரி மல்ஹமே தலைமையில் ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற சார்ஜன்ட் சுரவீர, கான்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திர, வசீபன் ஆகியோர் பணத்தைக் கைப்பற்றியதுடன் இரு சிறுவர்களையும் கைதுசெய்து யாழ்ப்பாணம் சிறுவர் நீதி மன்ற நீதிவானிடம் முற்படுத்தினர். நீதிவான் இருவரையும் சீர்திருத்தப் பாடசாலையில் சேர்க்கும்படி உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்துள்ளார்.

இந்த திருட்டுடன் சம்பந்தப்பட்ட தப்பியோடிய மூன்றாவது சிறுவனைத் தேடிக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த-115)


## கண்ணீர் அஞ்சலி



பளை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த
கிளி / கிலாலி றோ.க.த.க பாடசாலையின் அதிபர்
செ.கபிரியேற்பிள்ளை
அவர்களின் பாசமிகு தந்தை
அந்தோனிப்பிள்ளை
செபஸ்ரியான்பிள்ளை அவர்கள் கடந்த
(13.03.2013) புதன்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின்ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலர்,அதிபர்கள்,
பளை கல்விக்கோட்டம்.

## NALIN IT

எங்கும் இல்லாத
மிகக்குறைந்த விலையில்
அனைத்து வகை RAM களையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

- 2GB DDR III Ram — Rs 2,400.00
- 4GB DDR III Ram — Rs 3,500.00
- 1GB DDR II Ram — Rs 3,500.00
- 2GB DDR II Ram — Rs 5,500.00
- 1GB DDR I Ram — Rs 6,500.00
- 4GB Micro SD — Rs 640.00
- 8GB Micro SD — Rs 1,200.00

(with cover)

hp RAM
1 year warranty

NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD
195/2, Palaly road,Parameswara Junction, Jaffna.
TP-0212221121
0777667975
facebook/nalinit

## CIMA-UK கணக்கியல்-சான்றிதழ் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்


மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிக்காலம் 3 மாதங்கள். 16 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும். உத்தியோகத்தர்கள். பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவு 17 ந் திகதி ஆரம்பமாகின்றது. இக் கற்கைநெறியை பயில்வதற்கான 16000 ரூபா வரையிலான புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இப் புலமைப்பரிசில் மூலம் CIMA கல்வியை பயில விரும்பும் மாணவர்கள் இல 324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்திற்கு 17ந்திகதிக்கு முன் நேரில் சமூகம் தரவும்.

## விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தி மட்டுவில் மண்ணுக்கு பெருமை சேர்த்த மண்ணின் மைந்தர்களான

Best Wishes





Best Wishes

உயர்திரு
வேலுப்பிள்ளை கந்தசாமி
(அதிபர், யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில்)

உயர்திரு
சிவசம்பு மதியழகன்
(உதவிக்கல்விப்பணிப்பாளர் ஊவா மாகாணம்)

ஆகியோருக்கான கௌரவிப்பு விழா
காலம் - இன்று (16.03.2013) சனிக்கிழமை மு.ப.10.00
இடம் - மட்டுவில் மத்தி, பொதுநோக்கு மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்றைய விழாச் சிறப்புறவும் கதாநாயகர்கள் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று சேவையால் உயரவும் எல்லாம் வல்ல வைரவப்பெருமானின் அருள் கிடைக்க வேண்டி நிற்கும்
தவம் போட்டோ & அல்பம்ஸ்
167, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# சுதர்சனக் கிரியா நிகழ்வு நாளை

வாழும் கலை பாகம் 1 பயிற்சி எடுத்தர்வர்களுக்கான சுதர்சனக்கிரியா நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் கோயில் வடக்கு வீதி மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று வாழும் கலை சமயம் அறிவித்துள்ளது. (ஒ)


## Diploma in Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical
Leading To Bsc Pharmacy
Addmissions Open
Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/-
உடனடி வேலை வாய்ப்பு!!
Starting on 16-03-2013

Visalam Wide and Beyond
Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695

## வாகனம் விற்பனைக்கு

NP- PR xxxx தொடர்
இலக்கமுடைய TATA 207
மொடல் பிக்கப் Body உடன்
(27000Km தூரம் ஓடிய)
விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0718474535
(செ.சத்தியா)

## ST. ANTONY'S ல்

கணினி மலிவு விற்பனை

HP FULL SET COMPUTER
FREE - HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM மேலும்
LAPTOP PC, TABLET PC, DESK TOP PC
SONY 14" T.V-8900/-
T.V16" LED-19850/
மிகவும் மலிவு விலையில்

24750/= மட்டும்
ஒரு வருட உத்தரவாதம்
187, k.k.s Road Jaffna.
021 222 4865,
0750698608

## வேலைவாய்ப்பு

கணினியில் Pagemaker இல் தட்டச்சு செய்யக்கூடியவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர் மட்டும் தொடர்பு கொள்ளவும். (இடம்: யாழ்) மாத வேதனம் : 15000/=

தொடர்பு:
0212219815/0718474325 (34370) (10,6,7)

## IELTS

A1 B1 B2
Quick Preparation Class Av. Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
KU Education, 75 Temple Road, Jaffna Central Centre


## கலந்துரையாடல்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட அதிபர்கள் மற்றும் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுக்கும் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையிலான ''விளையாட்டின் ஊடாக நல்லுறவை ஏற்படுத்துதல்'' என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. (ந-23)




## இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் திரு.எஸ்.என்.செல்வராசா தலைமையில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அம்பாள் ஆலய உபயகாரர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவரையும் பொதுக்கூட்டத்தில் கலந்து அம்பாளின் ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

ந.சிவகுமார்
செயலாளர், அறங்காவலர் சபை.

## துரிதகதியில் துல்லியமான பதிப்பு

- விசிட்டிங்காட்
- பில்புத்தகம்
- லேபல்கள்
- நினைவுமலர்கள்
- பருவகால மலர்கள்
- சஞ்சிகைகள்
- போஸ்டர்கள்
- லேட்டபாட்
- சான்றிதழ்கள்
- அழைப்பிதழ்கள்
- CD கவர்கள்
- CD ஸ்ரிக்கர்கள்

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும்
நியாய விலை
உயரியதரம்

டிஜிற்றல் முறையில்
கலர் பிறின்ட்
xerox
யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875
கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியில் கற்கை நெறிகள்

### CBF & DBF

Batch 1- Saturday & Sunday 7.00- 1.00 Medium English
Batch 11- Saturday & Sunday 7.00- 1.00 Medium Tamil
Batch 111- Saturday & Sunday 12.00- 5.00 Medium Tamil
Batch IV- Weekdays 3.00- 6.00 Medium Tamil

### Chartered CAB & CAB 11

Batch 1- Saturday & Sunday 8.00- 1.00 Medium English
Batch 11- Saturday & Sunday 8.00- 1.00 Medium Tamil
Batch 111- Weekdays 3.00- 6.00 Medium Tamil

### External degree

GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM (part 1), BCOM (part 11), BCOM (final)

Further Details.

JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382, 2221947


## மரண அறிவித்தல்



திருமதி சபாரட்ணம் நாகரட்ணம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரட்ணம் நாகரட்ணம் நேற்று (15.03.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், பரந்தாமன், மகாலக்சுமி, காலஞ்சென்ற வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், சிவசக்தி, தயாளன் ஆகியோரின் மாமியும், பிரணவன், சியாம்ளா, பிரணாளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார் பகுதி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழகம் முழுவதும் மாணவர்களால் நடத்தப்பட்டுவரும் போராட்டங்களில் இதுவரையில் தமிழ் அமைப்புக்களும், கட்சிகளும் பொது மக்களுமே பங்குகொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் நடிகர் சிலம்பரசனும் மாணவர் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

# தமிழ்நாட்டு எழுச்சி ஏனைய மாநிலங்களில் மனச்சாட்சிக் குரலாக வெளிப்படவேண்டும்

## பிரிட்டன் தமிழர் பேரவை வேண்டுகோள்

தமிழ்நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் எழுச்சி ஏனைய மாநிலங்களில் மனச்சாட்சியின் குரலாக வெளிப்பட வேண்டும் என்று பிரிட்டன் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக மேற்படி பேரவை வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அப்பழுக்கில்லாத உங்கள் உணர்வுகளுக்கு நாம் தலை சாய்த்து வணங்குகின்றோம். மாணவர்கள் அநீதியையும் அடக்கு முறையையும் எதிர்க்கும் உணர்வு உலகளாவியது.

நீதிக்கான போராட்டத்தில் நாம் இதுவரை விலை மதிப்பில்லாத பல உயிர்களைக் கொடுத்துள்ளோம். இருந்தும் உலகின் நீதி எமக்குக் கிடைக்கவில்லை. இதுவரை நாம் கொடுத்த விலை போதும், உங்களை வருத்திக் கொண்டு மானுட தர்மத்துக் காகப் போராடுவது பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது எனினும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உங்களைப் போலவே 1970களில் மாணவர்கள், இளைஞர்கள் ஈழத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இன அழிப்பைத் தடுத்து நிறுத்த வெகுசனப் போராட்டங்களில் இறங்கியபோது போராட்டத்தின் நியாயப்பாடு சாதாரண மக்களிடையே வேகமாகப் பரவியது. அதன் தார்மிக பலம் வலுப்படுத்தப்பட்டது.

உங்களைப் போலவே 2000 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இலங்கையின் இராணுவ அடக்கு முறையின் மத்தியில் துணிந்து நின்று 'பொங்கு தமிழ்'' முழக்கத்தின் மூலம் எழுச்சியை ஏற்படுத்தியது உலகின் மனச்சாட்சிக்கு விடுத்த சவாலாக அமைந்தது. ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் வாழ்ந்த மக்களின் உள்மன வெளிப்பாடாக அது அமைந்தது. - என்றுள்ளது. (வ)

# அனைத்துக் கட்சிப் பேரணியில் மஹிந்தவின் பொம்மை எரிப்பு



திருக்கழுக்குன்றம், மார்ச் 16

திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி பேரணியில் திடீரென இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப் பொம்மை எரித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களைப் பொலிஸார் எச்சரித்து அனுப்பினர்.

இலங்கைத் தமிழர்களுக்காக அனைத்துக் கட்சிகள், இயக்கங்கள், வியாபாரிகள், மாணவர்கள் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் நேற்று முன்தினம் மாபெரும் பேரணி நடைபெற்றது. எம்.ஜி.ஆர். சிலை அருகில் இருந்து புறப்பட்ட பேரணி மேட்டுத் தெரு, பஜார் வீதி வழியாக பஸ் நிலையம் சென்றது. அதில் சுமார் 1500 பேர் பங்கேற்றனர். அவர்கள் கறுப்புக் கொடி ஏந்தி கோஷமிட்டபடி சென்றனர்.

பேரணி முடிவில் பஸ் நிலையத்தில் திடீரெனச் சிலர் ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை எரித்தனர். அவர்களைப் பொலிஸார் கைது செய்ய முயன்றனர். இதனால் வாக்குவாதம், பரபரப்பு ஏற்பட்டன. அதன் பின்னர் அவர்களைப் பொலிஸார் எச்சரித்து அனுப்பினர்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சர்வதேச போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும், ஈழத் தமிழர்களுக்குத் தனி மாகாணம் அமைக்கக் கோரியும், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் உள்ளவர்களை விடுவித்து சுதந்திரமாக வாழ வழிசெய்ய வேண்டும், ஐ.நா.சபையில் இந்தியா தனி தீர்மானம் கொண்டு வரவேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியும் மேற்படி பேரணி நடைபெற்றது. (வ)

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக திங்களன்று வகுப்புப் புறக்கணிப்பு

## தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு ஏற்பாட்டில் தமிழகத்தில்

சென்னை, மார்ச் 16

ஈழதமிழர்களுக்கு ஆதரவாக, நாளை மறுதினம் திங்கட்கிழமை வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட போவதாக, தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக, தமிழகத்தில் மாணவர்கள் போராட்டம் சூடு பிடித்து வருகிறது. இந்தநிலையில், மாநில அளவில் கல்லூரி மாணவர்களை இணைந்து, தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழுவை உருவாக்கியுள்ளனர். இது குறித்து அந்தக்குழுவின், ஒருங்கிணைப்பாளரும் சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவியுமான திவ்யா மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவம், பொறியியல், சட்டம், கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் இணைந்து, தமிழீழத்துக்கான மாணவர் போராட்ட குழுவை அமைந்துள்ளோம். இந்தக்குழுவில், 19 மாவட்டங்களை சேர்ந்த, 50 கல்லூரி மாணவர்கள் இணைந்துள்ளனர். 31 மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களையும் போராட்டத்தில் ஒன்றிணைக்க உள்ளோம்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை தமிழீழத்துக்கான மாணவர் போராட்டக் குழு சார்பில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும், வகுப்புகளைப் புறக்கணித்து, வீதி மறியல் மற்றும் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளோம்.

ஐ.நா., மன்றத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம், இலங்கை அரசுக்கு ஆதரவாக இருப்பதை ஏற்க முடியாது. ஈழத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு, இந்தியா தனி தீர் மானத்தை கொண்டு வர வேண்டும். இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்தி, தனி ஈழம் உருவாக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் -என்றார். (வ)

# லொயோலாக் கல்லூரி மாணவரால் கையெழுத்து இயக்கம் ஆரம்பம்

சென்னை, மார்ச் 16

சென்னை லொயோலா கல்லூரி மாணவர்கள், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்கக்கோரும் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பான எட்டுக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆரம்பித்த உண்ணாவிரதத்தை கடந்த 11 ஆம் திகதியுடன் முடித்துக் கொண்ட லொயோலா கல்லூரி மாணவர்கள், தற்போது அடுத்த கட்டப் போராட்டத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தைப்போல், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்து இயக்கமும் மாநிலம் முழுவதும் பரவும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# உண்ணாவிரதமிருந்த மாணவரில் 13 பேர் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

இலங்கை அரசை கண்டித்து தொடர்ந்து 4 ஆம் நாளாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களில் இதுவரை 13 பேர் மயக்கமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திச் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மாணவர்கள் 3 பேர் மயக்கமடைந்தனர். நேற்று முன்தினம் 4 ஆவது நாளாக உண்ணாவிரதத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருந்த 35 மாணவர்களில் 10 மாணவர்கள் உட்பட இதுவரை 13 மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ)

# இலங்கைக்கு எதிரான அமெ. தீர்மானத்துக்கு ஆதரவளிக்குக!

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு வலியுறுத்து

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு உத்வேகமும் ஆதரவளிக்குமாறு அமெரிக்காவிடம் ஒபாமாவுக்கான தமிழர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

2009 ஆம் ஆண்டு, மேற்கு நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். அதில் இலங்கையில் இறுதிப் போரில் பல ஆயிரக்கணக் கானோர் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் ஒன்று கொண்டு வந்தனர்.

அதற்குப் பதிலாக இலங்கையின் நட்பு நாடுகள் இலங்கையை வாழ்த்தி ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினர். அதன் பின்னர், அமெரிக்கா ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் மூலம் இறுதிப்போர் பற்றி ஒரு நிபுணர் குழுவை அறிக்கையை தயாரிக்க ஏற்பாடு செய்து அதன் மூலம் பொது மக்கள் கொலைகள், போர் குற்றம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறல்கள் பற்றிய அறிக் கையை தயாரித்து வெளி யிட்டது.

பிரிட்டனின் சனல் 4 என்றும் தொலைக்காட்சி ஊடகம் 14.11.2011 அன்று இலங்கையின் கொலைக் களங்கள் என்றும் ஆவணப் படத்தை வெளியிட்டது. இதில் இறுதிப்போரில் நடைபெற்ற இனப்படு கொலையையும், நடை பெற்ற கொடூரமான போர்க் குற்றங் களையும் வெளியிட்டது.

அந்த சான்றுகள் அனைத்தும் அமெரிக்காவுக்கு இலங்கை மீது கோபமடைய வைத்தன. போர் நடைபெற்றகாலத்தில் போரை நிறுத்தும்படி பல தடவை அமெரிக்கா கூறியும் நிறுத்தாமல் போரில் ஈடுபட் டது. அதனால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டமையானது இலங்கை மீது ஒபாமா நிர்வாகத்துக்கு கோபமடைய வைத்தது. இதன் காரணத்தாலேயே கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவர காரணமாக அமைந்தது. அதன் மூலம் இலங்கையில் நடைபெற்ற விடயங்கள் சர்வதேசத்துக்கு வெளிக் கொண்டு வரப்பட்டது.

அமெரிக்கா இம்முறை போர்குற்றத்துக்கு பொறுப்பான சிங்கள தலைவர்களை தண்டிக்க வேண்டும் என்றே தீர்மானம் கொண்டுவர விரும்பியது. ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உள்ள சில உறுப்பு நாடுகள் அதனை எதிர் பார்கள் என்பதற்காக அதனைக் கொண்டுவர முடியவில்லை.

எனினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதுடன் அது தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதனையும் வரவேற் றுள்ளது. இது முடிவில் தமிழர்களின் இலக்கை அடைவதற்கான ஒரு பொறிமுறையாக அமையும். நாம் அனைவராலும் கைவிடப்பட்ட ஒரு இனம். எமக்கு உதவி செய்வதற்கு எவரும் இல்லை.

எனவே எம்மை சிங்களவர்களிடம் இருந்து மீட்பதானது வல்லரசான அமெரிக்காவின் கையிலேயே தங்கியுள்ளது. ஆகவே தமிழர்கள் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்திற்கு ஆதரவும் ஊக்கமும் கொடுப்பதாக இருக்கவேண்டும் -என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிகளின் கூட்டுத் தொடர்பில் மனோ-ரணில் இடையே முரண்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தில் மேலும் மேலும் உள்ளக முரண்பாடுகள் தோற்றம்பெற்றுவருகின்றன. அஸாத் ஸாலியின் புதிய கட்சி அங்குரார்ப்பணத்தில் தோன்றிய முரண்பாடு தற்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மனோ கணேசனுக்கும் இடையிலான முரண்பாடு வரை வந்துள்ளது.

சர்வகட்சி மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் விடுத்த கூட்டறிக்கையிலிருந்து தமது கட்சியின் பெயரை நீக்குமாறு ஐக்கிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் பகிரங்கமாகக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் நடந்த எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்க ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 2009 ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு முன்வந்து நிறைவேற்றிய பிரேரணையின் படி, இந்த நாட்டில் வாழும் அனைத்து இனத்தவர்களின் ஒப்புதலைப் பெற்று அரசியல் தீர்வைக் காணும் முயற்சியை முன்னெடுக்கும் படியும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தும் செயற்பாட்டை மே 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் படியும் இந்த நோக்கில் உடனடியாகச் சகல தரப்பினரையும் உள்ளடக்கிய சர்வகட்சி மாநாடு ஒன்றையும் கூட்டும்படி அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாம் இந்தக் கோரிக்கையை எதிர்ப்பதுடன் எமது கட்சியின் பெயரை நீக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தினோம்.

தற்போதைய சூழலில் சர்வகட்சி மாநாடு இலங்கை அரசின் காலம் கடத்தும் தந்திரோபயத்துக்கே வழிவகுக்கும். மேலும் இனவாதக் கட்சிகளுக்குத் தேவையில்லாத வாய்ப்புக்களை வழங்கி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், 13ஆவது திருத்தத்தையும் இல்லாமல் செய்துவிடும்.

எனவே தற்போதைய சூழலில் சர்வகட்சி மாநாடு தேவையில்லாதது என்றார்.

இதேவேளை எதிர்க் கட்சிகளின் கூட்டிலுள்ள அஸாத் ஸாலி தனது புதியகட்சி அங்குரார்ப்பண நிகழ்வுக்கு ஆளும் தரப்பு அமைச்சர்களையும் அழைத்துள்ளமையால் கூட்டு ஏற்கனவே பிளவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# மருத்துவரான பெண்ணின் தாலிக் கொடி அறுத்தெடுப்பு

வடமராட்சி, மார்ச் 16

தண்ணீர்க் குழாயில் முகம் கழுவிக் கொண்டிருந்த ஆயுள்வேத வைத்தியரான பெண்மணியின் தாலிக் கொடியையும் தோடு ஒன்றையும் இனந்தெரியாத நபர் ஒருவர் அறுத்துச் சென்றார்.

இச்சம்பவம் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் உள்ள ஆயுள்வேத வைத்தியரான திருமதி சசிகலா கணேசமூர்த்தி என்பவரின் வீட்டில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அறுத்துச் செல்லப்பட்ட தாலிக் கொடி 7 பவுண் நிறையுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை வேளை கணவர் கோயிலுக்குச் சென்றிருக்க மனைவியான குறித்த பெண்மணி வீட்டின் பின்புறத்தில் இருந்த தண்ணீர்க் குழாயில் முகம் கழுவிக் கொண்டிருந்த போது, அருகில் உள்ள தோட்டத்துக்கு ஊடாக வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர் அவரது கழுத்தில் இருந்த தாலிக் கொடியை அறுத்த போது, வலது காதில் இருந்த தோடும் சேர்ந்து அறுபட்டுவிட்டது. தாலிக் கொடியுடன் தப்பிய திருடன் வீட்டில் இருந்த சைக்கிளையும் எடுத்துச் சென்றுவிட்டான். பின்னர் மூத்த விநாயகர் கோயிலின் பின்புறத்திலிருந்து திருடன் எடுத்துச் சென்ற சைக்கிள் மீட்கப்பட்டது.

தோடு அறுக்கப்பட்டதனால் காதில் ஏற்பட்ட காயத்துக்கு ஆயுள்வேத வைத்தியரான பெண்மணி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸில் புகார் செய் யப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். புலன் விசா ரணைக்காக மோப்ப நாயும் வரவழைக்கப்பட்டிருந்தது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (கு-8-23)

## சிவஞானத்துக்கு கட்சிக்குள் எதிர்ப்பு

### "அது அவருடைய தனிப்பட்ட கருத்து. கட்சியின் முடிவு அதுவல்ல"

இந்தியாவுக்கு எதிராக தமிழரசுக் கட்சி போராடாது என்று தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவிதத கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்றும் கட்சியின் முடிவாகாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யும் எண்ணமோ, திட்டமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆறவேயில்லை என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப்பொதுச் செயலாளர் சி.வி.கே சிவ ஞானம் தெரிவிளத்திருந்தார்.

ஜெனிவாப் பிரேரணையை இந்தியா அதரிக்க வேண்டுமென்று கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளதாக வதந்தி வெளியாகியுள்ளதாகவும், அதில் எள்ளளவும் உண்மையில்லையென்று சீ.வி.கே சிவஞானம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் எஸ்.சிவகரன் ஆகியோர், அது அவருடைய தனிப்பட்ட கருத்து என்றும் கட்சியின் முடிவு அதுவல்ல என்றும் தெரிவித்தனர்.

இதே வேளை மேற்படி செய்தியால் தன்னை கட்சியின் உறுப்பினர்கள் பேசியதாக சீ.வி.கே சிவஞானம் உதயனிடம் தெரிவித்தார். (த-5)

## சஜித் மீண்டும் ஐ.தே.க.வின் செயற்குழுவில்

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக சஜித் பிரேமதாஸவை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நியமித்துள்ளார்.

ஐ.தே.க. தலைவர் தனது தீர்மானத்தின்படி 20 செயற்குழு உறுப்பினர்களை நியமிக்க முடியும் என ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி நாளை மறுதினம் திங்கள்கிழமை இடம்பெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்ள முடியும் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (த)

# இன உணர்வுக் கொந்தளிப்பை அடக்க கல்லூரிகளுக்கு விடுமுறை

## தமிழக அரசு நேற்றுத் திடீர் அறிவிப்பு

சென்னை, மார்ச் 16

தமிழகத்தில் அதிகரித்து வரும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான மாணவர் போராட்டங்களை அடுத்து அரச கல்லூரிகளுக்கு காலவரையறையற்ற விடுமுறையை அறிவித்து தமிழக அரசு கல்லூரிகளை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் தமிழகம் முழுவதும் தீவிரமடைந்துள்ளதை அடுத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளுக்கு காலவரையறையற்ற விடுமுறைஅறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையின் போர்க்குற்றம் குறித்து இந்தியா தனிப் பிரேரணை கொண்டுவர வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்திக் கல்லூரி மாணவர்கள் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம், போராட்டம், ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரிப்பு என்பவற்றை நடத்தி வருகின்றனர்.

பல இடங்களில் உண்ணாவிரதம் இருந்து வரும் மாணவர்களின் உடல்நிலை பாதிக்கப்பட்டு வரும் நிலையில் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமிழகம் முழுவதும் மாணவர்களின் போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

இதனிடையே, இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக நாளை மறுதினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த மாணவர்கள் முடிவு செய்திருந்தனர். இதனை அடுத்து, அனைத்து அரச கலை, அறிவியல் கல்லூரிகளுக்கும் காலவரையறையற்ற விடுமுறை அறிவித்து தமிழக அரசு நேற்றுத் திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளது. எனினும் அரசின் அறிவிப்பு மூலம் தங்களின் போராட்டத்தை ஒடுக்க முடியாது என மாணவர்கள் அறிவித்துள்ளனர். (த)

# உண்மையைச் சொன்னால் எதிர்ப்புக்கள் வந்தேயாகும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 16

உண்மையைச் சொன்னால் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும். சமூக நலன்கருதி அந்தந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உதயன் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது முன்னர் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் அண்மைக் காலமாக உதயன், தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டது. செய்தியாளர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவை தொடர்பான விசாரணைகள் எந்த நிலையில் உள்ளன என்று ஊடகவியலாளர்கள் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே கருணாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

**ஊடகப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதனை ஏற்றுக்கொள்கிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதனை ஏற்றுக்கொள்கிறோம். உண்மையைச் சொன்னால் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும். அதற்காக சமூக நலனில் அக்கறை கொள்ளாது இருக்கக் கூடாது. சமூக நலன் கருதி அந்தந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

நேர்மையாகச் செயற்படும் பொலிஸ்காரர்கள் கூட எதிர்ப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். எத்தனையோ பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்-என்றார். (த-4)

## வவுனியாவில் நேற்று காற்றுடன் அடைமழை

காற்றுடன் கூடிய கடும் மழையினால் வவுனியா மாவட்டத்திலுள்ள தற்காலிக வீடுகளின் கூரைகள் நேற்று வெள்ளிக்கிழமை காற்றில் பறந்தன. மக்களின் இயல்பு நிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுத் திடீரென பெய்த மழையினால் வவுனியா மாவட்டத்திலுள்ள ஓமந்தை, சேமமடு, சிதம்பரபுரம், பாரதிபுரம், பூந்தோட்டம், செட்டிக்குளம், பம்பைமடு மற்றும் தவசிக்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள தற்காலிக வீடுகளின் கூரைத் தகரங்கள் காற்றில் பறந்தன. இதனால் அந்த வீடுகளில் வசித்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

சுமார் ஒரு மணி நேரம் காற்றுடன் கூடிய மழையினால் மரங்கள் முறிந்து வீதிகளுக்கு குறுக்கே விழுந்தன. இதனால் சில பகுதிகளுக்கான போக்குவரத்தும் சில மணிநேரம் தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மழையின் அனர்த்தம் காரணமாக எவரும் இடம்பெறவில்லை எனவும் அத்தோடு இது தொடர்பாக எவரும் இதுவரையும் எவ்வித முறைப்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் வவுனியா மாவட்ட அனர்த்த சேவைகள் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ தெரிவித்தார். (த-400-402)

# பிரேரணை வலுவானதாக மாற்றப்படுவது அவசியம்

## சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்தல்

ஜெனிவா, மார்ச் 16

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வலுவானதாக்கப்படவேண்டும் என்று இலங்கையின் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்படவிருக்கின்ற பிரேரணை தொடர்பில் பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தக் கூடியதாக இந்தப் புதிய பிரேரணை அமைய வேண்டும் என்று கோரியுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கை மீதான போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மற்றும் இனப்படுகொலை குறித்த குற்றச்சாட்டு ஆகியவை குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

**இதற்கிடையே இலங்கையில் உள்ளூரைச் சேர்ந்த அமைப்பு ஒன்றும் அமெரிக்கப் பிரேரணை வலுவானதாக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.**

இதேவிடயங்களை வலியுறுத்தியுள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவைகள் என்ற அமைப்பு மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அதன் பாதுகாவலர்கள் இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த தடவை ஜெனிவாவில் இலங்கையில் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்களுக்கு ஓர் அமைச்சரவை உறுப்பினரே அச்சுறுத்தல் விடுத்ததாகவும் இந்தத் தடவையும் அப்படியான நிலைமைகளுக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த அமைப்பின் இயக்குநர் கூறியுள்ளார்.

இதற்கிடையே இலங்கையில் உள்ளூரைச் சேர்ந்த அமைப்பு ஒன்றும் அமெரிக்கப் பிரேரணை வலுவானதாக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கில் பணியாற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கடந்த தடவை வந்த அமெரிக்கப் பிரேரணை இலங்கையில் மனித உரிமைகள் மேம்படுவதில் உரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கூறியுள்ளது.

கடந்த ஆண்டும் பிரேரணை கொண்டுவரப்பட்ட பின்னரும் கூட இலங்கையில் செய்தியாளர்கள் உட்பட பலர் தாக்குதலுக்கு உள்ளாதல் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்வதாகவும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org